# ஞானசம்பந்தம்

மலர் 13] விஜய ஆண்டு மாசி 10—3—54 [இதழ் 4

Mahamahopadhyaya Dr. V. Swaminatha
Library, Adyar, Mad

திருக்கடவூரில் 2—1—51 திருமுறைவிழாவில் எடுக்கப்பெற்ற படம்



[டி. கே. சி. யின் நினைவிற்காக]

ஆசிரியர் : நாகலிங்கத் தம்பிரான்.
உதவி ஆசிரியர்: ச. தண்டபாணி தேசிகர். தருமபுர ஆதீனம்

தருமபுர ஆதீன வெளியீடு.

# திருஞானசம்பந்தர் தேவாரம்

## முதல் திருமுறை

திருப்பனந்தாள் ஸ்ரீ-ல-ஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், குடந்தை ஸ்ரீமத். சங்கராசாரிய சுவாமிகள் அவர்கள் ஆகியோர்களின் மதிப்புரைகள் கொண்டது.

ஆதீனப்புலவர் ச. தண்டபாணி தேசிகர் எழுதிய பாடல்கள்தோறும் குறிப்புரையும், இத்திருமுறையில் வந்துள்ள தலங்களைப்பற்றிய புராணவரலாற்றோடு கூடிய கல்வெட்டு ஆராய்ச்சிக்குறிப்புக்களும் இதில் இடம்பெற்றுள்ளன. அற்புதச்செயல்களைக் காட்டும் படங்களும், கோயிற்படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

டிம்மி 1 x 8 சைஸ். பக்கங்கள் 768.

**விலை விபரம்:**

| | | |
|---|---|---|
| **ராப்பர் பைண்டு:** | ... | ரூ. 3—8—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | | ரூ. 1—5—0 |
| **காலிகோ பைண்டு:** | ... | ரூ. 5—0—0 |
| ரிஜிஸ்டர் தபாற்செலவு | | ரூ. 1—8—0 |

கிடைக்குமிடம்:—

தருமபுர ஆதீன மடாலய தேவாலய
சமயப்பிரசார நிலையம்,
41, ஊஸ்மான்ரோடு,
தியாகராயநகர், சென்னை.

229

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 13] விஜயஸ்ரீ மாசிமீ 10—3—54. [இதழ் 4

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினய் கூடலால வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. —சம்பந்தர்.

## ரசிகமணி அவர்கள்

எதனையும் ரசிப்பது, அதனுடைய பாவங்களை அநுபவிப்பது, கவிஞனின் ஹிருதயத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது, அதில் லயிப்பது இவைகள் ஒரு அலாதியான புண்ணிய அநுபவம். இது எல்லார்க்கும் வந்துவிடாது. "ஆர்த்தசபை நூற்ருெருவர், ஆயிரத்தொன்ரும் புலவர், வார்த்தை பதினயிரத்தொருவர்" என்பது பழம்பாட்டு. சுவைப்பவர்களோ கோடியில் ஒருவர்தாம் இருக்கமுடியும்.

தான் சுவைக்கலாம். ஆனல் பிறரைச்சுவைக்கச் செய்வது பெரியவித்தை. அந்தப்பாட்டைக் கேட்பவர்கள் மனத்திலே பதியவைப்பது அதிலும் பெரியவித்தை. இந்த வித்தையில் கைதேர்ந்தவர்கள் நமது ரசிகமணி அவர்கள். அவர்கள் பேச்சில் ஒரு நாளைக்கு ஒன்றிரண்டு பாட்டுகள்தாம் வரும்.

280



கேட்பவர்கள் மனத்தில் சொல்லெழுத்துக்கள் கல்லெழுத்துக்கள் போலப் பதிந்துவிடும்.

நல்லதையெல்லாம் மனங்குளிரப் பாராட்டும் வழக்கம் இவர்களுக்குச் சிறந்த பண்பு. அறிவும், ஆராய்ச்சியும் உள்ள இடத்திலெல்லாம் இவர்களுக்கு மதிப்பு உண்டு. தமிழுக்கு உள்ள தனிச்சிறப்பை - ஆற்றலை - இன்பநிலையை - கருத்தாழத்தை அயல்நாட்டவர்களும் மதிக்க எடுத்துக் காட்டிய பெருமை இவர்களுக்குத்தான் உண்டு.

கம்பன் கவியமுதம் உண்ட பெருமையால் இருக்கிற போதுமட்டுமல்ல, மறைந்த நாள் முதல் மக்கள் உள்ளமெல்லாம் வியாபித்து அமரத்துவம் பெற்றுவிட்டார்கள். அவர்கள் ஆன்மா சுத்தாத்வைத சித்தாந்த நிரதிசயானந்த இன்ப முத்தியில் திளைப்பதாக, என்று செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளைப் பிரார்த்தித்து இம்மலரைப் பிற்சேர்க்கையுடன் டிகேசி மலராக வெளியிடுகின்றோம்.

---

## குருஞானசம்பந்தர் உபதேச மொழிகள்.

1. ஆலநிழலிலிருந்தும் ஆலமரத்தைத் தேடி அலைவாரைப் போல நின்னடிக்கிழிருந்தும் நின்னைத் தேடி அலைந்தோம்; காட்டுவாரில்லாமையால்,

2. என்கையில் ஞானவாள் இருக்கின்றது. கனவிலும் அஞ்சேன். என்னை யார் என்ன செய்ய முடியும்.

3. காற்று பூமணத்தைத் தாங்கி மணமுடையதானாற் போல இறைவா! உம்மைச் சார்ந்து இன்ப வடிவனானேன். எங்கும் இன்பம். என்றும் இன்பம்.

# கந்தபுராணக் கவிச் சித்திரம்

ச. த.

**சூரன் ஆட்சி :**

தவம் அணுவை மலையாக்குகிறது; உடையவரை அரச பீடத்தில்வைத்து அலங்கரிக்கிறது. இங்கு சூரன்செய்தகடுந் தவம், மாயை காட்டிய உபதேசம் எல்லாம் சூரபன்மாவாகிய வெய்யோனை ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கும் அரசனாக்கி விட்டது. அதனால்அவன் அண்டங்கள் எல்லாவற்றையும் ஆட்சிசெய்துகொண்டிருக்கிறான். அப்போது,

**ஆலின்கீழ் அண்ணல் :**

வேதமே உருவமான ஆலவிருக்ஷம். அதன் ஒரு பக்கத்திலே, சனகாதியர் நீண்டநாள் தவஞ்செய்தார்கள். இறைவன் அருளால் கயிலை அடைந்தார்கள். கோபுரவாயிலைக்குறுகினார்கள். முதற்பெருங் காவலராகிய நந்திபகவான் வருகிறார்.

கீழே விழுந்து வணங்குகின்றார்கள். அவ்வளவுதான். ஆண்டவன் திருமுன்பு அவர்களைக்கொண்டு சேர்க்கிறார் அவர்.

**ஒரே ஆனந்தம் :**

ஆண்டவனைக் கண்டவுடன் அன்பர்களுக்கு வார்த்தை தடுமாறுகிறது. உடம்பெல்லாம் உரோமாஞ்சம். கண்களிலிருந்து தாரை தாரையாக ஆனந்தபாஷ்பம் வழிகிறது. மனம் குழைகிறது. வேதங்கள் நெடுங்காலம் ஓலமிட்டும் அறிய முடியாத ஆதிநாயகனைக் கண்டார்கள்; தொழுதார்கள்; ஒரே மகிழ்ச்சிமயம்; அதனால் தன்னை மறந்து துள்ளினார்கள். என்ன பக்திபரவசம்! நெடுநாளாகக் காதலனைப் பிரிந்திருந்த கற்புடைய நங்கைக்கும் இதேநிலைதான். கடவுளைக் காண வேண்டுமென்று பல்லூழிகாலம் பயின்று அரனை அர்ச்சித்து, கருத்தூன்றிக் கடுந்தவம் புரிந்தார்க்கும் இதேநிலைதான்

282



இதுபற்றிய கச்சியப்ப சிவாசாரியாரின் கவிதையைக் காண்போம்.

மொழியது தவறல்செல்ல முற்றுடல் பொடிப்புக்கொள்ள
விழிபுனல் பெருகத்தீசேர் மெழுகென உள்ளம்விள்ள
அழகிய மறைக்குமெட்டா ஆதி நாயகனை நோக்கித்
தொழுதனர் உவகைபூத்துத் துள்ளினர் துளக்கம்உற்றார்.

(பொடிப்பு - ரோமாஞ்சம்; துளக்கம் - நடுக்கம்)

ஆனந்தசாகரத்தில் மூழ்கிக் கரையேறி அமைதிகண்டவுடன் என்னசெய்யத் தோன்றும்? தோத்தரிக்கத்தானே தோன்றும்; தோத்தரித்தார்கள்.

**அண்ணலே! விண்ணப்பம் :**

கருநிறக்கடல்; புயற்காற்று சுழித்து அடிக்கிறது. கப்பல் ஒளியின்றித் திசைதெரியாது நடுவில் அகப்பட்டுக்கொண்டது. அதிலுள்ளவர்கள் என்னபாடுபடுவார்கள்! அப்படியிருக்கிறது எங்கள் நிலை. வேதங்களை எல்லாம் பலகாலம் ஓதினோம். அதுஎங்களை இங்கும் அங்கும் அலையவைத்ததேயன்றி அமைதிகாட்டவில்லை. இளைத்துப்போனோம். அறியாமைக் கடலிலிருந்து கரையேறும்வண்ணம் அருள்செய்யவேண்டும் என்று வேண்டிக்கொண்டார்கள்.

இருட்பெருங் கடலுள்யாமத் தெறிமருத் திரைப்பட் டாங்கு
பொருட்பெருங் கடலாம்வேதம் புடைதொறு மலைப்பஇந்நாள்
அருட்பெருங் கடலே எய்த்தேம் அமைந்திலதுணர்வு யாங்கள்
மருட்பெருங் கடலினீங்கும் வண்ணமொன் றருடியென்றார்.

'வேண்டுவார் வேண்டுவதே ஈவானும்', 'அன்பு எனும் பிடியுள் அகப்படும் மலையுமாகிய ஆதிநாயகன்; உங்கள் மன அமைதிக்கேற்ற அறிவுநூலை அறிவிப்போம், என்று அருளிச் செய்தார். குருநாதன் வைத்தபடி இருந்து நித்தியவாழ்வை எய்தும் முனிவர்கள் அங்ஙனமே இருந்தனர்.

**அரன்வாயில் ஆணை :**

அன்புடைத் தோன்றலே! அருளுக்கிலக்காகிய நந்தி! யாம்யாரும் அறிதற்கரிய அருமறையின்; உச்சியிற்பழுத்த உயர்சிவஞானபோதச் சித்தாந்தத்தேனை இவர்கள் சிந்தையில் தேக்கத் திருவுளம்கொண்டோம். ஆதலால் மன்மதன் தவிர வேறு யார் வந்தாலும் விடாதே என்று உத்தரவு இட்டார். நந்தி அந்தமாதிரியே காவல்காத்து வருகிறார். சிவபெருமான் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டுகிறார்.

சனகாதியர்கள் அவனேதானேயாகியநெறியில் அசைவற்று இருக்கின்றார்கள். தியானப்பொருளாகிய குருநாதனும் தியானிப்பவர்களாகிய தாங்களும் வேறன்றி ஒன்றேயாம் நிலையில் இருக்கின்றார்கள். இதனைக் கச்சியப்பசிவம் காட்டுகின்றது பாருங்கள்! மனம் செத்த மகரிஷிகள் மஹேஸ்வரனாகிய குருநாதனையே தியானிக்கின்றார்கள். பேச்சில்லை; மூச்சில்லை. என்றுசித்திரப்பாவையைப்போல

தத்தமுள் ஒடுங்கப்பெற்ற தாபதகணத்தர் யாரும்
முத்தொழில் புரியும்மூவா முதல்வனும் முக்கண்மூர்த்தி
மெய்த்தவ வடிவம்முன்னி மேவினர் சூழ்ச்சிமேலோன்
சித்திரம் புணர்த்தபாவை செயலற விருக்குமாபோல்.

இறைவனுக்கு ஒருகணந்தான் ஆயிற்று. தேவர்களுக்கோ பலயுகங்களாகிவிட்டன. மனிதர்களாகிய நமக்கோ பல கோடி சதுர்யுகங்கள் ஆகிவிட்டன. ஏற்கனவே அம்மை விளையாட்டாக இறைவனுடைய திருக்கண்களைப் புதைத்த காலத்து என்ன நிலைகள் உண்டாயினவோ அவை இன்றும் விளைந்தன.

**அவனன்றி ஓர் அணுவும் அசையாது :**

அவ்வளவுதான். கடவுள் யோகத்திலிருக்கிறார். உலகத்தில் என்ன நடக்கும்? காளையரும் கன்னியரும் கடிமணம்

புரிந்துகொண்டார்கள். அரம்பையரும் இந்திரனும் அளவளாவிக்கொண்டிருக்கின்றனர். என்னபயன்? எல்லாம் பொம்மைக் கல்யாணமும் பொம்மலாட்டமுமாகவே இருக்கின்றன. காமமில்லை; கலப்பும் இல்லை.

தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெருநம்பித்தன் காணேடி
பெண்பா லுகந்திலனேற் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி விடுவர்காண் சாழலோ.

இப்படி சிவன் யோகத்திலிருக்க உயிர்களும் யோகத்தில் இருந்தன. இதனாலே என்னதெரிகிறது உங்களுக்கு? 'அகிலமெல்லாம் அவன் என்கை தானே.



**யோகியாயிருந்து உயிர்க்கு யோகத்தைப் புரிதல்:**

இதனாலே உலகத்துப் பிறப்பே ஒழிந்தது. ஆடிமாதம் தலைமழை பெய்[illegible]து. தண்ணீரும் வந்தது. சேற்றைக் குழப்பி நட்டுவிட்டோம். [illegible]ரும் பச்சைகொள்கிறது. அப்போது மேல்மழையுமில்லை; கீழ்த்தண்ணீரும் இல்லை. ஊரல் சாரலைக் கொண்டு பஞ்சத்திலடிபட்ட குழந்தைகள்மாதிரி பயிர்கள்

வளர்ந்தன. தொண்டைக்கதிர்; கதிரை வெளியே தள்ளக்கூட அந்தப்பயிர்களுக்குச் சீவன் இல்லை. வயல் வெடிக்குங் காய்ச்சல். அப்படியே பயிர்கள் தீய்ந்துபோயின. அது போலவே ஆண்களும் பெண்களும் இருக்கிறார்கள். கரு வளர்ச்சி இல்லை. பஞ்சத்தைப் பசிபார்க்கிறதா? அதுபோல காலதேவன் கன்மம்முற்றிய உயிர்களைக் கொண்டுபோகிறான். உயிர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டேவருகிறது. இதைக் கவிதையில் காணுங்கள்.

**சாலிகள் வளருமெல்லை தடம்புனல் வறுமைத்தாக**
**வாலிது குரல்வாங்காது வருத்தொடு மாய்வதேபோல்**
**மேலவ னருளாற்போகம் வெறுத்தலிற் கருமல்கின்றி**
**ஞாலமன் னுயிர்கள்முற்றும் நாடொறுங் குறைந்தவன்றே.**

சூரனுடைய கொடுங்கோன்மையால் தேவலோகம் அல்லோலகல்லோலப்பட்டது. துன்பத்திற்குத் துணையாகும் தோன்றாத்துணைநாதரைக் காணலாம் என்று இந்திரன் கயிலைக்குச் சென்றான். என்னபயன்? திரும்பவேண்டியது தானே! மன்மதனைத்தவிர வேறுயாரையும் விடலாகாது என்றுதான் உத்திரவு ஆயிற்றே.

**இந்திரன் தவம்:**

மேருமலையின் ஒரு பக்கத்திலே தன்மகனை இழந்து - அரசை இழந்து வருந்துகின்ற இந்திரன் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் செய்கிறான். இறைவன் இடபாரூடராகச் செல்கிறார். கண்டு வணங்குகிறான்; தான்படுங் கஷ்டங்களை விண்ணப்பிக்கிறான். அப்போது, இறைவன் அருளிச்செய் கிறார்! "செய்தீவினை இருக்க தெய்வத்தை நொந்தென்ன? கடவுள்நிந்தகனான தக்ஷன் யாகத்திற்குச் சென்ற பாவம் உங்களை வாட்டுகிறது. பாவக்கழிவு நிகழ்ந்தபோது நற்காலம் கிட்டும் எமது இளையகுமாரன் கலியுகவரதன் கந்தன் உங்களைக்காப்பான்" என்று அருளினார்.

286

# மதிப்புரை

**திருமந்திர மாநாட்டு மலர்:**

வெளியிட்டோர்:- திருவாவடுதுறை ஆதீனம். 1954 வெளியீடு எண் 78, பக்கங்கள் 60.

இவ்வாண்டின் தொடக்கத்தில் திருவாவடுதுறையில் புதிதாக அமைக்கப்பெற்ற திருமந்திர மன்றத்தில், என்றும் எங்கும் எவரும் நடத்தியிராதபடி மிகச்சிறந்த முறையில், திருவாவடுதுறை ஆதீனம் 21-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் திருவுள்ளப்பாங்கின்படி நிகழ்ந்த திருமந்திர மாநாட்டின் நிகழ்ச்சிகளடங்கிய மலர் ஒன்று உலகிற்குக் கிடைத்திருக்கிறது

இம்மலர் உயரிய தாளில் அழகிய பதிப்பாக கண்ணையும் கருத்தையும் கவர்ந்து பிணிக்கும் தெய்வீகப் படங்களுடன் வெளியிடப்பெற்றிருத்தல் மிகப் போற்றத்தக்கது. ஆதீனத்து இலவச வெளியீடுகளும் இவ்வாறே பதிப்பிக்கப்பெறுகின்றன. இவ்வுண்மையைப் பலரும் அறிவர். அவற்றைப்போல் இம் மலரையும் அறிஞரெல்லாரும் ஆர்வத்தோடு வரவேற்றுப் படித்துப் போற்றுவர் என்பதில்ஐயமில்லை. இம்மலரின் முதலி லுள்ள திருவுருவப்படம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களது குருபக்தியின் மெய்மையைக் காட்டும் திருவுருவமும் ஆதி குரவராகிய ஸ்ரீ பஞ்சாக்கரதேசிக மூர்த்திகளது சின்முத்திரை யோடுகூடிய திருவுருவமும் இம்மலரைப் பெற்றோரடையும் தலைமைப்பேறுகும். பூசித்தற்குரியதாக அன்பர் பலர் இதனை மேற்கொண்டு பயனடைவார்களாக.

திருவாவடுதுறைச் சிறப்புக்களை யெல்லாம் ஓரளவுசுருக்கிக் குறித்துத் திருக்கோயில் தோற்றத்தோடும் அளித்திருப்பது மிக முக்கியமானது. துறைசை மடாலய முகப்பின் தோற்றமும், வரலாற்றுச் சுருக்கமும், மடங்களின் தோற்றமும், செய்துவரும் உதவிகளும், துறைசைக் குருபரம்பரையும் விளக்கப் பெற்றுள்ளன.

மேலைத்தோட்டத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற திருமந்திர மன்றத்தின் மாநாட்டு அலங்காரப் பந்தலின் சிறப்பு மிக்ககாட்சி நிகழ்ச்சிகளின் முதற்பக்கத்தில் அமைந்திருக்கின்றது. மாநாட்டின்மூன்று நாள் நிகழ்ச்சிகளும் திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களையும் பற்றிய அறிஞர் பலர் சொற்பொழிவுகளும் காணப்படுகின்றன. அம்மாநாடு அளவிலாச்சிறப்புடன் நடந்த உண்மையை கண்ணாற்கண்டும் கருத்தால் நினைந்தும் அநுபவிக்காதவர்கள் இம்மலரால் ஓரளவு ஊகித்தறிந்துகொள்ள இறுதியிலுள்ள 10 பக்கங்களும் துணை செய்யும்.

# பக்தியிருந்தால்தான் கல்வி வளரும்

**கனம் ஸ்ரீ இராஜாஜி அவர்கள்**

பக்தி என்கிற விதை செடியாகவும், பிறகு பெரிய மரமாகவும் வளரவேண்டும். பட்டணங்களில் கசாப்புக் கடையுமிருக்கிறது, கோயிலுமிருக்கிறது. பட்டணங்களில் எல்லாவித மனப்பான்மைகளுமிருக்கின்றன. ஆனால் கோவில் கெட்டுப்போவதில்லை. எனவே பக்தியை வளர்த்து நல்ல உள்ளத்தோடு சுத்தமான மனதோடு நாம் வாழவேண்டும்.

பக்தியும் கல்வியும் கூடவே வளர்கின்றன. சீக்கிரம் அழியாமல் நிரந்தரமாக ஒரு நூல் அல்லது பாட்டு இருக்க வேண்டுமானால் பக்தியோடு அது கலந்து இருக்கவேண்டும். உதாரணமாக சினிமாப் பாட்டுகள் எவ்வளவோ நீங்கள் பாடிக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால் அவை சீக்கிரத்தில் மறைந்துவிடுகின்றன. ஸ்ரீ தியாகராஜஸ்வாமி ஸ்ரீ இராம பிரானைப்பற்றிப் பாடியுள்ள பாட்டுக்கள் வெகுகாலமாக இருந்துவருகின்றன. ஆகவே பக்தியோடு கல்வி சேர்ந்தாற் போல் இருந்தால் நாம் நல்ல குணத்தோடு வாழலாம்.

மனது ஒரு குரங்கைவிடக் கெட்டது. இப்படித்தான் பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். மனதிற்கு நம்மை விடக் காவல் யாரும் கிடையாது. ஆகவே நம் உள்ளத்தைத் தினமும் ஓரளவு ரிப்பேர்செய்யவேண்டும். மனது அழுக்காய் விட்டால் ஆண்டவன் அதில் எப்படி இருக்கமுடியும்? ஆகவே காலையில் எழுந்திருக்கும்போதும், படுக்கப் போகும்போதும் தினந்தோறும் உள்ளத்தில் ஆண்டவன் இருப்பதற்கு அந்தக் கோயிலை சுத்தம் செய்யவேண்டும். தினசரி 10 நிமிஷம் இதற்கு செலவு செய்யவேண்டும். நம் உள்ளத்தில் வந்து உட்கார ஆண்டவன் ஆசைப்படுகிறான். நம் உள்ளத்திலுள்ள அழுக்கைத்துடைக்க அவன் காத்துக்கொண்டிருக்கிறான்.

ஆண்டவன் கருணைஸ்வரூபம். அதனால்தான் லட்சுமி, பார்வதிபோன்று தாய் ஸ்வரூபத்தை ஆண்டவனுக்குக் கொடுக்கிறோம். கோயிலைச் சுத்தம் செய்வதுபோல் நம் மனதைச் சுத்தம் செய்யவேண்டும். தினசரி இரண்டுநிமிஷம் ஆண்டவனை நினைத்தால் நமது கெட்ட எண்ணம் மறைந்து போய் உள்ளம் தூய்மைபடும். இதற்காகத்தான் பழைய காலத்தில் பிரார்த்தனைவைத்தார்கள். மனதிலுள்ள அழுக்கையெல்லாம் பிரார்த்தனை துடைத்து பரிசுத்தமாக்கிவிடும்.

---


## "ஞானசம்பந்தம்"

### அரிய கட்டுரைகளுடன் வெளிவரும் திங்கள் வெளியீடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனத்திலிருந்து வெளிவருவது. சைவசமயச் சார்பாக எழுதப்படும் தெளிவான கட்டுரைகள் அடங்கியது. சைவசமயத்தின் உண்மைகளை உணர்வதற்குப் பெருந்துணையாவது.

**ஆண்டுக் கையொப்பம் ரூ. 1—8—0**

இவ்விதழ் ஒவ்வொரு ஆங்கிலமீ 10உ வெளிவரும்.

ஆண்டுக் கையொப்பத் தொகையை முன்னரே செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

ஆண்டினிடையிலே சேருவோருக்குச் சேர்ந்த மாதத்திலிருந்து ஓராண்டுக்கு அவர்களின் கையொப்பத்தொகை கணக்கு வைத்துக்கொள்ளப்படும்.

**செயலாளர்,**
**"ஞானசம்பந்தம்" காரியாலயம்**
தருமபுரம், மாயூரம் P. O.

# ஆன்மா

புலவர், திரு. முத்து. சு. மாணிக்கவாசக முதலியார்
தமிழ்ப்பேராசிரியர், பல்கலைக்கல்லூரி, தருமபுரம்

(முன் தொடர்ச்சி)

இக்கட்டுரையுள், ஆன்மாவைப்பற்றிய பிறமதத்தர் கொள்கைகளும் அவற்றின் பொருந்தாமையும் எழுதப்பட்டுள்ளன.

## 1. பரிணாமவாதிகள் கொள்கை:

சீவான்மாக்கள் பிரமத்தின் பரிணாமம். அறிவு, விருப்பம், செயல்களை உடையவை, தீயும் சூடும் போலப் பேதாபேதம் ஆகிய குணமும் குணியுமாம் தன்மையுற்றவை. தீயைப்போலக் குணியாம் தன்மையும் சூட்டைப்போலக் குணமும் உள்ளவை. குணம்வேறு குணிவேறாக நோக்கின் பேதமாம். குணகுணிக்குப் பேதம் பாராட்டாமல் அபேதமாக் கொள்வதும் உண்டு. அதனால் பேதாபேதம் எனப் பட்டது. அச்சீவான்மாக்கள் பலவேறுவகைப்பட்டு நிற்கும்.

**சைவசித்தாந்தி மறுப்பு:**

கருவிகள் இல்லையானால் அறியமாட்டாத சீவான்மாவுக்குப் பரிணாமம், பேதாபேதம், குணகுணிபாவம், நானாவிதம் ஆதல் ஆகியவை எவ்வாறு சித்திக்கும்?

## 2. (அ) சாங்கியர் கொள்கை:

குணகுணிபாவம் இல்லாமல், கேவலம் அறிவுமாத்திரையாய் நிற்பது உயிரின் இயற்கை. அவ்வுயிரின் சந்நிதியில் உடம்பின்கண்நின்று கரணங்கள் தொழிற்படும். அதனால் தொழிலும் அறிவும் விருப்பமும் அவ்வுடம்பில் நிகழும்.

**சைவசித்தாந்தி மறுப்பு:**

சாங்கியர் குறித்த சந்நிதி பிணத்திலும் உண்டு; உறக்கத்திலும் உண்டு. பிணமாக்கிடப்பது உடம்பு. உயிரின் சந்நிதிக்கு அழிவில்லை. உயிர் அழியாதது. அதன் சந்நிதியும் அழியாதது. உறக்கத்திலும் உயிரின் சந்நிதிக்குக் கேடில்லை. சந்நிதி கெடாதிருந்தும் பிணத்திலும் உறக்கத்திலும் கரணங்களின் தொழிற்பாடும் தொழிலறிவு விருப்பங்களும் உடம்பில் நிகழக் கண்டிலம். அதனால், சாங்கியர் சொல்லுமாறு, சந்நிதி மாத்திரையால் அவை நிகழா.

## (ஆ) சாங்கியர் கொள்கை:

வியாபகமாய்நிற்கப்பெறுவது ஒன்றே சந்நிதி அன்று. உயிர் அழியாமல் வியாபகமாய் நிற்பதுபற்றிச் சந்நிதிக்குக் கேடில்லை எனலாகாது. காந்தத்தின்முன் இரும்புபோல உயிரின்முன் உடம்பு தொழிற்படுதற்கு ஏதுவாகிய ஒரு குண விசேடம் சந்நிதி. அத்தகைய சந்நிதியைக் கொண்டால் குற்றம் உண்டாகாது.

**சைவசித்தாந்தி மறுப்பு:**

ஒரு குணம் ஒரு தொழிலே செய்தற்குரியது. தம்முள் மாறுபட்ட–பல தொழில்களைச் செய்தல் பொருந்தாது. நினைப்பு, மறப்பு, ஓட்டம், இருப்பு, கிடக்கை, நிலை முதலிய மாறுபட்ட தொழில்கள் எல்லாம் ஒரு குணத்தால் ஆவன அல்ல. காந்தம் இரும்பை இழுத்தல் ஒன்றே செய்யும். அகற்றமாட்டாது. சேர்த்தலும் பிரித்தலுமாகிய மாறுபட்ட தொழில்களைக் காந்தம் செய்யாது.

## 3. (அ) பௌராணிகர் கொள்கை:

உயிர் உருவத்தையுடைய பொருள். அஃதாவது, உயிர்க்கு இவ்வுடம்பல்லாத வேறு சொந்தவுருவம் உண்டு.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

உயிர் பரிணமித்து அழியாது, காட்சிக்குப் புலனாகாது. பரிணமித்தழிதலும் காட்சிப்புலனாதலும் இல்லாத உயிர், பரிணமித்தழியும் இயல்பும் காட்சிக்குப் புலனாகும் இயல்பும் உடைய பூதங்களுக்கு ஒப்பாக உருவுடையது என்பது பொருந்தாது. உயிர் உருவுடையதானால், இவ்வுடம்பிற்குள் வேறு ஒரு வடிவம் காணவேண்டும். உருவமுடைய எல்லாம் காட்சிக்குப் புலப்படும்; பரிணாமம் அடையும்; அழியும். உயிர் உருவுடையதானால் கருவில் நுழையும்படியும் காட்டல் வேண்டும். கண்ணுக்குப் புலப்படாத உருவம் உடைய தென்றால், அதை வாயால் உருவம் உடையது அன்று என்றே சொல்லிவிடல் நன்று.

## (ஆ) பௌராணிகர் கொள்கை :

பூதம்போலக் காட்சிக்குப் புலனாகக்கூடிய தூலவுருவ மாகாமல், சூக்கும உருவாய் நிற்பது உயிர்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

தூலவுருவத்தைத் தோற்றுவிக்கும் உடம்பு புரியட்டக தேகம். அதுவும் சடம். சித்தன்று ! சூக்கும உருவாய் நிற்பது உயிர் என்றால் உயிர் சடம் எனப்படும்.

## (இ) பௌராணிகர் கொள்கை :

அப்புரியட்டக தேகத்தின் உள்ளே அதிசூக்கும ரூபமாய் இருப்பது உயிர்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

கலை முதல் பிருதிவி முடிய உள்ள தத்துவங்களாலான பரதேகமே புரியட்டக தேகத்தின் உள்ளே இருக்கின்றது. அப்பரதேகமும் சித்தன்று. அசித்தாதலும் அசத்தாதலும் உருவங்களுக்கெல்லாம் நிச்சயமாயுண்டு. அவ்வாறு ஆகாமல் சித்தும் சத்துமாயுள்ள உயிர் உருவப்பொருளாகாது.

292



## 4. (அ) கவுளர் கொள்கை :

உயிர் அருவுருவப்பொருள். அஃதாவது, உருவமும் அன்று. அருவமும் அன்று. உருவமும் அருவமும் கூடியது. விறகும் தீயும்போல அருவுருவப்பொருள்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

ஒன்று பிறிதொன்றாகாது. மறுதலைப்பட்ட இரண்டு தன்மை ஒரு பொருளில் இல்லை. விறகும் நெருப்பும் தம்முள் வேறு. அவ்வுவமை இங்குப் பொருந்தாது. விறகு உருவம். தீ அருவுருவம். இரண்டுங்கலந்த நிலையில் அருவுருவம் உண்டு என்று காட்டினால், உயிரிடத்திலும் இரண்டு பொருளின் கலப்பு உண்டு என்று காட்டவேண்டும். உயிரை அருவுருவப் பொருள் என்றதன்மேலும், அதனிடத்தில் கலந்துள்ள இரண்டு பொருளுக்கும் உருவாராய்ச்சி நிகழும் அவ்வசப்பா விதத்தால், கவுளர் கொள்கை பொருந்தாது.

## (ஆ) கவுளர் கொள்கை :

தலையுவா (அமாவாசி) நாளில் **அருவாய்** நின்றே பின் முறை முறையால் வளர்ந்து, பூரணையில் தூல**வுருவாய்** விளங்குகின்றது மதி. அம்மதியினிடத்தில் அருவும் உருவும் காண்கின்றோம். அதுபோல உயிரும் அருவாய்நின்றே கருவுள் பதிந்து, முறை முறையால் வளர்ந்து, இவ்வுடம்பாகிய உருவாய்த் தோன்றுகின்றது. அதனால், உயிர் அருவுருவே ஆகும்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

உயிர் சித்து. சடமன்று; நித்தியம் (அழியாதது) அநித்தியமன்று; பந்தத்திற்பட்டு நீங்குவது. அத்தகைய உயிர் அருவுரு ஆனால், அசித்து (சடம்) ஆம். பூதகாரியமாம். உடம்புருவமெல்லாம் பூதங்களின் காரியங்களே. பந்தத்திற் படுவதாகாமல் பந்தமாம். பந்தம் உடம்பு. பந்தத்திற்பட்டு நீங்குவது உயிர். பூதகாரியம் உடம்பு. அவ்வுடம்பிற்பொருந்தி

நீங்குவது உயிர். உருவாயினும் அருவுருவாயினும் கண்ணிற்குப் புலப்படும். படாமையால், உயிர் அருவுருவுமன்று. உடம்புருவமுமன்று.

## 5. பாதஞ்சலர் கொள்கை:

ஆகாயம், அருவம், விகாரப்படாதது. அதுபோல அருவாய் அவிகாரியாய் நிற்பது உயிர்

**சைவசித்தாந்தி மறுப்பு:**

உடம்பைக் கட்டுவது, ஆட்டுவது, ஓட்டுவது (போக்கு), மீட்டும் உலாவுவது (வரத்து), நிறுத்துவது, இருத்துவது, கிடத்துவது, மண்ணிற் புரட்டுவது முதலிய பல விகாரங்களைச்செய்யக் கண்கூடாகக் காண்கின்றோம். அவ்விகாரங்களைச் செய்வது யாது? உயிரோ? அன்றோ? உயிராயின் அவிகாரி ஆதல் எவ்வாறு? காட்சியளவையால் (பிரத்தியட்ச பிரமாணத்தால்) உடம்பில் நிகழும் நிகழ்ச்சிபற்றி அது பொருந்தாது என்று தெளியப்படும்.

## 6. வைசேடிகர் கொள்கை:

உயிர் சடம், அது பின்பு மனத்தொடு கூடிச் சித்தாகி அறியும், மனத்தொடுங் கூடுதற்கு முன் சடமே, சித்தன்று, அறியமாட்டாது.

**சைவசித்தாந்தி மறுப்பு:**

அசித்து ஆன்மா என்றால் அறியமாட்டாது. அசித்து சித்தாகும் என்பது உலகத்தில் இல்லாத விந்தை. சடப்பொருள் சித்தாகாது. சித்துப்பொருள் சடமாகாது.

## 7. சைவரில் ஒருசாரார் கூற்று:

உயிர், சித்தும் அசத்துமாகிய இரண்டு தன்மையும் ஒருங்கு கூடியது.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

சித்தும் அசித்தும் ஒன்றற்கொன்று மாறுபட்ட தன்மைகள்; ஒளியும் இருளும்போல. அவையிரண்டும் ஒருங்கு நில்லா.

## 8. பட்டாசாரியர் கூற்று :

உயிர் சித்தேயாகும்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

அசித்தாகிய கருவியை அடைந்தால்தான் உயிர்க்கு அறிவு நிகழ்கின்றது. உயிர், சித்தேயானால், கருவியை அடைவதன் முன்னேயும் அறிதல் வேண்டும். அப்பொழுது அறிய மாட்டாமையால் சித்தே எனல் அமையாது.

## 9. பாஞ்சராத்திரிகள் கூற்று :

உடம்பினுள்ளே பரமாணுவின் அளவுடையதாகி நிற்பது உயிர்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

உயிர் அணுவளவானால் உடம்பில் உள்ள பல துவாரங்களுள் ஒன்றன் வழியால் ஓடிப்போய்விடும். அங்கனம் போகவில்லை. உடம்பில் கட்டுண்டும் சுமைதாங்கியும் இருக்க உடம்படாது. இன்னும் இவைபோல நிகழ இடங்கொடாது, உயிரை அணுவளவு என்று இசையின் இத்தகைய குற்றங்கள் பல உள்ளன.

## 10. மிருதி நூலார் கொள்கை :

உயிரானது உடம்பினுள்ளே புல்லின் நுனியில் தங்கும் பனித்துளிபோல் ஏகதேசமாய், இருதயத்தில் நிற்கும். அவ்வுயிரின் அறிவுவிளக்கின் ஒளிபோல எங்கும் வியாபிக்கும்.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

உயிர் ஏகதேசமானால், பௌராணிகர் (கவுளர், பாதஞ்சலர்) கொள்கையை மறுத்தற்கு உற்ற குற்றம் எல்லாம் நேரும். குணமானது குணியின் அளவைக் கடவாது

விளக்கினது சூக்கும ரூபமே விளக்கொளி. விளக்கொளியைக் குணமாக் கொள்ளலாகாது. அவ்வுவமை இங்குப் பொருந் தாது. பொருத்தினும் மிக்க வேறுபாடுண்டு. அஃதாவது உயிர் ஏகதேசம். ஆனால், உருவாகி மாய்ந்துபோம். உயிர் மாய்வதில்லை. அறிவுக்கு அழிவில்லை. சித்தாகிய உயிர் ஏகதேசமானால், உருவாய் அசித்தாய் முடியும். விளக்கின் சுடர் தொட்டால் அன்றிச் சுடாது. இருந்த இடத்தில் அறிந்து, மற்ற இடத்தில் பரிசத்தாலும் அறியமாட்டாது. உயிரோ பரிசித்த இடமெங்கும் அறியும் தன்மையது. விளக்கு ஓரிடத்திலிருந்து, மற்றையிடங்களையும் விளக்கும். அவ்வாறு உயிரின் அறிவு ஐம்புலனிடத்தும் ஒருங்கே நிகழ் தல் வேண்டும். அப்படி நிகழவில்லை. அக்காரணங்களால் மிருதி நூலார் கொள்கை பொருந்தாது.

## 11. சமணர் கொள்கை:

உயிரானது, உடம்பின் அளவைப் பொறுத்தது. உடம்பு முழுதும் நிறைந்து நின்று உணர்வது.

**சைவசித்தாந்தி மறுப்பு:**

உயிர் உடம்பு முழுதும் நிறைந்து நிற்பதானால் உறக் கத்தை அடைதலாகாது. உடலில் ஓரிடத்தில் உயிர் இளைப் பாறத் தங்குவதே உறக்கம் வருதற்குக் காரணம். ஐம்பொறி களிலும் ஒருசேர அறிவு நிகழ்வதில்லை. உடல் முழுதும் இருந்தால் ஒருசேர நிகழத் தடை ஏது? பெரிய உடலுக்குத் தக்க பேரறிவும் சிறிய உடலுக்குத்தக்க சிற்றறிவும் ஆதல் உண்டோ? உடலையேனும் ஒவ்வோர் உறுப்பையேனும் குறைக்கக் குறைக்க அறிவும் குறைந்து, உடலொழியும் போது அறிவும் ஒழிதல் வேண்டும், யானைக்குப் பேரறிவும் எறும்புக்குச் சிற்றறிவும் ஆகும். (சித்தியார்பரபக்கம் பா. 157 இருபா இருபஃது 6 பார்க்க) இத்தகைய பல குற்றங்களை நோக்கின், சமணர் உரைக்கும் உயிரிலக்கணம் பொருந்தாது.

## 12 (அ) ஐக்கியவாதிகள் கொள்கை:

ஆன்மா, கடவுளைப்போல எங்கும் வியாபியாய் நின்று அறியும் இயல்புடையது.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

ஆன்மாக்கள் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம் (ஜாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம்) ஆகிய ஐந்து அவத்தைகளை அடைகின்றன. அடையும்போது வியாபகம் ஏது? சுவர்க்க நரக பூமி யாத்திரையைச் செய்கின்றது. செய்யும்போது ஓரிடத்தில் இருந்தால் ஏனையிடத்தில் இல்லை. அது வியாபகம் ஆமோ? முதல்வனது வியாபகம் இப்படியோ? ஐம்புலனையும் ஒருசேர அறியாதது ஏன்? வியாபகம் ஒழிந்து உடம்பினுள் ஏகதேச மாய் நிற்றல் யாங்ஙனம்?

## (ஆ) ஐக்கியவாதிகள் கொள்கை :

உயிரானது எங்கும் வியாபகமாய் நின்று அறிவ தாலும், மாயையின் காரியமான உடம்பு முதலியவை அவ்வறிவைத் தடைசெய்து நிற்கின்றன. அத்தடையால் உறக்கம் முதலியன அடைந்து உயிர் ஏகதேசப்படுவதாயிற்று.

**சைவசித்தாந்தி மறுப்பு :**

மாயாகாரியம் உயிர்க்கு அறிவு விளங்குவதற்கு ஏது வானது. அதற்கு விரோதமாகத் தடைசெய்தல் கூடாது. முன் சுத்தமாயிருந்த உயிரை அம்மாயா காரியம் பந்தித்தது என்றால், முத்தியை அடைந்த பின்பும் அது பந்திக்கலாமே! அங்கும் பந்தித்தால் முத்தி என்றும் ஒன்று உண்டோ? முத்தியைப் பெற்ற பின்பு அடையாது என்றால், அநாதி நிலைக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை. இல்லாமையால், அநாதியே பந்தம் அடையவேண்டா. அநாதியே முத்தனாய் விளங்குதல்வேண்டும்.

சித்தியார் சுபக்கம் 209, 208 உரை விசேடத்தில் உள்ள மறுப்பும் உணரத்தக்கது. ஆன்மாவிலக்கணம் சைவ சித்தாந்தம் உணர்த்தும் முறையில் அடுத்த கட்டுரையில் எழுதப்படும்.

# திருப்பாட்டின் திறன்

வித்துவான், திரு. கண்ணப்ப முதலியார், பாலூர்.

(தொடர்ச்சி)

திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தபோது அவ்வெல்லையைவிட்டுப் பிரிவதில்லை எனச் சத்தியம் செய்தவர், திருவாரூர் நினைவு வந்தபோது அச்சத்தியம்மீறிப் புறப்பட இறைவர் அவர் திருக்கண் பார்வையை மறையச்செய்தார். அதனால், கோபங்கொண்டு ஒற்றியீசனை "மகத்தில் புக்கதோர் சனியனே" என்று வைது, உடனே "மைந்தனே மணியே மணவாளா" என்று புகழ்ந்து "நான் முகத்தில் கண் இழந்து எங்ஙனம் வாழ்வேன். நீ மூன்று கண்ணோடு இருக்கின்றனையே, உன் அடியன் இருகண்களை இழந்து வாடுதல் முறையோ? மேலும் வீட்டில் இளம் பெண்டிர்க்கு வேலையிட்டால் குருடா கூப்பிடாதே என்று கூறினால் நான் என் செய்வேன்" என்றெல்லாம் பொருள்படும்படி,

"மகத்திற் புக்கதோர் சனியெனக் கானாய்;
மைந்தனே! மணியே! மணவாளா!
அகத்திற் பெண்டுகள் நானென்று சொன்னால்
''அழையேல்போ குருடா'' யெனத்தரியேன்
முகத்தில் கண்ணிழந் தெங்ஙனம் வாழ்வேன்?
முக்கணா! முறையோ? மறையோதீ!
உகைக்கும் தண்கடல் ஓதம் வந்துலவும்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே"

என்று உள்ளங்சிந்து பாடினார். நயத்துக்குச் சுந்தரனார் என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ?

இறைவனை ஏசல் முறையில் தோழமை உரிமையாய் பாடுந் திறனையும் இனிக் காட்டுவோமாக.

சுந்தரர், சேரர்பெருமான் ஈந்த செல்வங்களைப் பெற்று வருகையில் திருமுருகன் பூண்டி இறைவர், பூதகணங்களை

298



ஏவிப் பொருள்களைக் கவர்ந்துவரப் பணித்தார். அவைகளும் அவ்வாறே செய்தன. அப்பொழுது சுந்தரர், நீர் இவ்வூரில் ஏன் குடியாக இருக்கின்றீர். வழிப்பறிகொள்ளை செய்வாரைத் தடுக்கக்கூடாதோ" நீர் என்ன கால்அற்ற முடவனோ? அன்றி உடல் நலம் அற்ற நோயாளியோ? அப்படி இருந்தாலும் உம் ஊர்தியாகிய இடபத்தின்மீதேனும் வந்து தடுக்கக் கூடாதோ என்று பாடிய பாட்டே.

"படவரவு நுண்ணேர் இடைப்பணைத்தோள் வரிநெடுங்கண்
மடவரலுமை நங்கைதன்னை யோர்பாகம் வைத்துகந்தீர்,
முடவரல்லீர் இடரிலீர் முருகன்பூண்டி மாநகர்வாய்
இடவமே றியும்போவதாகில்நீர் எத்துக்கிங்கிருந்தீர்எம்பிரானிரே"

என்பது.

இதுபோலவே திருவொற்றியூரில் இழந்த கண் பார்வையில், ஒன்றைத் திருவேகம்பத்தில் பெற்றபின் திருவாரூருக்குச் சென்று மற்றொரு கண் பார்வையும் வேண்டும்போது, ஏசல் முறையில்.

"விற்றுக்கொள்வீர் ஒற்றிஅல்லேன் விரும்பி ஆட்பட்டேன்
குற்றம்ஒன்றும் செய்ததில்லை கொத்தை ஆக்கினீர்
ஏற்றுக்கடிகேள்? என்கண் கொண்டீர்; நீரேபழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால் வாழ்ந்துபோதீரே;

"என்னை விரும்பி ஆட்கொண்டீர். நான் குற்றம் ஒன்றும் செய்யவில்லை, அப்படி இருந்தும் என் கண்ணைக் கொத்தையாக்கினீர், அதனால். உமக்குத்தான் பழியே அன்றி, எனக்கு ஒன்றும் இல்லை. இனியாகிலும் நீர்சுகமாக மனைவிமக்களோடு வாழ்க என்று வாழ்த்துவதுபோல ஏசுகின்றார் அன்றோ?

சுந்தரர் திருப்பாட்டில் உபதேசத்திறன் பலபட விரிந்து காணப்படுகிறது. மக்கட்கு எந்தெந்தமுறையில் அறிவுறுத்த வேண்டுமோ அவ்வம்முறையில் அறிவுறுத்திச்சென்றுள்ளார். அரசர்க்கும் அறவுரை மொழிந்துள்ளார்.

பொதுமக்கட்கும் பொன்னுரை புகன்றுள்ளார். அவ்வறவுரையும் பொன்னுரையும் பொதுவில் மக்கள் உணர்ந்து தம் எண்ணத்தை இறையடி கருதுதற்கு ஏதுவாகும்.
அரசர்க்குப் புகன்ற அறவுரைகள்.

"மத்தயானை ஏறி மன்னர் சூழவருவீர்காள்!
செத்தபோதில் ஆரும்இல்லை சிந்தையுள் வைம்மின்காள்"

என்பது அரசருக்குப் புகன்ற அறிவுரைகள்.

'தோற்றம் உண்டேல் மரணம் உண்டு தூயமனை வாழ்க்கை'

'இன்பம் உண்டேல் துன்பம் உண்டு ஏழைமனை வாழ்கை'

'வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்'

'ஓடுபுனல் கரையாம் இளமை'

என்பன மக்களை நல்லறிவு கொளுத்த எழுந்த பொன்னுரைகளாகும்.

இறைவனை நோக்கி இரக்கமாகப் பாடிய திறனையும் பார்மின் பார்மின்.

கடிதாய்க் கடற்காற்று வந்தெற்றக் கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றமாமோ?
கொடியேன் கண்கள் கண்டன கோடிக்குழகீர்
அடிகேள்! உமக்கார் துணையாக இருந்திரே.

ஐயா! நீர் இக்கடல் ஓரத்தில் யாரும் துணையின்றி இருக்கின்றீரே. இதனை நீத்து ஊருக்குள் வந்து குடிபுகக் கூடாதோ! என்று வினவும் வினா எத்துணை இரக்கமாக இருக்கிறது பாருங்கள்.

பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்
ஓடுநல் கலனாக உண்பலிக் குழல்வானே
காடுநல் இடமாகக் கடுவிருள் நடமாடும்
வேடனே குருகாவூர் வெள்ளடை நீயன்றே.

இப்பாட்டும் இறைவன்மீது இரக்கத்தை எழுப்பி நம் உள்ளத்தை உருக்குகின்றதன்றோ.

இலக்கியச் சுவையை இற்றெனஅறிவிக்கும் திறனுடைய பாடல்களும் சுந்தரர் திருப்பாட்டில் உண்டு.

சீபர்ப்பத மலையை வர்ணிக்கையில் நம் பெரியார் வேடர்கள் இரக்கங்கொண்டு யானைகளுக்குத் தேனைப் பிழிந்து இனிது ஊட்டினர் என்னும் செயலை அழகுபடப் பாடியிருப்பது இலக்கியச் சுவைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

"ஆனைக்குலம் இரிந்தோடித்தன் பிடிசூழலில் திரியத்
தானப்பிடி செவிதாழ்த்திட அதற்குமிக இரங்கி
மானக்குறஅடல் வேடர்கள் இலையால்கலை கோலித்
தேனைப்பிழிந்தினி தூட்டிடுஞ் சீபர்ப்பத மலையே"

என்னும் பாடலைச் சுவைத்து இன்புறுக - கொல்லாமை அறியாமைக் குணமாகக்கொண்டொழுகும் பொல்லாத சிவவேடப் புளிஞர் இடத்தும் இரக்கத்தைக் கற்பித்துப் பாடியதிறனை என்னென்று வியப்பது?

இனி நகைச் சுவைத்திறனை எங்ஙனம் எடுத்து இயம்பியுள்ளார் என்பதையும் சிறிது காண்போமாக.

எந்த இலக்கியத்திலும் இச்சுவையைப் பெய்து எழுதப் பெறுதிருப்பின், அது சிறந்த நூலாகப் போற்றப்படுவதில்லை. ஆகவே, புலவர் பெருமக்கள் தம் நூலில் யாண்டேனும் அதனைக்கூறியே செல்வர். சில இடங்களில் அந்நகைச்சுவைப் பாடல்கள் தம் சுவையை வெளிப்படையாக வெளிப்படுத்தி நிற்கும். சிற்சில இடங்களில் இலைமறை காய்போல் மறைந்து காணப்படும். இம்மறை வைத்துருவிக்காணாது பொறுமையை இழந்தவர் தமிழ் நூல்களில் நகைச்சுவை இல்லை என்றே கூற முற்பட்டு விடுகின்றனர். அவர்களை நாம் கடிந்து கூறுதற்கின்றி அவர் அறியாமைக்கு இரக்கம் காட்டவேண்டியிருக்கிறது. "தீவாய் நரகில் வீழ்வாய்கொல் என்று பரிவதும் சான்றோர் கடன்" என்பதன்றோ நமக்கு வகுத்த சட்டம்.

சுந்தரர் திருப்பாட்டின் திறத்தில் நகைச்சுவைக்குரிய இடத்தைப் பார்ப்போம்.

"இங்கள் தங்கும் சடைகண் மேலோர் திரைகள் வந்து புரளவீசும்
கங்கையாளேல் வாய்திறவாள் கணபதியேல் வயிறு தாரி
அங்கை வேலோன்குமரன்பிள்ளை தேவியார்கோல்தட்டியாளால்
உங்களுக்காட் செய்யமாட்டோம் ஓணகாந்தன் தளியுளீரே"

என்னும் பாடல் இறைவர் குடும்பத்தையே எள்ளி நகையாடுவதுபோலன்றோ இருக்கிறது? இன்னோரன்ன சுவைத் திறன் அமைந்த பாடல்கள்பல சுந்தரர் பாட்டில் அமைந்து இருக்கின்றன. இவ்வாறு பாடுதல் எளிதன்று.

இத்தகைய பேர் அறிவாளப் பெருந்தகையாரின் திருப் பாட்டைச் சிந்திக்கவும், பேசவும், எழுதவும் எனக்கு ஒரு பேறுகக் கிடைக்குப்படி செய்த என்பிறவிக்கு வணக்கம் செலுத்த முறையறியாத யான் இக்கருத்தில் சேக்கிழார் பெருமான் பாடியருளிய பாட்டையே யான் பாடி வணக்கம் செலுத்தி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை எல்லா உயிரும் தொழ எடுத்துத்
தேசம் உய்யத்திருத் தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்தபிறப்பை வணங்குவாம்.

திருச்சிற்றம்பலம்

---

தருமபுர ஆதீன வெளியீடு.

"திருக்குறள் – உரைவளம்" பொருட்பால்

கிரௌன் 1 x 4 சைஸ் 1128 பக்கங்கள்.
காலிகோ கட்டிடம் விலை ரூ. 13—8—0
தபாற்செலவு வகையரு ரூ. 2—0—0

கிடைக்குமிடம் :-

மானேஜர்,
தருமபுர ஆதீனம், தருமபுரம்.
மாயூரம் போஸ்ட்.

302

# கந்தபுராண தத்துவம்.

திருவாவடுதுறை ஆதீன வித்துவான்,
திரு. த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை

(முன் தொடர்ச்சி)

இதுவே உலகம், கிடைத்த அப்பேறுகளை சிலரைக் கீழ் நோக்கிச் செலுத்துகிறது. நாம் பேசும் காலம் தீமையால் நன்மைகளெல்லாம் மொத்துண்ணுங்காலம். தீமை தலையெடுக்குங்காலம், நன்மைகள் தலைசாயுங்காலம். தீமை என்பன தீய குணம், எண்ணம், வார்த்தை, செயல்கள் முதலியன. அவை அசுரச் செல்வம். அச்செல்வம் நிறைந்ததோர் தலையெடுத்தனர். நன்மை நசுக்குண்டது, நன்மைகள் தேவசம்பத்துக்கள். இவற்றையுடையோர் நிலைகுலைந்தனர். எனவே அசுரர்நிலை உயர்ந்தது. தேவர் நிலை தாழ்ந்தது. அசுரர் இன்புற்றனர், தேவர் துன்புற்றனர். துன்புற்ற தேவர், தேவதேவர் யாவரும் மகாதேவரிடம் போய் முறையிட்டு அழுதனர். அடிஅடி வழி பிறக்கும் "அழுதால் உன்னைப் பெறலாமே" என எளிதா ஒருவர் கூறி வைத்தார். அழுகை அமரருக்கு மீட்டும் வாழ்வை அளித்தது. ஞானசம்பந்தர் அம்மே, அப்பா! என்றழுதார். அழுத அப்பிள்ளைக்கு அம்மையப்பர் நேரே காட்சி தந்தார். விடைமேல் அழகராய் விளங்கினர். அழுத பிள்ளை பால்குடித்தது. புண்ணியம் வெண்மை நிறம், பாவம். கருமை நிறம், இதுவே புலவர் பெருமக்கள் படைப்பு. வெள்ளை நிறத்திலே மனம் விரும்பிச் செல்லும். கருமை நிறத்தை மனம் வெறுக்கும். ஒளியை உலகம் விரும்பும், இருளை வெறுக்கும், இது கண்கூடு. விடைமேலழகர் உமையுடன் தோன்றினர். வெள்விடை புண்ணியம், உமையம்மை அருள், சிவபெருமான் புண்ணியத்தினிடமாக அருளுடன் தோன்றினர் என்பதே குறிப்பு. தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். வேண்டுகோள் பலித்தது. மகாதேவருடைய நெற்றிக் கண்கள் ஆறினின்றும் ஆறு தீப்பொறிகள் தோன்றின. திவ்விய தேஜஸ் அவை. பேரொளிப் பிழம்புகள் எங்கும் பரவின. ஆகாய முழுவதும் அவை வியாபித்தன. சுற்றும் முற்றும் கீழும் மேலும் பரந்தன. தேவர்கள் அஞ்சினர். பின்பு அவ்வொளிப் பிழம்புகளின்

ஆற்றலைத்தணித்து, வாயுவின் இடமாகவும் அக்கினியினிடமாகவும் கங்கை நீரினிடமாகவும், சரவணப் பொய்கையினிடமாகவும், இறைவர் முறையே செலுத்தினர். இவ்வாறு அத்தெய்வத் தீப்பிழம்பின் பேரொளி ஐம்பெரும் பூதங்களிற் கலந்தும் தனித்தும் செலுத்தப்பட்டது என்பது வரலாறு. இதனைக் கந்தர் கலிவெண்பா நன்கு கூறும். இது சகுணசாகார வடிவம் என்பர்.

**சரவணப்பொய்கை :**

சரவணம்—நாணற்காடு. உலகம் ஐம்பெரும்பூதச் சேர்க்கை உடையது. அது மாயாகாரியம். "இல்லது வாராது உள்ளது போகாது" என்பது ஒரு பழமொழி. மாயையிலே நுண்ணிய வடிவாயுள்ள உலகம் பின்பு தூலமாக விரிந்தது. புதிதாகப் படைத்த தொன்றன்று. எண்களை வடமொழி யெழுத்துக் குறியீட்டால் அமைப்பது வழக்கம். மந்திர சாஸ்திரங்களில் இதனைப் பரக்கக் காணலாம். "௨௫" என்பது இருபத்தைந்து என்னும் எண்ணைக் குறிப்பிப்பது என்பர். வணம்—வனம்—கூட்டம் என்னும் பொருள்படும். எனவே, இருபத்தைந்து தத்துவங்களின் கூட்டமாகிய இப்பிரபஞ்சமே சரவணம் ஆகும் என்பர். தத்துவமயமான பிரபஞ்சத்துக்கு அதிஷ்டானமாக விளங்குபவரே சரவணபவன் ஆவார்.

சிவசத்திகளின் ஒன்றுபட்ட வடிவமே ஆறுமுகக்கடவுள். சிவம்—சத், சித்தி—சித், இவற்றினிடையே தோன்றுவது ஆனந்தம். சோமாஸ்கந்த வடிவம் சச்சிதானந்த வடிவமாம்.

சூரியனுடைய கிரணம் எங்கும் பரவுகிறது. ஆனல், அக்கிரணம் ஒரு பொருளையும் எரிப்பதில்லை. அக்கிரணமே சூரியகாந்தக் கல்லினிடமாகத் தோன்றும் பொழுது அக்கிரண சக்திக்கு எரிக்கும் வன்மையுண்டாகிறது. விறகிலேதீப்பொருந்தி உள்ளது. ஆனல் அது அக்கட்டையை எரிப்பதில்லை. தீக்கடை கோலை முருக வாங்கிக் கடைய அதனிடம் தீத்தோன்றும். அத்தீயே எரிக்கும் ஆற்றல் வாய்ந்தது. இறைவன் எப்பொருளிலும் கலப்புடையவன், சத் வடிவினன், அவ்விறைவன் மாயை, மாயாகாரியம் இவைகட்கு விரோதம் செய்யான், உபகாரியாயுமிருப்பான். இக்காரணத்தாலேயே மாயையின் புதல்வராகிய

அசுரர்களுக்கு அவர் வேண்டிய வரங்களை வேண்டியபடியே கொடுத்தருளினூர். சாமானிய அக்கினி விசேஷ வடிவமுள்ள மரத்தை எரிக்கமாட்டாது. அதுபோல சாமானிய நிலையிலே இறைவன் மாயை புதல்வர்களாகிய சூரன் முதலியோரை அழிக்கவில்லை. அரணியில் தீயுண்டு. அத் தீ வெளிப்படவில்லை. அதனுல் அத்தீயால் எவருக்கும் பயமில்லை. அரணியைக் கடைவோம். தீ வெளிப்படுகிறது. அத் தீ எதனையும் எரிக்கும் ஆற்றலுடன் கூடி விளங்குகிறது. இறைவன் ஞானவடிவினன். ஞானவடிவமாகிய அப்பெருமானது ஆறு நெற்றிக்கண்களினின்றும் ஆறு பொறிகள் கிளம்பின. அவை ஞானப்பொறிகள். இந்தஞானமாகிய தீப்பொறிகளே மாயா காரியமாகிய அசுரரை அழிக்கவல்ல ஆற்றல் பெற்று விளங்கியது. சூரிய காந்தக் கல்லின் முகமாகச் செலுத்தப்பட்ட சூரிய கிரணத்தை ஒருவாறு சுப்பிரமணியக் கடவுளுக்கு ஒப்பிடலாம்.

இனி, சச்சிதானந்தப் பரம்பொருள் சமாதி நிலையிலே ஆனந்தமயமாய்த் தோன்றியருளும், சத்வடிவாகிய சிவம், சித்வடிவாகிய அருளுடன் கூடினமையால் ஆனந்தவடிவாகிய குமரன் வெளிப்பட்டமை காண்க.

**தேவசேனுதிபதி :**

தேவர்கள் யாவரும் குமரக்கடவுளை எல்லா ஆன்மாக்களுடைய இருதயமாகிய குகையிலே ஒளித்து வாழ்பவன் என அறிந்தனர். உடல் பொருள் ஆவிகளை அப்பெருமானுக்குத் தத்தம் செய்தனர். தமக்கென ஒரு செயலின்றி, குமரவேல் ஆணையின் வழிச்சென்றனர். இது ஆன்ம சமர்ப்பணம் என்பது.

**பதினெரு ஆயுதங்கள் :**

முருகவேள் தமது திருக்கரத்திலே பதினெரு உருத்திரர்களையும் ஆயுதங்களாகத் தரித்துக் கொண்டிருக்கின்றனர். இக்குறிப்பு சம்சார துக்கத்தை நாசம் செய்பவர் இம்மூர்த்தி என்பதையுணர்த்தும். வேல்—ஞானம், ஞானசத்தியையுடைய இவர் ஆன்மாக்களுக்குச் சிவஞானத்தை அருளுபவர் என்பதைத் தெரிவிக்கும்.

ஏம கூடம் :

இது இருதயத்தையுணர்த்தும், சுழுத்திஸ்தானம் அண்மையிலுள்ளது; இது மாயாபுரி. அஞ்ஞான நிலையில் நன்கு அழுந்திய ஆன்மாவே தாரகன். அஞ்ஞானத்தால் உண்டாகும் அறிவின்மையே இங்கே கிரவுஞ்சமலை ஆகும்.

தேவர்கள் முருகவேளைத் தேவகிரியில் பூசித்தனர். தகர புண்டரீகமே தேவகிரி என்பது. அஞ்ஞானம் சிறிது நீங்கிய போது இதயத்திலே இறைவனைப் பூசித்தனர், இது அகவழிபாடு. பாலைவனம் என்பது இங்கே கற்பனை ஒழிந்த விடம். பாழ் என்பதும் அது. திருச்செந்தூர் என்பது துரியநிலை, அது ஆஞ்ஞை ஸ்தானம்.

செந்திப்படலம் வரையுள்ள பகுதியின் பிண்டப்பொருளாவது:- ஆன்மாக்கள் பிறவிப்பிணி தீர இறைவரை வழிபட்டு வேண்டுகின்றன. இறைவர் ஆன்மாக்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டு அருளே திருமேனியாகக் குருவடிவங்கொள்ளுகிறார். ஆன்மாக்கள் குருவைத் தொடர்ந்து செல்கின்றன. உடல் பொருள் ஆவிகளைத் தத்தம் செய்து அவரிடத்திற் கொடுத்துத் தாம் அவர் ஆணையிற் செல்கின்றன. பின்பு ஞான நெறியிலே துரிய நிலையை அடைந்து சிவசமாதி கூடுவன ஆம் என்பது.

“அந்திபகலென் றிரண்டையுமொழித்
இந்திரிய சஞ்சலங் களையறுத்
தம்புய பதங்களின் பெருமையைக்—கவிபாடிச்
செந்திலை யுணர்ந்துணர்ந் துணர்வறக்
கந்தனை யறிந்தறிந் தறிவினிற்
சென்றுசெரு குந்தடந் தெளிதரத்—தணியாத
சிந்தையு மவிழ்ந்தவிழ்ந் துரையொழித்
தென்செய லழிந்தழிந் தழியமெய்ச்
சிந்தைவர என்றுநின் தெரிசனைப்—படுவேனோ”

என்பது திருப்புகழ்ப் பகுதி. இது சிந்தித்துச் சிந்தித்து உருகும் பகுதி. சிந்தித் திருப்பதன்றி வேறென்ன செய்ய வல்லோம்,

306



இனி, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் நான்கு பகுதிப்பட்ட அந்தக்கரணமே நான்முகன் எனக்குறிக்கப்படும். காசிபர் பிரமதேவருடைய மானசபுத்திரர். இது ஆன்மாக்கள் அந்தக் கரணங்களுடன் கட்டுண்ட நிலை என்க. காசிபருடைய மனைவியர் இருவர். அவிவேகம் என்பவள் ஒருத்தி; விவேகம் என்பவள் ஒருத்தி; அவிவேகம் என்பவளிடமாக அசுரர் தோன்றினர். விவேகம் என்பவள் பால் தேவர் தோன்றினர். முக்குணவசத்தால் ஆன்மா அவிவேகத்தையும், விவேகத்தையும் மாறிமாறிப் பொருந்தும் என்பது குறிப்பு. அவிவேகம் வெற்றி அடைதலும், விவேகம் தோல்வி அடைதலுமாக வெற்றி தோல்விகள் மாறிமாறி வருவன ஆம்.

இனி, மாயை என்பவள் காசிபரை மயக்கிப் புணர்கிருள். இது ஆன்மா அஞ்ஞானத்தாற் கட்டுண்டு அவதியுறும் நிலை, ஆன்மாக்கள் அஞ்ஞானத்தால் அகங்காரம், குரோதம், மோகம். சஞ்சலம் இவற்றைப் பெறுகின்றன. காசிபர் மாயையின் புணர்ச்சியால் முறையே சூரபதுமன், சிங்கமுகன், தாரகன், அசமுகி இவர்களைப் பெற்றனர். அகங்காரம் இடமாகச் சில துர்க்குணங்கள் தோன்றும். பானுகோபன் முதலியோர் அக் குணங்களே. குரோதத்தினிடமாகத் தோன்றும் துர்க் குணங்கள்—அதிசூரன் முதலியோர். மோகத்தினிடமாகத் தோன்றுவனவே—தாரகனுடைய புத்திரர்கள். பலவித மிருக வடிவத்திலே தோன்றிய அசுரர்கள்—பற்பல துர்க்குணங்கள், ஆணவமலம்—சூரபதுமன்; கன்மமலம்—சிங்கமுகன்; மாயா மலம்—தாரகன். யான் எனது என்னும் செருக்குடன் சரீரப் முதலிவைகளில் ஆன்மபுத்தி பண்ணுவது அஞ்ஞானத்துடனே கூடிய ஆன்மநிலை; அது வீரமகேந்திரம். வீரமகேந்திரன் எட்டுத் திக்கிலுமுள்ள எட்டு நகரங்கள்—புரியட்டக சரீரம். கன்மமலம் சிங்கமுகன்—குரோதவடிவம்—ஆசுரபுரி. மாயாமலம்—தாரகன் மோகவடிவம்—மாயாபுரி, வீரமகேந்திரபுரி, ஆசுரபுரி, மாயாபுரி இவைகளை ஸ்தூல, சூக்கும, காரணசரீரம் எனவும் கொள்ள லாம். ஆன்மா அகங்காரம் முதலிய துர்க்குணங்களால் மொத்துண்டு இருதயத்தில் மறைந்து நிற்கும். இருதயம்—பிரமபுரம்—சீகாழி. ஆன்மா—இந்திரன். அகங்காரம்—சூரன். உய்யானவனம்—நாடிக்கூட்டம். சுழுமுனைநாடி—மூங்கில்—இந்திரன். குண்டலிசத்தி-இந்திராணி. யான் எனது என்னும்

செருக்குடையவருக்கு குண்டலிசத்தி வசமாவதில்லை. இதனாலே இந்திராணி சூரனுக்கு வசமாகாதிருந்தாள் என்க. தூது என்பது சாஸ்திர விசாரணையிலே முனைந்து நிற்கும் புத்தியாம். தத்துவ ஞானத்தால் மாயா காரியங்களில் செல்லும் ஆன்ம வுணர்ச்சி நாசமாயிற்று; அகங்காரத்தின் வலியற்றது. சிவமாந் தன்மைப் பெருவாழ்வடைய ஆன்மாவுக்கு ஆணவமலமே உபகாரமாயு மிருக்கும்.

இனி, குகனே பரமகாருணியராகிய ஞானாசிரியர். பூதப் படைகள்—சிவதத்துவம். வீரமகேந்திரம்—அஞ்ஞான வடிவ நிலை. மயில்—சேவல்—அதோமுகமாயை ஊர்த்துவ மாயைகள். ஆணவம் சத்திகெட்டு நிற்கும் நிலை மயில். வேல் ஞானசத்தி, தெய்வானை யம்மையார்—கிரியாசத்தி. புறச்சமாதியே—தெய்வ யானை யம்மையாருடைய திருமணம். தேவரை விண்ணிற் குடியேற்றல்—ஆன்மஞானம் பெறுதல். ஆன்மாவானது தன் னிலையுணர்ந்து சிவமாந்தன்மைப் பெருவாழ்விலே திளைத்தல் வள்ளியம்மையாரது திருமணம். வள்ளியம்மையார்—இச்சா சத்தி, தொண்டைநாடு என்பது தலை. மேற்பாடி—முகம். வள்ளிமலை—புருவநடு, வள்ளி—குண்டலிசத்தி, சிவசக்திகள். வள்ளிக்குழி—மூலாதாரம். வேடர்கள்—ஐம்புலங்கள், நம்பி—ஆன்மா. தினைப்புனம்—போகநுகர்ச்சிக்குரிய உடல். தினை—பிரபஞ்ச சுகம். பரண்—சாஸ்திர ஞானம். கவண், கல்முதலியன வைராக்கியத்துடன் கூடிய அந்தக்கரணங்கள். பறவைகள்—இந்திரிய வியாபாரங்கள். இவ்வாறு தத்துவப்பொருள் காண்க. குருவருளாற் பெறுக. திருவருளைச் சிந்திக்க. "ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்தெனத்—தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டகன்றிய மின்மையின் அரன்கழல் செலுமே" என்னும் சிவஞானபோத சூத்திரப் பொருளுடன் இதனையும் இணைத்துச் சிந்திக்க.

"மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"

—கந்தபுராணம்.

# சுவைவிளக்கம்

வித்துவான், திரு. நா. பார்த்தசாரதி, மதுரை.

(தொடர்ச்சி)

## இளிவரற்சுவை

இனி மூன்றும் எண்ணுமுறைமைக்கண்நின்ற இளிவரற் சுவை விளக்கம்பெறுதற்கு உரியது. இதனை அவலச் சுவைக்குப் பின் நிறுவிக் கூறினமைக்கு மேல் முன்னுரையிற் காரணந் தெரித்துரைக்கப்பட்டது. அவலத்தோடு பேரியை புடைமையும் அவ்வவலத்துள் ஒன்றாய்த்தானும் நின்று முதல் நிலம் பெற்றமையானும் அதனை அடுத்துநின்றதெனை மீண்டும் இங்கு அவ்வியையபு நினைவதற்கு உரியது. இவ் விளிவரற் சுவை மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்னும் நான்கு பொருட்பாகுபாட்டின்கண் நிகழும் அமைப்பையுடையது.

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோ
டியாப்புற வந்த இளிவரல் நான்கே." (மெய்ப்பாடு 5.)

மூப்பென்பது பருவம் மிகுதல். பருவமிகவினாற்றோன் றும் தளர்வு காரணமாக அது தோன்றும். பிணியென்பது பிறநுகர்வுகளிற் செல்லாமைப் பிணித்துத் துன்புறுக்கும் நோய். பலவாய நுகர்வுகளின்மேற் படர இயல்பான் அவாவி நிற்கும் புலன்களைப் பிணித்து நிறுத்தி யொடுக்குதலின் இஃது இப்பெயர்த்தாயிற்று. வருத்தமென்பது முயற்சி. தாள் வினையோடியைந்த ஆள்வினைப்பாலதாகிய அதுகாரணமாத் தோன்றுவதனை அப்பெயராற் கூறினர். மென்மையாவது வன்மையின் அபாவம். அவயக்கூட்ட விசேடணத்தாற் றோன்றற்பாலதாகிய அதனதபாவமும் இளிவருதற்கு ஏதுவா கலின் அதுவும் இளிவரலாயிற்று. மூப்பால் இளிவருதல் உயிர்கட்கு இயல்பாகலானும், வழக்கிடத்து விளங்கப் புலப் படுமியல்பிற்றாகலானும், பெரும்பான்மைத்தாய் இச்சுவை மேனிகழ்தலானும் அதனை முற்கூறினர். இளையர் முதியர்

இடைநிகரவர் என்னும் வேறுபாடின்றி யாவரையும் பற்றுதலாலும், மூப்பின்கட் சார்தல் மிகவுண்மையானும் பிணியை அடுத்துக் கூறினர். மூப்பும் பிணியும் போலவன்றி ஆள்வினையுண்மைகாரணமாகத்தோன்றுதலும், இல்லாவழித் தோன்றாமையானும், மனவெழுச்சியுள்வழி யொழிதலும், யாப்புறவின்மையுடைமையும், உடையதென்று வரையறைப்படாமையானும் வருத்தத்தை மூன்றாவதாகவைத்தார். கூறிய மூன்றினிற் சிறுவரவினதாகலானும் தானரிதிற் றோன்றுவதாகலானும் மென்மை இறுதியில் வைக்கப்பட்டது. இனி இவையும் தன்கண்ணே தோன்றுதலும் பிறர்கண்ணே தோன்றுதலும் என்று நிகழிடமிரண்டாகி எட்டாவன. 'யாப்புற வந்த இளிவரல்' என அடைகொடுத்துச் சிறப்பித்த அதனான் வீரங்காரணமாகவும் இச்சுவை நிகழுமென்பதற்கு ஒரு தோற்றங் குறித்தார் ஆசிரியர். இன்னும் வழக்கின்கண் இவ்வைந்தனுள் அடங்காது பிறகாரணம்பற்றி வருவன உளவாயினும் இம்மிகையான் அவையும் அடக்கி ஓதற்கு உரியன.

"இனிநினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்வுறு பாவைக்குக் கொய்பூத் தைஇத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர்நணிப் படிகோ டேறிச் சீர்மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்து மணற்கொண்ட கல்லா விளமை
யளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே." (புறம் 243.)

என்னுந் தொடித்தலைவிழுத்தண்டினர் புறப்பாட்டுள் தன்கட்டோன்றிய மூப்புப்பொருளாகப்பிறந்த மெய்ப்பாடு எழுவாய்

310



தொடங்கி இறுவாய்காறும் அழகிதாகப் படிந்து அமைந்து சுவைக்கு நல்லிலக்கமாகின்றது.

"மாசில் கற்பின் புதல் தாயென
மாயப் பொய்ம்மொழி சாயினை பயிற்றியெம்
முதுமை எள்ளல் அஃதமைகுந் தில்ல. (அகம் 6.)

என்னுங் கிழத்தி கூற்றுய நெடுந்தொகைப் பாட்டினுள் 'முதுமை எள்ளல்' எனக் கூறிய அவட்குத் தோன்றிய மெய்ப்பாடும் தன்கட் பிறந்த மூப்புப்பற்றியதாம்.

"மூத்துத் தலையிறைஞ்சிய நின்னோ டியானே
போர்த் தொழில் தொடங்க நாணுவல் அதனன்."

என்புழி நாணுதல் பிறன்கட் கிடந்த மூப்புக்காரணமாக விளைந்ததாகலின் அது பிறன்கட்டோன்றிய மூப்புப் பொருளாகத் தோன்றிய இளிவரலாம்.

"தைஇத் திங்கள் தண்புலர் விடியல்
நீர்வேட் டாடு மந்தணர் மெய்யெனப்
பீர்வேட் டாடிய நரைத்தலை விதிர்ப்பக்
கைகள் நடுங்குங் கவினழி பெரியோய்
செய்தல் ஒல்லுமோ நின்னொடு சமரே."

என்பதும் பிறன்கட்டோன்றிய மூப்புப் பொருளாகப் பிறந்த இளிவரல்.

"இமயமுந் துளக்கும் பண்பினை
துணையிலாளர் பெண்டிரீஃ தெவனோ."

என்பதனுள் அன்னபெருவிறல் பெற்ற நினக்கு எம்மை அலைத்தல் தகுவதன்றெனக் கூறிய தலைமகள் தான் இளிவந்து அங்ஙனங் கூறினளாகலின் அது தன்கட்டோன்றிய பிணி பற்றிவந்த இளிவரலாம்.

"பணிசெய் யாயத்துப் பந்தாடு கின்ருயைக் கண்டுமாழ்கிப்
பிணிசெய் நோயேன் யான்கிடப்பப் பிறர்வாயது கேட்டலுந்
துணிக போதுமென விருத்தாய் போந்தேன் துயருழப்பநீ
மணிசெய் மேகலையாய் மாற்றந் தாராய் மறந்தொழிதியோ"

(சிந்தாமணி 1589.)

என்னும் கனகமாலையாரிலம்பகத்திற் சீவகற்குப் பிறந்ததும் தன்கட்டோன்றிய பிணிகாரணமாகவந்த இளிவரல் எனப் படும்.

"குணகடற் றிரையது பறைதபு நாரை
திண்டேர்ப் பொறையன் தொண்டி முன்றுறை
யயிரை யாரிரைக் கணவந் தா அங்குச்
சேய ளரியோட் படர்தி
நோயை நெஞ்சை நோய்ப்பா லோயே."

(குறுந்தொகை 128 )

என்னும் குறுந்தொகைப் பாட்டுள் "செஞ்சினை வேறு நிறீஇக் கூறினமையின் அது, பிறன் கட்டோன்றிய பிணி யெனப்படும்" என்ருர் பேராசிரியர். தன்னுள் நெஞ்சைப் பிறிதுபோற் கூறினும் உணர்வு தன்கண்ணதேயாகலின் தன்கட்டோன்றியதெனவேபடும், நெஞ்சுணர்வுதன் னுணர்வே யாகலின். அல்லதூஉம் நெஞ்சின்பாலதே அவ்வுணர்வு எனிற் றுன்வேறுணர்விலனுயினுனும் ஆயின் உணர்வுநெஞ்சத்ததோ, தன்னதோ என ஒன்றனை ஒன்றுபற்றிக் குற்றப்படுமாகலின் அது தக்கின்ரும்.

"மலமா யருவருப்பாய் மாருப் புழுவின்
புலமாங் கருக்குழியுள் புக்கிங்—கலமருமென்
மம்மர்நோய் தீர்க்கும் மருந்திலையோ மாசறுசீர்ச்
செம்மலே வேங்கடவா செப்பு"

என்பதும் அது.

இதனுள் தன்கட்டோன்றிய வருத்தமும் விரவிற்றேனும் பிணி பெரும்பாலதென்க.

"மெய்வேலவ னடிக்க வெண்மறி கோறற் கிசைக
மைவேல் விழிபிறந் திம்மம்மர்நோய்—செய்கைக்குப்
பூங்கா வளம்பாடிப் புண்ணியன்றன் வெற்பினிற்சேய்
நீங்கா வளம்பாடி நின்று"

312



என்பதனுள் மம்மர்நோய் அவள்கட்கண்டு எடுத்துக்கூறுங் கூற்றுப் பிறர்கண்ணதாகலான் அது பிறர்கட்டோன்றிய பிணிபொருளாகப் பிறந்தது. வெண்பாவிரண்டும் மாறனலங் கார மேற்கோள்.

"வெறிநோய் சுமந்த வெள்வேல் முருகன்
அறியான் கொல்லோ வெம்மணங் கருநோய்
பல்வரை யடுக்கந் தானுடை நாடன்
சொல்வரை யெழுந்த துயரிற் றென்றே"

என்பது 'வெறிநோய் சுமந்த வெள்வேல் முருகன்' எனப் பிறன்கட்டோன்றியதும், 'எம்மணங் கருநோய்' எனத் தன்கட்டோன்றியதும் ஒருங்குகாட்டிற்று. இனி எஞ்சி யிருப்பன வருத்தமும் மென்மையும். அவை விளக்கம் பெறுதற்குமுன் இன்றியமையாததோர் தடைவிடையை இங்கே எழுப்பநேரிடுகிறது. மூப்புக்காரணமாக இளிவந் தாற்கும் வருத்தம் அடிப்படை. பிணிகாரணமாக இளிவந் தாற்கும் அதனின்ற வருத்தம் அடிப்படை. முயற்சிக்கும் அவ்வாறே. அவ்வாறுமேல் இவையெல்லாம் ஒருங்கு தொகுத்து வருத்தமென ஓதல் அமையாதோவெனின் அமை யாது. என்னை? அவை தோன்றுங்கால் ஏதுப்பொருள் வேறுபாடுடைமையின். ஏதுபோலவெனின் சோறுங் கறியும் பிறவும் போக்குவது பசியாயினும் தாம் வேறுபடுதல்போல வென்க. இனி, இது மேல் அவலத்துள்ளும் ஒரு பிரிவாக அமைந்ததே எனின், நன்றுசொன்னாய் இவ்விளிவரலே அவ லச்சுவையோடு பேரியைபுறத் தோன்றியது என முன்னரே கூறப்பட்டது அன்றே. ஊன்றி நோக்குவார்க்கு அவலத்தின் பின் சென்றதோர் பேதமே இச்சுவை என்பது புலப்படுதற்கு உரித்து. தான் அவலத்துள் நின்றதாயினும் ஆண்டுத் தன் பரப்பெல்லாம் முடியப்பெற்றிலது. முடியப்பெறாமை நோக்கி யன்றே ஆசிரியர் தனித்தெடுத்துக் கூறுபகுப்பாராயினர். ஆகவே இளிவரல் அழுகையின் மறுபுறம் என்பதை நுண் ணுணர்வாற் பகுத்து அறிந்துகொள்ளல் வேண்டுமென்பது.

மேலேகாட்டிய குறுந்தொகைப் பாட்டினுள், "சேயள் அரியோட்படர்தி" என்பது தன்கட்டோன்றிய வருத்தம்

பற்றி இளிவரல் பிறந்தது. இதனைப் பேராசிரியர் பிறன்கட் டோன்றியதென்றார். அஃதாகாமை மேலே கூறியாங்குக் கூறிக் காண்க. "யான்றன்னறிவன் தானறியலளே" என்பதும் அது.

"ஒன்றிரப்பான் போன்றிளிவந்துஞ் சொல்லும்
புரப்பான் போல்வதோர் மதுகையு முடையன்
வல்லாரை வழிபட் டொன்றறிந் தான்போ
னல்லார் கட்டோன்று மடக்கமு முடையன்" (கலி 47.)

என்பதனுள், 'ஒன்றிரப்பான் போன்றிளிவந்துஞ் சொல்லும்' என்பது தலைவியுணரத் தோழி கூறியதாகலின் பிறன்கட் டோன்றிய வருத்தம்பற்றி இளிவரல்வந்ததாம். நச்சினார்க்கினியரும் இவ்வாறெழுதினார்.

"ஒருநாள் வாரலன் இருநாள் வாரலன்
பன்னாள் வந்து பணிமொழி பயிற்றியென்
நன்னர் நெஞ்சம் நெகிழ்த்த பின்றை
வரைமுதிர் தேனிற் போகி யோனே
ஆசா கெந்தை யாண்டுளன் கொல்லோ
வேறுபுல னட்டுப் பெய்த
வேறுடை மழையிற் கலுழுமென் நெஞ்சே"

என்பதனுள் அவன் பன்னாள்வந்து பணிமொழிபயிற்று தலாகிய வருத்தத்தால் தோழிக்குத் தோன்றிய உணர்வு பிறன்கட்டோன்றிய வருத்தம்பற்றிப் பிறந்த இளிவரலாம்.

"தொடியுடைய தோண்மணந்தனன்
கடிகாவிற் பூச்சூடினன்
தண்கமழுஞ் சாந்து நீவினன்
செற்றோரை வழிதபுத்தனன்
நட்டோரை யுயர்பு கூறினன்
வலியரென வழிமொழியலன்
மெலியரென மீக்கூறலன்
... ... ...
... ... ...
... ... ... (புறம் 239)

என்னும் நம்பி நெடுஞ்செழியனைப் பேரெயில் முறுவலார் பாடிய புறப்பாட்டுள் தன் கண்ணும் பிறன் கண்ணும்

தோன்றிய மென்மை பொருளாக இளிவரல் பிறந்தது. மெலியார் தாம் இளிவருவன உரைப்பாராயினும் வலியார் தாம் மீக்கூறுவராயினும் இவன் அன்னனல்லன் என்பது கூறினமையின். இனி, யாப்புறவந்த இளிவரல், என்னும் இலேசினாற் கொள்ளப்பட்ட வீரம்பற்றிய இளிவரல் தன் கண்ணே மட்டும் தோன்றுமென்றோ பிறன்கண்ணேமட்டும் தோன்றுமென்றோ எவ்வகை வரையறையும் உடையதன்று. இடைநிகர்த்தாகத் தோன்றும் என்பராயினும் பெரும்பான்மை தன்கண்ணே யுணர்வுகாரணமாகத் தோன்றுமென்பது உதாரணத்தாற் புலப்படும்.

"ஒருகை யுடைய தெறிவலோ யானும்
இருகை சுமந்துவாழ் வேன்."

இது உதாரணம். இதனுள் ஒருகையுடையதென்றது வேழம். 'எறிவலோ' என்றாற்கு எறிதல் தனக்கு இளிவரல் என்பது கருத்தாகலின் தன்கட்டோன்றியது. இனி இவ்வாறன்றி வீரம் பொருளாகப் பிறவாற்றாற் றோன்றுவன சிலவும் உள. அவையும் இம்மிகையானே ஈண்டடக்கி இதன்பாற் சார்த்துதற்குரியன.

"இறந்திலன் செருக்களத் திராமன் தாதைதான்
அறந்தலை நிரம்பி மூப்படைந்த பின்னருந்
துறந்திலனென்பதோர் சொல்லுண் டாயபின்
பிறந்திலனென்பதிற் பிறிதுண்டாகுமோ."

(கம்ப-மந்திரப்படலம் 30.)

இதனுள் செருப்புரிந்து அதனுள் இறப்பெய்தாமையை இளிவரவாகக் கூறினான் தயரதனாகலின், அது மேலதுபோல அச்சார்புபற்றி இளிவரலாம். இதனுள் "மூப்படைதலைக் கூறுவார்" பிறர் என அவன் எண்ணியுரைத்தலின் அது பிறன்கட்டோன்றிய மூப்புப்பற்றிக் கூறுவார்க்கு இளிவரல் பிறந்தது. இன்னும் இவ்வாறே பல்லாற்றானும் வரும் இளிவரல் விகற்பங்களையும் இச் சூத்திரத்துள் அடக்கும் வாயறிந்து அடக்குதல் சுவைத்துறை முற்றிய துணிவினோர், கடனறிந்து செய்யவேண்டியது. ஏனெனில், இளிவரல் பெரிதும் தடுமாற்றமுடையதோர் சுவையென்க. (தொடரும்)

உ

சிவமயம்.

# சிவராத்திரிச் சிறப்பு*

கற்றுக் கொள்வன வாயுள நாவுள
இட்டுக் கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடையானுளன் நாமுளோம்
எற்றுக்கோ நமனால் முனிவுண்பதே.

—அப்பர்

சிவபூஜை, அலைகின்ற மனத்திற்கு ஆனந்தம் அளிப்பது; கவலையைப் போக்கும் கைகண்ட குளிகை; சிவபூஜை செய்யும்போது நாம் நம்மைச் சுற்றியுள்ள துன்பச்சூழலை மறந்து இன்ப வடிவினனாகிய இறைவனோடு ஒன்றிவிடுகிறோம். இறைவன் ஆனந்த வடிவினன். அவனோடு ஒன்றிய நாமும் ஆனந்தமயமாகிறோம். இப்பழக்கம் நாள்தோறும் நீடிக்க நீடிக்க ஆனந்தமே வடிவாய் இரவு பகலற்று, இன்பத்துன்பமுமற்று ஒளியைக்கண்டு ஒளியாத இன்பத்துள் உறைகிறோம்.

இத்தகைய சிவபூஜைக்கு, சிவராத்திரி மிகச்சிறப்பானது. மாதந்தோறும் சிவராத்திரி வருவதுண்டு. மாசிமாத சிவராத்திரி "**மகாசிவராத்திரி**" என்று வழங்கப்படும்.

சிவராத்திரி என்பது தேய்பிறையில் திரயோதசியும் சதுர்த்தசியும் கூடுகின்ற காலம். அதிலும் சிறப்பாக இரவு இரண்டாம் யாமத்திற்குப் பின்பு முதல் ஒரு நாழிகை மகாநிசி எனப்படும். அதில் சதுர்த்தசி சம்பந்தம் இருக்கும்போதுதான் சிவராத்திரி புண்யகாலம் சிறக்கின்றது.

இதற்குப் பிரமாணம் காமிகாகமத்திலும், குமாரதந்திரத்திலும் கூறப்பெற்றுள்ளது.

---

* சென்னை பிரசார நிலையத்தில் சிவராத்திரித் திருநாளன்று இப்பிரசுரம் பிரசார வெளியீடாக அன்பர்களுக்கு வழங்கப்பெற்றது.

316



## வகை :

இச்சிவராத்திரி உத்தமம், மத்திமம், அதமம், என மூன்று வகைப்படும். மூன்றும் யாமத்து முதல் நாழிகையில் திரயோதசியும் சதுர்த்தசியும் கூடியது உத்தமம். திரயோதசி சிறிதும் சதுர்த்தசி முக்காற் பகுதியும் கூடியது மத்திமம். அமாவாசையோடு கூடிய சதுர்த்தசி அதமம். —(குமாரதந்திரம்)

## பூசிக்கவேண்டிய முறை :

சூரியன் அத்தமித்ததும், சிவதீர்த்தம் புண்ணியநதி இவைகளில் சங்கற்பத்துடன் விதிப்படி நீராடித் தோய்த்துலர்ந்த ஆடையை உடுத்து, நித்திய சந்தியாவந்தனத்தையும், விசேட சந்தியாவந்தனத்தையும் முடித்துக்கொண்டு, பூஜைமடத்திற் புகுந்து, இறைவனை விதிப்படிப் பூசித்தல் வேண்டும். முதல் யாமத்தில் வில்வமும், இரண்டாவது யாமத்தில் தாமரையும், மூன்றுவது யாமத்திற் சாதிமுல்லையும், நான்காவது யாமத்தில் நந்தியாவர்த்தமும் பூசைக்கு உரிய புஷ்பங்கள். வில்வம் எல்லாக் காலங்களிலும் சேர்க்கலாம். மூன்றுவது யாமத்தில் முதல் நாழிகைக்கு லிங்கோற்பவ காலம் என்று பெயர். அதிற் பூஜை செய்வது மிகவிசேடம். அன்று முழுதும் ஊண் உறக்கமின்றி சிவசிந்தனையோடு இருத்தல் வேண்டும். பகற் காலங்களில் பூசைக்குரிய சாதனங்களைச் சேகரித்த நேரம்போக மற்ற நேரத்தில் சிவபுராண பாராயணமும் இராக்காலங்களில் ஒவ்வொருகாலமும் பூசை முடிந்த பிறகு தேவார திருவாசக பாராயணமும் செய்தல் அவசியம். —(பூர்வகாரணம்)

## நைவேத்தியங்கள் :

முதற்கால பூஜைக்குப் பொங்கலும், இரண்டாங் காலத்துக்குப் பாயசமும், மூன்றுங் காலத்துக்கு எள்ளன்னமும், நான்காம் காலத்துக்குச் சுத்தான்னமும், நிவேதித்தல் வேண்டும். சுத்தான்னம் எல்லாக் காலத்திலும் நிவேதிக்கத்தக்கது.

—(பூர்வகாரணம்)

**வரலாறு :**

வேடன் ஒருவன் எல்லாப் பாவங்களையும் செய்தவன். ஒரு நாள் புலியால் துரத்தப்பட்டான். நெடுந்தூரம் ஓடி வந்தான். நாகபட்டினத்தில் நாகநாதராலயத்தைச் சுற்றிச் சுற்றி வந்தான். அன்று சிவராத்திரி மூன்றும் யாமம். புலியும் இவனை விடவில்லை. அஞ்சியவேடன் அண்மையிலிருந்த வில்வமரத்தில் ஏறினான், ஓடிவந்தகளைப்பு; புலியினிடத்து அச்சம்; குளிர்ந்தகாற்று; பனியின்வாடை; எல்லாம்கூடி தூக்கம் பற்றியது. புலியோ! வாயை அங்காந்து இவனையே நோக்கிக்கொண்டிருந்தது. மரமிருந்த இடம் நாகநாதர் கர்ப்பக் கிரகத்துக்கு அண்மையில். உறக்கத்தைப் போக்கிக்கொள்வதற் காக இவன் ஒவ்வோர் வில்வமாக உதிர்த்துப் போட்டுக்கொண் டிருந்தான். மூன்றும்சாமம் முடிந்தது, உறக்கமும் கலைந்தது. உடனே சிவலிங்கத்தினின்று ஒளிவடிவாக இறைவன் காட்சி யளித்தார். இதனைத் தரிசித்த விசேஷத்தால் வேடனும் புலியும், வினைப்போகம் முடிந்து உடல்நீத்த காலத்து, சாமீப முத்தியடைந்தனர் என்பது உபதேசகாண்ட வரலாறு.

**சிவராத்திரிப்பயன் :**

விதிப்படிச் சிவராத்திரியில் சிவபூசை செய்தவர்களுக்கு ஆயுள்பெருகும், புகழ்ஓங்கும். அட்டமாசித்திகள் அடையும். உண்மையாக வீடுகிட்டும், எண்ணிய எல்லாம் பெறலாம். இது காரணாகமக் கருத்து.

சிவராத்திரி விரதத்தை அனுஷ்டித்தால் எல்லாப் பாபங் களும் நாசமடையும். எல்லா யக்ஞங்களுடைய பலனும் கிடைக்கும். எல்லா உலகங்களுக்கும் சுகமுண்டாகும். அரசன் ராஜ்யம் இவைகளுக்கு க்ஷேமம் உண்டாகும்; என்கின்றது பூர்வகாரணாகமம்.

# ஆதீனத்தின் இம்மாத நிகழ்ச்சிகள்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழகத்தில் குன்றக்குடி அடிகளார்

25—2—54 மாலை 2-30 மணிக்கு குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணசலதேசிக பரமாசாரிய சுவாமிகள் வந்திருந்து மாணவர்களுக்கு ஆசிவழங்கினர்கள். அவர்கள் தனதுஆசிஉரையில் குறிப்பிட்டதாவது. மாணவர்களே வருங் காலம் உங்கள் கையில் இருக்கிறது. அதை நல்ல முறையில் உருவாக்கவேண்டுவது உங்கள் கடமை. நமது நாடு ஏழை நாடல்ல. பணம் ஒருமுகமாக ஒதுங்கிக் கிடக்கிறது. பொழுதுபோக்கின் பெயரால் சினிமாவிலும், ஏனையவை களிலும் நமதுநாட்டுச் செல்வம் வீணகப்போகிறது. லட்சக் கணக்கான ரூபாய்ச்செலவில் சினிமாகொட்டகைகள் கட்டப் படுகின்றன. அவைகளுக்குப் பக்கத்தில் குந்தக் குடிசை இன்றிப் பலபேர் குளிரில் வாடுகிருர்கள். இந்த நிலைமை மாறவேண்டும்.

ஆசிரியர் பெருமக்களை ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன். மாணவர்கள் கருங்கற்கள் போன்றவர்கள். நீங்கள் சிற்பிகள். நீங்கள் எப்படி உருவாக்குகின்றீர்களோ அப்படியே மாணவர் கள் ஆவார்கள். ஆகவே நீங்கள் விழிப்பாயிருந்து மாணவர் களை நல்லவழியில் நடத்தவேண்டும். இதில் இமாலய அளவு பெரும்பொறுப்பு ஆசிரியர்களைச் சேர்ந்தது என்ருர்கள். பின் தருமையின் தனிச் சிறப்பியல்களை விளக்கிப் பேசினர்கள்.

அடிகள் அவர்களை முதலில் கல்லூரித்தலைவரவர்கள் மாலைசூட்டி வரவேற்ருர்கள். இறுதியில் செயலர் திரு. ம. சிவசம்பு நன்றிகூறினர்.

# ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழக நான்காவது ஆண்டுவிழா

கல்லூரியின் ஸ்ரீ குருஞானசம்பந்தர் கழக ஆண்டுவிழா, 27—2—54 சனிக்கிழமை காலை 9-மணிக்கு அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் பிர்மஸ்ரீ E. S. வரதராச ஐயர், B. A., அவர்கள் தலைமையில் நடந்தது. கடவுள்வாழ்த்து S. தியாகராாசன் பாடினுர். கல்லூரித்தலைவர் Y. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் யாவரையும் வரவேற்ருர்கள். பின், "பொங்கல் விழாவின்பொருள்" என்பதுபற்றி சிறந்ததொரு ஆராய்ச்சிச் சொற்பொழிவை அண்ணுமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர், வித்துவான், திரு. மு. அருணுசலம் பிள்ளை நிகழ்த்தினுர்கள்.

பின் புறநானூற்றில் பொறுக்குமணிகள் என்பதுபற்றி மூன்ருமாண்டு மாணவர் திரு. S. சொக்கலிங்கம் பேசினுர். தலைவர்தனது பின்னுரையில் "முப்பொருளில் முதல்பொருள் என்பதுபற்றிச் சிறந்ததொரு சித்தாந்தப் பேச்சைப் பேசி மகிழ்வித்தார்கள். அடுத்து வித்துவான், சொ. சிங்காரவேலன் எழுதிய "பெருமிதம்" என்ற ஒலி நாடகம் நடிக்கப்பட்டது. செயலாளர் திரு. சிவசப்பு நன்றி கூறியவுடன் கடவுள் வாழ்த்துப் பாடக் கூட்டம் இனிது முடிவுற்றது.

# டி. கே. சி. மறைவு குறித்து அநுதாபம்

6—3—54 சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கல்லூரித் தலைவர் பிரம்மஸ்ரீ Y. மகாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., அவர்கள் தலைமையில் திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் மறைவு குறித்து அனுதாபக்கூட்டம் நடந்தது. அவ்வமயம் துணைத்தலைவர் திரு. வித்துவான், ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் திரு டி. கே. சி. அவர்கள் தமிழுக்குச் செய்த சேவையையும், அவர்களது பண்பையும் பாராட்டிப் பேசினுர்கள் அவர்கள் மறைவு தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும்

ஈடுசெய்ய முடியாத நஷ்டமாகும் என்றுகூறி அவர்கள் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

## சிறப்புக் கூட்டங்கள் :

*20—2—54* தருமபுரம் ஸ்ரீ மாரியம்மன் கோவிலில் மாணவர்களால் சிறப்புக்கூட்டம் நடத்தப்பட்டது. திரு. வித்துவான், முத்து. சு. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். திரு. வித்துவான், சொ. சிங்காரவேலன், திரு. அரங்கசாமி, திரு. இராமசாமி, திரு. சண்முகம், திரு. சுந்தரராசன், திரு. ம. சிவசம்பு முதலியோர்கள் பேசினார்கள்.

*6—3—54* சனிக்கிழமை மாலை *6-30* மணிக்கு ஆதீனக் கல்லூரியில், முன்னாள் மேயர் திரு. S. இராமசாமி நாயுடு அவர்கள் தனது மேல்நாட்டுச் சுற்றுப் பிரயாண அனுபவத்தைப்பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். பிறநாடுகள் தங்களுக்குள் பொருளாதாரத்தில் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பது குறித்துச் சிறந்ததொரு சொற்பொழிவு ஆற்றினார்கள்.

## ஜன்மநக்ஷத்திர அபிஷேக ஆராதனை :

தருமபுர ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம்பெற்ற சிவஸ்தலங்கள் தோறும் அபிஷேக ஆராதனை செய்துவரும் வழக்கம்போல் இம்மாதத்திலும் *21—2—54* அன்று திருக்கொண்டீச்சுரம் ஸ்ரீ பசுபதிநாதர் ஆலயத்தில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்விக்கப்பெற்றன. ஆதீன வெளியீடாக அச்சிட்ட திருக்கொண்டீசரத் திருப்பதிகங்கள் என்ற ஆதீன வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. ஆதீன ஓதுவா மூர்த்திகளைக்கொண்டு பண்முறைப்படி பதிகம் முழுவதும் பாராயணமாக ஓதச் செய்யப்பெற்றது.

## சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப்பிரசார நிலையத்தில்

# பெரியபுராண விரிவுரை

14—2—54 ஞாயிறு இரவு 6-30 மணிக்கு வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்களால் இளையான் குடிமாறநாயனார் வரலாறுபற்றி விரிவுரை நிகழ்த்தப்பட்டது. "வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்" என்றபடி வேளாளர் மரபில், இளையான்குடி என்ற ஊரில் தோன்றினார் மாறனார் என்ற இப்பெரியார், "உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்றதற்கிணங்க நன் மனமும், இன்முகமும்கொண்ட அடியவர்கட்கு, எந்தநேரத்திலும் இளையாது இன்னமுதருத்தினார். "உடம்பாரழியில் உயிரார் அழிவர், திடம்பட மெய்ஞானம் சேரவும்மாட்டார்" என்ற மூலர் மொழிப்படி உயிரை வளர்க்கும் தொண்டர்கட்கு உடல்வளந் தந்து பாதுகாத்தார். பிறர்நலங்காத்த பெருமையால் பிறவாப் பெருவீடுபெற்றார்' ஆகவே, மக்கள் பிறர்நலத்திற்காக வாழ வேண்டுமென்பதை இவ்வரலாறுகொண்டு தெளிதல் வேண்டும், என அறிவித்தார்கள்.

21—2—54 ஞாயிறு இரவு 6–30 மணிக்கு உயர்திரு. திருமாமணிளசிவம் அவர்கள் "மெய்ப்பொருள் நாயனார்" வரலாறுபற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள். திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்ட நாடு சேதிநாடு எனவும், மலையமான் நாடு எனவும் வழங்கப்பெறும். அந்நாட்டரசரே மெய்ப்பொருள் நாயனார், இறைவன் வேடங்களையே மெய்ப்பொருள் என எண்ணிய பெருமைபெற்றவர், பலமுறையும் போரில் தோற்ற முத்தி நாதனால் கொல்லப்பெற்றார். அத்தீங்குநிகழ் காலத்தும் உள்ளம் மாறாதவராய் வேடமே மெய்ப்பொருள் என விளம்பினார். உள்ளத்தும்கொண்டு உயரிய வீடுபெற்றார். எண்ணத்தின்வண்ணமே மனிதன் உயர்வு தாழ்வு பெறுகிறான். மெய்ப்பொருள் நாயனார் உயரிய எண்ணத்தினர். உயிருக்குப் போராடுங்காலத்தும் சித்தம் சிவத்தைநாடியதேயன்றி பித்த உலகத்தை

நாடவில்லை, ஆகவே நிலைத்த பரம்பொருளிடத்து உள்ளங் கலந்த அன்பினைக் காணிக்கையாகச் செலுத்தவேண்டும். என்பதை இவ்வரலாற்றால் தெரிகிறோம் என விளக்கிக் கூறினார்கள்.

*28—2—54* ஞாயிறு இரவு *6–30* மணிக்கு விறன்மிண்ட நாயனார் வரலாறுபற்றி வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் பேசினார்கள். பேசுகையில், சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும், சுந்தரரும், வாதவூரரும் தோன்றவில்லையேல் நீறு. மாமறைநூல், ஐந்தெழுத்து இவற்றை அறியுந்திறம் நம்மாலியலாது அதுபோலவே இவ் விறன்மிண்டர் இல்லையேல் நாயன்மார் வரலாறு, தொண்டின் திறன், அன்பின் உறுதி, இறையருள் பெறும்வழி முதலியன நமது நாட்டில் விளக்கம்பெற்றிரா. இப்பெரியார் மலைநாட்டில் செங்குன்றூரில், வேளாளர் குலத்தில் தோன்றினார், தொண்டர்களிடத்து அன்புபூண்டவர். பல தலங்கட்கும் சென்று வழிபாடாற்றித் திருவாரூர் சென்றார், தேவாசிரிய மண்டபத்தமர்ந்து சிரித்தும், களித்தும் தியானிக்கும் தொண்டர்களுடன் தாமும் தொண்டராயினார். தொண்டர்களை வணங்காது சென்ற சுந்தரரையும், அவரையாட்கொண்ட இறைவனையும், அன்பின் உறுதியால் புறகென்றுரைத்தார். அதனால் எழுந்ததே திருத் தொண்டத்தொகை. இதனை அடியொற்றியே திருத்தொண்டரந்தாதி எழுந்தது. இவ்வந்தாதியை யொட்டியே பெரிய புராணம் எழுந்தது. இவ்வளவிற்கும் காரணராயினார் இவ் விறன்மிண்டர், என விரித்துரைத்தார்கள்.

## சிவராத்திரிச் சொற்பொழிவு

"அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்றறிக" எனவும் "சத்தியும் சிவமுமாய தன்மைதான் இவ்வுலகமெல் லாம்" எனவும் மெஞ்ஞானிகள் அன்று அறிவித்தனர். இருவகையான ஆற்றலால் உலகம் இயங்குகிறது என்பதனை விஞ்ஞானிகள் இன்று அறிவிக்கின்றனர். சத்தியும் சிவமும் ஒன்றுசேர்த்து ஒளி வடிவாய்க் காட்சி நல்குவதை (ஞானியர்) உணர்ந்த நாளே சிவராத்திரி எனப்படும். அத்தத்துவக் கருத்தை

மக்கள் உணரவேண்டுமெனத் திருவுளங்கொண்ட ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் உத்தரவுப்படி ஷெ நிலையத்தில் சிவராத்திரி விழா 3—3—54 புதன்கிழமையன்று இரவு 6–30 மணிக்குக் கொண்டாடப் பெற்றது. ஏராளமான மக்கள் கூடியிருந்தனர். ஷெ நிலையத்தின் திருமுறைவகுப்பு மாணவியர் கடவுள் வணக்கம் பாடினர். ஆசிரியர், திரு. P. சுவாமிநாதன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். தண்டயார் பேட்டை ஸ்ரீ சரஸ்வதி வித்தியாலய மாணவியர், திருவெம்பாவை திருப்பாவை இசையரங்கு இனிமையாக நிகழ்த்தினர்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய திரு N. பாலசுப்பிரமணிய ஐயரவர்கள் B. A., L. T., சிவராத்திரியின் பெருமையினையும், அன்று வழிபடவேண்டிய முறையினையும், வழிபடுவதால் மக்கட்கு வரும் நன்மைகளையும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். மேலும், நாவுக்கரசர் ஐயாற்றில் கயிலைக்காட்சி காணுங்கால் இச்சிவராத்திரி உணர்த்தும் உண்மையைத்தான், "காதல் மடப்பிடியோடுங்களிறு வருவன கண்டேன்" என அறிவிக்கின்றார் எனவும் தெரிவித்தார்கள்.

'சிவசக்தியின் பெருமை' என்பதுபற்றிப் பேசிய தவத்திரு. அமிர்தானந்தயோகியாரவர்கள், சத்தியால்தான் சிவத்திற்குப் பெருமை இருக்கிறது என்றும், அச்சிவத்தோடு பிரிப்பின்றி இரண்டறக்கலந்து நிற்கும் சத்தியை ஐந்தாகக்கூறலாமென்றும் அவ்வைந்தைத்தான் சித்தாந்த சாத்திரத்தில் பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி என அறிவித்துள்ளனர் என்றும், இவ்வைந்து சத்திகளைக் கொண்டேதான் இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில் இயற்றுகிறான் என்றும், சத்திசெயற்பட்ட போதிலும் சிவமின்றிசத்திக்கு இயக்கமில்லை என்றும் ஆகவே சத்தியும் சிவமும் பிரிக்கமுடியாத பெரும்பொருள் என்றும், இக்கருத்தைச் "சிவம் சக்திதன்னை யீன்றும், சக்திதான் சிவத்தை யீன்றும்" என்ற சித்தியாரால் தெளியலாமென்றும், ஆன்ம முனைப்பின்றி ஆண்டவனை இந்நாளில் வழிபடுதல் பேரின்ப வீட்டிற்கு வழியாகும் என்றும், அகம்பாவத்தோடு வழிபடுதல் பிறவி எடுத்தற்கு ஏற்ற வழியாமென்றும் பேசினார்கள்.

வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் அனைவர்க்கும் நன்றிதெரிவித்து, திரயோதசி திதி சக்தி அமிசம் எனவும், சதுர்த்தசி திதி சிவ அமிசம் எனவும் இவ்விரு திதியும் ஒன்றுசேரும் நாளே சிவராத்திரி எனவும், "உண்ணு துறங்காதிருந்தாய் போற்றி" என்ற நாவரசர் மொழிப்படி இறைவன் ஊண் உறக்கம் இல்லாதவன் எனவும், அவனைத் தியானம் செய்வதற்கு ஊணும் உறக்கமும் இன்றி இருத்தலே சிறப்பானது என்பதை அறிவிக்கும் முறையில் இவ்விழா அமைந்துள்ளது எனவும் கூறினார்கள். சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்கள் கடவுள் வாழ்த்துத் திருமுறைப் பாடலுடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

## சமயத்தொண்டும் - தமிழ்த்தொண்டும்

17—10—53 முதல் நாள்தோறும் மாலை 5-30—7-30 வரை சங்கீதபூஷணம் திரு. P. சுவாமிநாதன் அவர்களைக்கொண்டு மாணவ மாணவியர்கட்குத் திருமுறைப் பயிற்சி அளிக்கப் பெற்று வருகிறது. பத்து மாணவர்களும் 30 மாணவியர்களும் பயின்று வருகின்றனர்.

25—1—54 முதல் நாள்தோறும் இரவு 7 மணி முதல் 8-30 வரை தமிழ் வித்துவான் புகுமுக வகுப்பு, பிரிலிமினெரி வகுப்பு இரண்டும் நடைபெற்று வருகிறது. வகுப்பொன்றிற்கு பன்னிருவர் பயிற்சி பெறுகின்றனர். வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திரு. V. S. நடராசன் அவர்கள், திரு. S. சோமசுந்தரம் அவர்கள் இம்மூவரும் பாடம் நடத்திவருகின்றனர். விபரம் அஞ்சல் மூலமோ நேரிலோ தெரிந்துகொள்ளலாம்.

---

### குருஞானசம்பந்தர் உபதேச மொழிகள்.

இறைவா! நாங்கள் எதை நினைத்தாலும் எதைச் செய்தாலும். அவை உன் செயலே; அதனையும் நின் அருளாலேயே உணர்ந்தோம். அதன்பயன் என்றும் என்செயல் இல்லை என்பதனை அறிந்ததே.

# தருமபுர ஆதீனத்தில்

## ஜெமினி அதிபர்

# திரு. S. S. வாசன் அவர்களுக்குப்

## பாராட்டுவிழா

ஔவையார் தமிழ்நாடு தந்த தவ மூதாட்டி. அறிவின் திருவுரு; பண்பாட்டின் சிகரம். அநுபவம் தோய்ந்த அமுதமாரி பொழியும் தமிழ் முகில். தமிழகத்து மூலைமுடுக்கெல்லாம் ஓடி ஓடி நாட்டுத்தொண்டு செய்த சமுதாயச் சீர் திருத்தச் சிற்பியார். ஔவையைத் தெரியாத தமிழ்மகன் இல்லை. ஔவை வாக்கு இல்லாத அரிச்சுவடிப் புத்தகங்களும் இல்லை. அப்படித் தமிழ்நாட்டில் - தமிழினத்தின் இதயபீடத்தில் அழியாத இடம் பெற்றுவிட்ட அமரகவி ஔவையார்.

காலவெள்ளத்திலே எதிர்நீச்சல் போட்டு எத்தனை ஆண்டுகளானாலும் இளமை குன்றாத இனிய கவிதையே உயிர்க்கவிதை; அக்கவிதையை இயற்றி அக்கவிதையிலே தானும் நின்று கவிதைக்காட்சி தருபவனே உயிர்க்கவிஞன். இந்த உயிர்க்கவிஞர்களிலே ஒருவர் ஔவையார்; ஔவையின் அமரவாக்குகள் இந்த உயிர்க்கவிதைகள். இது கவிதை நூலாயும் கருத்தாளர் கூறும் நல்ல முடிவு.

ஔவையாரின் வாழ்க்கை தமிழ் மக்களுக்கு ஒரு அநுபவ வாழ்க்கை. தெய்வீக வாழ்க்கை. சமயப்பணியும், தமிழ்ப் பணியுமே ஔவையாரின் குறிக்கோள். என்பனபோன்ற கருத்துக்கள் அவர்களின் உரையாடல்களில் அமைந்திருந்தது.

## தமிழ்த்தொண்டு :

மறந்த ஔவையை மாநிலத்துக்கு அறிமுகப்படுத்த அறிவுச்சுடர் எரியும் அநுபவ விளக்கைக் கையில் ஏந்தி

தீந்தமிழ் நாட்டின் தெருக்கள்தோறும், இன்பங் கமழும் இல்லங்கள் தோறும் வாழ்வைத் திருத்திய பெருமாட்டி மீண்டும் தமிழ் மனந்தோறும் காட்சி கொடுக்கச் செய்ய திரு. S. S. வாசன் வந்தார்; ஔவையைத் திரைப்படத்திலே கொண்டு வந்தார்; மக்கள் மன இடந்தோறும் சென்று புகுந்து நிலைபெறச் செய்தார். எங்கும் ஔவை வாக்கு! தமிழ் உணர்ச்சி; தருமசிந்தனை இவை தலையெடுத்தன.

## பாராட்ட வேண்டாமா?

நல்லன செய்தவரை நானிலம் முழுதும் பாராட்டும். இமயத்திலே புலி பொறித்த கரிகாலனை இலக்கியம் பாராட்டியது; வடவரை வணக்கி வாகை சூடிய செங்குட்டுவனைச் சிலம்புப் பாடலிசைத்தது; ஆரியப் படைகடந்த தென்னனுக்குப் புறநானூறு வாழ்த்துப் புகன்றது. இந்த வரிசையிலே தமிழ் மூதாட்டி ஔவையாரைத் தமிழகத்தில் யாண்டும் உலவச்செய்து, மனந்தோறும் நடமிடச்செய்த படமன்னரைப் பாராட்டவேண்டாமா? தமிழ்நாடு முழுதும் பாராட்டுக்கள். எங்கள் தருமையாதீனத்து இருபத்தைந்தாம் பட்டத்து எழுந்தருளியிருக்கும் மகாசந்நிதானமவர்கள் பாராட்டத் திருவுள்ளங் கொண்டார்கள். 7—3—54 ஞாயிறன்று பாராட்டுவிழா நடத்த அருளாணை பிறப்பித்தார்கள்; முன்னேற்பாடுகள் விரைந்து முடிந்தன.

## தருமையில் வாசன் :

ஞாயிற்றுக்கிழமை சரியாக ஒன்பது மணிக்கெல்லாம் திரு. எஸ். எஸ். வாசன் அவர்கள், திரு. சீனுவாசராவ் அவர்கள், கொத்தமங்கலம், திரு. சுப்பு அவர்கள், திரு. கி. ரா. அவர்கள் எல்லோரும் வந்து தருமை துர்க்காம்பிகை சந்நிதி சென்று வணங்கித் திருமடம் போந்து ஸ்ரீ-ல-ஸ்ரீ மகா சந்நிதானமவர்களோடு உரையாடினார்கள். இன்றைய தமிழ் நாட்டின் போக்கிற்கு இந்தப்படம் தக்கமருந்து என்றும், இனி எடுக்கும் படங்களை இப்படி நாடு திருந்தக் கூடிய

நிலையில் பக்தி மயமாகப் பண்பாட்டு மயமாக எடுக்க வேண்டும் என்றும், தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்திக் கொண்டார்கள்.

## கல்லூரி மன்றத்தில்:

பாராட்டு மன்றம் பல்கலைக்கல்லூரிக் கட்டிடத்தில். பிரமுகர்களும் ஆதீனக் கல்விநிலைய மாணவர்களும் ஏனை யோரும் வந்திருந்தனர். எல்லோரும் கூடிப் பாராட்டு மன்றத்தை அழகுக்கழகுசெய்து அமர்ந்திருந்தனர்.

## மங்கல வாழ்த்தும், நல்வரவேற்பும்:

இறையருளைத் தமிழ்ப்பாடல் இசைத்து வாழ்த்தியபின், வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் கல்விநிலையங்களின் சார்பில் வெள்ளியிலான கோபுரம் இறை வன் முதலிய உருவங்கள் அடங்கிய வரவேற்புரையை வாசித்தளித்து மாலை சூட்டி வரவேற்றார்கள்.

## இராமசாமி நாயுடு அவர்கள்:

சென்னை மாஜி மேயர் திரு. எஸ். இராமசாமி நாயுடு அவர்கள் ஆதீனத்தோடு மிகவும் தொடர்பு கொண்டவர்கள். ஆதீனத் தமிழ் வளர்ச்சியிலும், சமய வளர்ச்சியிலும் மிக்க பங்குகொண்டு ஓவாது உழைக்கும் தமிழ்ப்பெரியார். அவர்கள் ஆஸ்திக உணர்ச்சியைப் பெருக்கும் ஔவையார் சித்திரத்தை மிக மிகப் பாராட்டி நல்லதொரு விரிவுரையாற்றினார்கள்.

## வலதுகை தருவது இடது கைக்குத் தெரியாமல் கொடுப்பவர்:

திரு. வாசன் அவர்கள் பூமிதான இயக்கத்துக்குப் பெரும் பொருள் கொடுத்து ஆதரித்ததையும், ராஜேந்திர பிரசாத் திரட்டிய நிதிக்குப் பெரும் பொருள் ஈந்ததையும் குறிப்பிட்டு திரு. வாசனவர்களின் தருமசிந்தனையை விளக்கினார்கள்.

இன்னும், திரு. வாசன் அவர்களும் தாமும் இளமைமுதலே பழகியவர்கள் என்பதையும், பொருள் கொடுப்பதை விளம்பரமின்றிக் கொடுப்பவர் என்பதையும் அவர்கள் தந்த ஔவையார் சிறந்ததொரு சித்திரமாம் என்பதையும் விளக்கிப் பேசினார்கள்.

## மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் :

அடுத்து, ஆதீனப் பல்கலைக் கல்லூரித் தலைவர் திரு. Y. மகாலிங்க சாஸ்திரிகள் அவர்கள் M. A., B. L., கல்லூரியின் சார்பில் வாசன் அவர்களின் ஏழாண்டு உழைப்பால் வெளிவந்த ஔவையாரைப் பாராட்டி ஔவையார் படத்துக்கு ஒரு புதிய விளக்கம் தந்தார்கள். முடிவில் 'ஔவையார் ஒரு தத்துவம்' என்று குறிப்பிட்டார்கள். அப்பேச்சின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

இராமனைப் பார்க்காதவனும், இராமனால் பார்க்கப்படாதவனும் ஜன்மபலனை அடையவில்லை என்றும், தன்னைத்தானே நொந்துகொள்வான் என்றும் வான்மீகி முனிவர் கூறியதுபோல்; ஔவையார் படத்தைப் பார்க்காதவன் ஜன்மபலனை அடையவில்லை என்று கருதப்படவேண்டும். அப்படம் எவருடைய சிருஷ்டியோ அந்த சிருஷ்டிகர்த்தாவை நாம் இன்று இங்கு வரவேற்கும் வாய்ப்பைப்பெற்றது நமக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

தமிழ்நாட்டில் வீட்டிற்குவீடு நமது தாய்மார்கள் ஔவையார் வசனம் என்று பல பழையமொழிகளை வழங்குகின்றார்கள். அவையெல்லாம் ஔவையாரின் பாட்டுக்களில் உள்ளவைகள் அல்ல. அவை பெரும்பாலும் பாரம்பரியமாய் வந்த நீதியுரைகள். (Traditional Wisdom) உலக அநுபவத்தில் கடைந்து எடுக்கப்பட்ட நல்ல அறிவுரைகள். நல்வழி, வாக்குண்டாம் முதலிய அறிவுரைக் கவிதைகளை இயற்றிய ஔவையாரின் கீர்த்தி பரவியிருத்தலால் எந்த அறிவுரையும் ஔவையாருடையதென்றே உலக

வழக்கு ஏற்பட்டது. ஆதலால்தான் ஔவையார் வசனம் என்பதெல்லாம் ஔவையார் இயற்றிய பாடல்களல்ல, பின் அவைகாலப்போக்கில் பண்பட்ட உலகநீதிகள் தாம். ஔவை யார் ஆதிகாலத்தில் எவராயிருந்தாலும் காலக் கிரமத்தில் ஸ்தாபனமாகிவிடார். (Institution) இவரை சம்ஸ்கிருத கவியான பர்த்ருகரிக்கு ஒப்பிடலாம்.

ஔவையாரின் ஜீவிய சரித்திரத்திற்கு ஆதாரங்கள் மிகக்குறைந்தவையே. விநோதரஸமஞ்சரி போன்ற புத்த கங்களில் சில கதைகள் சொல்லப்படுகின்றன. கவிதைகளில் சிலவும் சங்க இலக்கியங்களில் சில பாடல்களும் அவர் வரலாற்றைத் தொடுக்க ஓரளவு ஆதாரமளித்திருக்கலாம். ஆனால் இவைகளை மட்டும் வைத்துக்கொண்டு நன்கு இணைக் கப்பட்ட ஒரு ஜீவிய சரித்திரத்தை உருவாக்கியிருப்பது மணலைக் கயிறுகத்திரிக்கும் ஆற்றலைப்போல் வியக்கத்தக்கது. அக்கயிறைக்கொண்டு உலகத்தையே கட்டிவிட்டார் ஸ்ரீமான் வாஸன் அவர்கள்.

ஔவையார் படம் தமிழ்ப்படக்கலையின் சிறுமையை அகற்றி அதற்குப் புத்தம்புதிதாக பெருமையைத் தந்திருக் கிறது. சிலகாலமாகத் தமிழ்ப்படக்கலை மாசுபடிந்து பண் புடையவர் ஒத்துக்கொள்ள முடியாத நிலைக்கு வந்துவிட்டது. மற்ற பாஷைகளில் வெளிவந்த படங்களைக்காட்டிலும் கீழ்த் தரமானவைகளாக அவை வெளிவந்தன.

அதற்குக்காரணம் கதையை உருவாக்குவதிலும் வசனம் புனைவதிலும் தேர்ச்சி பெற்ற கலைஞர்களை ஈடுபடுத்த வேண்டும் என்ற சிரத்தை படமுதலாளிக்கு இல்லாமலிருந் ததே. ஸங்கீதம், நடிப்பு, காட்சிகளின் தயாரிப்பு, புகைப்படம் பிடித்தல், முதலியவைகளில் சிறந்தவர்களின் உதவிகோரித் தாராளமாகப் பணத்தைச் செலவழிக்கும் முதலாளிகள் கவிதை மேதையுள்ள ஒரு கதை ஆசிரியனைத் தக்க ஊதியம் அளித்துப் பயன்படுத்திக் கொள்ளாமல் கதை வசனம் யார் எழுதினால் என்ன என்ற உபேக்ஷை மனப்பான்மையுடன்

இருந்து வருகின்றார்கள். இதையெல்லாம் குறிப்பிட்டு நான் பலவருஷங்களுக்கு முன் பாரத மணியில் ஒரு வியாசம் எழுதினேன்.

இதுபோன்ற மற்றும் சில குறைகளால் மதிப்பிழந்த தமிழ் நாட்டுத் திரைப்படங்களில் உதித்த ஔவையார் படம் தன் இனத்திற்கே ஒரு அந்தஸ்தைத் தந்துவிட்டது. அது களங்கமற்ற வசனநடை அமையப்பெற்ற கட்டுக்கோப்பான கதை உருவமும் கொண்டு அரிய கலை நுட்பங்களின் சீரிய கருத்துக்களையும் உள்ளடக்கி மதிவாணரால் பெரிதும் மதிக்கத்தக்க பண்புடன் விளங்குகிறது.

ஔவையார் கவியரசி மட்டுமல்ல. ஒரு புனிதமான ஆத்மா. (saint) தெய்விகக்களை பொருந்திய விதுஷி. ஜன்மாந்தர ஸுகிருதத்தால் பருவம் வந்ததும் அவருள்ளத்தில் பிராசீன வாஸனை விழிப்புற்றது. மணம் செய்து கொள்ள விரும்பவில்லை. விநாயகக் கடவுளிடம் மூப்பை விரும்பி ஔவைப் பாட்டியானார். இந்த அமைப்பு நாடகக் கலையில் முக்கியத்துவம் பெற்றது. இது கலை மேதைமட்டுமே தரக்கூடிய அற்புத இணைப்பு. ஸ்ரீரமணர், விவேகானந்தர், ராமகிருஷ்ணர் முதலியவர்கள் சரித்திரத்தைப் பார்த்தாலும் பூர்வஜன்மத்தின் ஞானோதயம் திரும்பவந்தடைய வயதின் பரிபாகம் அவசியம் என்பது தெரியவரும்.

ஆசாபாசங்களையறுத்த தமிழ்ப் பாட்டி கடவுளைத் தேடிக்கொண்டு பலநாடுகளில் திரியலானாள். உள்ளே வசிக்கும் அந்தர்யாமியை உலக மக்களிடமும் அவர் பார்க்கத் தலைப்பட்டார். அன்புமயமானார். பக்திமயமானார். சன்மார்க்கத்தை உபதேசித்தார். கொடிய செயல்கள் புரிபவர்களைக் கடிந்துபேசினார். குடும்பக் கலகங்களை அகற்றிப் பெண்கள் தர்மத்தைப் பறை அறைவித்தார். கருமிக்கு வயிற்றுவலி தந்து அவனை கொடையாளி ஆக்கினார். கவிதைச் சுவையறியாது பாண்டித்ய கர்வங் கொண்டு குற்றங்கூறும் புலவர் கூட்டத்தில் திருவள்ளுவரின்

அருள்வாக்கை அரங்கேற்றி வைத்தார். நற்குணங்களுக்கும் ஈகைக்கும் இருப்பிடமான பாரி வள்ளலிடம் பக்ஷம்காட்டி அவன் குடும்பத்தை பாதுகாக்கும் பணியை மேற்கொண்டார். அறநெறியைக் குழந்தைகளுக்கும் உபதேசம் செய்தார். சென்ற இடமெல்லாம் தூயனவற்றை வளர்த்தும் துச்ச குணங்களை நேர்மைப்படுத்தியும், நீதிநெறிகளைப் புகட்டி மன்னர்களையும் மக்களையும் நல்வழியில் திருப்பியும், பலவித சேவைகள்செய்து அதன்மூலம் கடவுட் பணியாற்றிப் பின்பு களைத்துப்போய் "இனி எவ்வளவு காலம் நான் இந்த சரீரத்துடன் நடமாடித் திரிவேன் ஈசா என்னை ஆட்கொள்ள மாட்டாயா" என்று மனம்நொந்து நடை தளர்ந்து ஔவையார் ஈசனைப் பிரார்த்திக்கும்பொழுது முருகக் கடவுள் காட்சியளித்து ஞானோபதேசம் தந்து சிவ சாயுஜ்யத்துக்கு வழிகாட்டுகிறார். பின்பு ஔவையார் கயிலைப்பதியின் சாயுஜ்யமுத்தியை அடைகிறார்.

ஔவை விக்ந விநாயகரின் அருள்பெற்று அடைந்த வெற்றிகளெல்லாம் உலக வாழ்க்கையில் வெற்றிகள். உலகப் பற்று விட்டுப்போனவுடன் ஞானோதயத்தை யருளியது சுப்பிரமண்யக் கடவுள். அவர் தன் பிதாவான பரமேஸ்வரனுக்கே தத்துவோபதேசம் செய்தவர் அல்லவா? மேலும் ஓங்காரவடிவம் உடையவர் விநாயகக் கடவுள். ஓம்கார உபாசனையால் ஞானம் சித்திக்கிறது. ஞானத்தினால் மோட்சம் கிட்டுகிறது. என்ற சாஸ்திரதத்துவம் இக்கதைப்போக்கில் வெளியாகிறது. இப்படம் சாதாரணஜனங்களுக்கு அதிசய காட்சிகளைத் தருவதுடன் அறிவாளிகளின் சிந்தனையை ஊக்குவிக்கக் கூடிய கருத்துச்சிறப்புக்களையும் உடையதாயிருப்பது போற்றத்தக்கது.

இவ்விதமாக கலை நுட்பங்களையும் ஆத்ம தத்துவங்களையும் பொருத்தத்தகுதிவாய்ந்த ஒரு உயரிய வரலாற்றைத் தேர்ந்தெடுத்து அதை அழகுபடுத்தி மேன்மைப்படுத்தி இசை இன்பத்தையும் காட்சி வைபவங்களையும் கலந்து நிகரற்ற திரைப்படத்தைத் தயாரித்துத் தமிழ்நாட்டில் கோடிக்

கணக்கான ஜனக்களுக்கு உற்சாகமும் அறிவும் ஊட்டி இதுவரை யாரும்பெருத பெரும்வெற்றிபெற்ற ஸ்ரீமான் வாசன் அவர்களை எவ்வளவு பாராட்டினலும் நமக்குப் போதுமென்று தோன்றுமோ?

சிறு நாடகம்:

ஔவையார் பெரியவர்கள்முதல் குழந்தைகள் வரைக்கும் அறிவு வழங்கும், ஒரு அற்புதச் சித்திரம். ஆத்திச்சூடி, நல்வழி போன்ற ஒருசிறு நூல்களைப் படித்து அறிந்து கொள்வதைவிடச் சுலபமாகப் படத்தைப்பார்த்து அறிந்து கொண்டனர் குழந்தைகள். ஔவை குழந்தைகளுக்கு ஆத்திச் சூடி கற்பிக்கும்காட்சியை தொடக்கப்பள்ளி மாணவியர் நடித்துக்காட்டினர். S. குருமூர்த்தி என்ற கல்லூரி புகுமுக வகுப்பு மாணவர், ஔவையாகத் தோன்றி சபையோரை அதிசயத்திலாழ்த்தினர். பின் மாணவ மாணவியர் சார்பில் M. ஜெயம் என்ற மாணவியால் திரு. வாசன் அவர்களுக்கு ஒரு நன்றியுரை வாசித்தளிக்கப்பட்டது.

வாசன் அவர்கள் பதிலுரை:

பெரியோர்களே! நண்பர்களே! வணக்கம். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்களது அன்பே இங்கெல்லாம் பிரதிபலிக்கிறது. எல்லாம் இதுபோன்ற ஞான பீடங்களிலிருந்து வீசும் அருளொளியே காரணம், என் படத்துக்கு ஒரு வெற்றி என்றால் அது என்னால் அல்ல. என் சகாக்களாலல்ல. ஞானபீடங்களின் அருளொளியும், திருவருளுமேயாகும் என்பதை மறக்கமுடியாது. நான் மகா சந்நிதானமவர்களிடம் அளவளாவியபோது அவர்கள் கூறியருளிய ஒரு சொற்றொடர் என்னைச் சிந்திக்கவைத்தது. அவர்கள் சொன்னார்கள், 'வில்வாரண்யமே தருமபுரம்' என்று; எனக்கு இந்தப் பாராட்டெல்லாம் எனது ஊரிலே பெறுவதுபோன்று தோன்றிற்று; ஆம் நான், திருத்தருப்பூண்டியிலே பிறந்து வளர்ந்தவன், திருத்தருவென்பது வில்வமரம். எனவே

திருத்தருப்பூண்டியும் வில்வாரண்யம், இத்தருமபுரமும் வில்வாரண்யமாமென்று கேட்டு இவ்வாறு எண்ணினேன்.

நல்லது செய்தால் அதனைப்பாராட்டுதல் தமிழர் வழக்கம். என்னுடைய ஔவையார் படம் இவ்வளவு அமோகமான வெற்றி பெற்றிருக்கிறதென்றால் அதற்கு விடாமுயற்சியே காரணமாகும்.

**ஸ்ரீமதி சுந்தராம்பாள் இல்லாவிட்டால்:**

என்னதான் விடாமுயற்சியிருந்தாலும், ஆயிரம் வாசனாலும், ஆயிரம் சுப்புவாலும் ஸ்ரீமதி K. B. சுந்தராம்பாள் அவர்கள் இல்லையானால் ஔவையார் இத்தனை வெற்றிபெற்றிருக்க முடியாது. என் தாயார், ஔவையார் வேடந் தாங்கி நடிப்பதற்கு ஸ்ரீமதி சுந்தராம்பாளே ஏற்றவர் என்று எனக்குக் கூறினார். ஆகவே அவர்கள் இல்லையானால் ஔவையார் அமோக வெற்றிக்கும் பாராட்டுதலுக்கும் உரித்தாக இருந்திருக்காது என்பது நிச்சயம்.

**ஔவை ஒரு தத்துவமே:**

ஸ்ரீ மகாலிங்க சாஸ்திரிகள் கூறியதுபோல ஔவை ஒரு தத்துவமேயாகும். நான் இதுவரைக்கும் 22 படங்கள் வரை பிடித்துள்ளேன். ஒன்றுக்காவது இவ்வளவு பாராட்டு ஏற்பட்டதில்லை. இப்படத்தைப் பிடித்த பிறகே பக்தி உணர்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது. எல்லாப் பாராட்டும் தமிழுக்கே. சமயத்துக்கே. தமிழ் மக்களுக்கே ஆகும்.

என்று திரு. S. S. வாசன் அவர்கள் பதிலளித்தார்கள். அடுத்து திரு. கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் பேசினார்கள்.

**கொத்தமங்கலம் சுப்பு அவர்கள்:**

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற குறிக்கோளுடையது இத்திருமடம். வடக்கே காசிவரைக்கும்

குமரகுருபர அடிகள் மூலமாகச் சமயம் வளர்த்த பெருமை யுடையது. இந்த ஔவையார் படத்தால் ஸ்வாநுபவத்தி லேயும் சில நன்மைகள் உண்டாயின.

ஔவையார் பாடிய பாடல்கள் நம் இரத்தத்திலே ஊறியவை; நாமெல்லோரும் பாலோடு கலந்து உண்டவை;

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனிநுடங்காது—பூக்கொண்டு
துப்பார்திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு"

ஔவை எல்லோர்க்கும் பெருமை அளித்தவர். தமிழ் நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபட்டவர். எல்லாப்பிள்ளை களையும் ஒன்றுபடுத்தி வைத்தல்தான் தாய்க்கடமை. ஔவையார்படத்தை எல்லாக் கட்சியாளர்களும் பாராட்டி னார்கள். தெய்வநிந்தனையைத் தொழிலாகக்கொண்டவர்களும் பாராட்டினார்கள். நம்நாட்டுப் படித்தவர்களுக்கு அலெக் சாண்டர் பிறந்தநாள் தெரியும். ஆனால் ஔவையார் பிறந்த நாள்தெரியாது. நாங்களெல்லாம் கருவிகள்; எங்கள் தலைவர் திரு. வாசன் அவர்கள்தான் கருத்தா. எல்லோருடைய அன்புதான் வேண்டும். கண்ணன், சகாதேவனால் கட்டுப் பட்டது அன்புக்கு. பேச்சின் ஆழம் அன்பாக இருந்தால்தான் அதற்கு வலிமை உண்டு. ஔவை என்னகூறினார்? அன்பை விதை. அன்பை அறுவடைசெய் என்றார். ஔவையின் அத்தகைய அன்புப் பாடல்கள் என்றும் இளமை குன்றாதன. ஔவையே

"என்றும் கிழியாதென் பாட்டு"

என்று கூறியுள்ளார். 'நல்லாரோடு இணங்கி யிருப்பதுவும் நன்று' என்றார்; எங்கள் முயற்சி வளரவேண்டுமானால் அதற்கு உங்கள் எல்லோருடைய உள்ளங்கலந்த ஆசியே வேண்டும். என்று பேசிமுடித்தார்.

## வாழ்த்துச் செய்திகள் :

அடுத்ததாக, வித்துவான், ஸ்ரீமத் மாணிக்கவாசகத் தம்பிரான் சுவாமிகள் வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்கள். மதுரையாதீனம் தவத்திரு. சோமசுந்தர தேசிக பரமாசாரிய சுவாமிகள் அறநிலைய அமைச்சர் கனம் K. வேங்கடசாமிநாயுடு அவர்கள், திரு. பெ. திருஞான சம்பந்தம் M. A., L T., அவர்கள், குடந்தை திரு. கந்தசாமி மூப்பனார் அவர்கள், திரு ஆரோக்யசாமிப் பிள்ளை அவர்கள் முதலிய பலர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

## நன்றி உரை

அடுத்து ஆதீனக் கீழ்த்திசைப் பல்கலைக்கல்லூரித் துணைத்தலைவர் வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் அனைவருக்கும் நன்றியை ஆதீனக் கல்விநிலையங் களின் சார்பில் தெரிவித்துக்கொண்டார்கள்,

## பாரட்டு விருந்து

நடுப்பகலில் வாசன் அவர்களுக்குப் பாராட்டு விருந்து; நடைபெற்றது. நாற்பதுவகையான உண்டி உணவுகளுடன் நடுப்பகலில் விருந்தளிக்கப்பெற்றது. உணவுப் பொருள்களின் பட்டியலும் அச்சிட்டு வழங்கப்பெற்றிருந்தது.

## விருந்துக்குப்பின்:

விருந்துக்குப்பின் திரு, S. S. வாசன் அவர்களும் பிறரும் மகாசந்நிதானமவர்களைக் கண்டு அளவளாவித் தஞ்சைக்குப் பயணமாயினர்.

### தருமபுர ஆதீனக் கல்வி நிலையங்களின் சார்பில்

# திரு. S. S. வாசன் அவர்களுக்கு

## அளித்த பாராட்டுரை.

படத்துறையில் தக்கதொரு வழிகாட்டியாகத் தமிழ் நாட்டார்க்கு இருப்பது ஜெமினி ஸ்டுடியோ என்பதை யாவருமறிவர். சமயக் கருத்துக்களைத் திரைப்படத்தின்மூலம் மக்களுக்கு எடுத்துக்காட்டிய தங்கள் வருகை எங்கள் கல்வி நிலையங்களுக்கே ஓர் தனிப்பெருமையாகும். ஸ்ரீ கிருஷ்ண பகவான் பகவத்கீதையிலே, எவ்வெப்போது நாட்டில் ஆஸ்திக உணர்ச்சியும் தர்மசிந்தனையும் நசித்துப்போகின்றனவோ அப்போது நான் அவதரிப்பேன் என்று கூறியதற்கிணங்கத் தெய்வபக்தியும் பிறவும் குறைந்துவருகின்ற இக்காலத்திலே தாங்கள் ஆஸ்திக உணர்ச்சியையும் தர்மக் கொள்கைகளையும் நிலைநிறுத்தும்படியான பணியில் ஈடுபட்டிருப்பது குறித்துத் தங்களை மிகமிகப் பாராட்டுகிறோம்.

மக்கள் கருத்து எப்படியெல்லாம்மாறி எங்கெல்லாம் செல்கிறதோ அப்படியெல்லாம்மாறி அங்கெல்லாம் சென்று பணிசெய்து அவர்களைத் திருத்தவேண்டிய கடமை அறிவுலகத்துக்கு வந்திருக்கிறது. மக்கள் எல்லாவற்றிலும் ஈடுபடுவதைக்காட்டிலும் படக்காட்சியில் அதிகமாக ஈடுபடுகிறார்கள் என்பதைக் கண்டதும் அத்துறைக்கு விரைந்தோடி அவர்களுக்குத் தக்கவழிகாட்ட முன்வந்து, வெற்றியுங்கண்ட தங்களைப் போற்றுதார் யார்?

தாங்கள் தயாரித்த **ஔவையார் சித்திரம்** அறிவுக்கு வளர்ச்சிதருகின்ற ஒப்புயர்வற்ற சித்திரம். ஔவையார்க்குச் சோழன் தருகின்ற வரவேற்பு தமிழ்நாட்டுப் புலவர்களுக்கே பெருமைதருகின்ற சிறந்த இடமாகும். "புலமை நேர்மைக்கே ஆதரவளிக்கும்" என்ற உண்மையை மூவேந்தர்களோடு தொடர்புபடுத்திக் காட்டும் காட்சி மிக உயர்ந்ததாகும். இவ்வாறு தங்களது தமிழ்ச் சித்திரத்தின் பெருமையை எடுத்துச்

சொல்லிக்கொண்டே போனால் காலம்பற்றாது. இப்படித் தமிழினத்துக்கும் தமிழ் நாட்டுக்கும் தமிழ் மொழிக்கும் பெருமைதரக்கூடிய வகையில் உயரிய படம் தயாரித்து உலகுக்கு உதவிய தங்கட்குத் தமிழ்மக்களின் நன்றி என்றும் உரியது!

சிறுகுழந்தைகள்முதல் வயதுவந்த பெரியோர்வரை, ஒவ்வொருவாரத்திலும் சனிக்கிழமை காலை ஐந்துமணிக்கே நாட்கடனையெல்லாம் முடித்துக்கொண்டு யாரையோ வரவேற்கத் தயாராகும் காட்சியைத் தமிழ்நாட்டு ஊர்கள் தோறும் தவறாது காணுகிறோம். அவ்வரவேற்பு எதற்கு? தங்களது தனித்த சிறப்புடைய **ஆனந்த விகடன்** பத்திரிகைக்குத்தான் என்று கூறவும்வேண்டுமோ? மனிதசமுதாயத்தின் துயரவாழ்க்கையில் துயர்துடைக்கும் குளிகை அது. அதிலே அரசியல், சமூகச் சீர்திருத்தம், கடவுள் வழிபாட்டு முறை எல்லாம் இருக்கின்றன. அல்லல்களுக்கிடையே ஆனந்தம் தரும் கம்பனின் கவிதைச்சித்திரமும் இருக்கிறது. இத்தகையதொரு பத்திரிகையின் மூலமும் தமிழ் மக்கள் நெஞ்சில் தக்கதொரு இடம்பெற்றுவிட்ட தங்களை மிகமிகப் பாராட்டிப் பணிவன்போடு இந்த மலரைச் சமர்ப்பிக்கிறோம்.

## ஆதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைத் தொடக்கப்பள்ளியின் மாணவ மாணவிகள் அளித்த நன்றியுரை.

பாட்டிகளுக்கு எங்களிடம் பிரியம் அதிகம். எங்களுக்கு பாட்டி யென்றால் நிரம்பப்பிடிக்கும். பாட்டி கதை சொல்லுவாள். நீதிமொழி சொல்லுவாள். அவ்விதமாக எங்களுக்கு நீதிமொழி சொல்லிய ஔவைப் பாட்டியைப் பற்றிக் கேட்டிருக்கிறோம். பார்த்ததில்லை. அந்த ஔவையை எங்களுக்குத் தாங்கள் கொண்டுவந்து காட்டிவிட்டீர்கள், அதற்கு எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# தருமபுர ஆதீன சமயப் பிரசாரம்

20-2-54 சாலியமங்கலம் 7-30 மணிக்கு வள்ளூர் தெருவில் தருமபுர ஆதீன சமயப் பிரசாரகர் திரு. மருள்நீக்கியார் "வள்ளுவர் விழா"வில் 'வள்ளுவர் வகுத்த வழி' என்ற பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

21—2—54 அம்மாபேட்டை இராமலிங்க சுவாமி மடாலயத்தில், 'சம்பந்தர்' என்னும் பொருள்பற்றி திரு. மருள் நீக்கியார் சொற்பொழிவாற்றினர்.

3—3—54 சிவராத்திரியை முன்னிட்டு அம்மாபேட்டை சிவநேசத் திருக்கூட்டத்துடன் காலை 6½ மணிக்கு திருவலஞ்சுழி வெள்ளை விநாயகர் சன்னிதியில், 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்ற தலைப்பின்கீழ் சொற்பொழிவாற்றினர்.

காலை 9½ மணிக்கு சுவாமிமலை சுவாமிநாத சுவாமி தேவஸ்தானத்தில் திரு. மருள்நீக்கியார் 'காலன் எனை அணுகாமல் உன திருகாலில் வழிபட' என்ற பொருள்பற்றிப் பேசினர்.

பகல் 12 மணிக்கு திரு. இன்னம்பர் எழுத்தறியும் பெருமான் சன்னதியில், 'எழுதும் கீழ்க்கணக்கு' என்ற பொருள் பற்றி திரு. மருள்நீக்கியார் பேசினர்.

மாலை 6 மணிக்கு திருப்புறம்பயம் சாட்சிநாத சுவாமி தேவஸ்தானத்தில் மதுரை ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் தலைமையில் திரு. மருள்நீக்கியார் மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினேர்க்கு வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே என்ற பொருள்பற்றிப் பேசினர்.

இரவு 10 மணிக்கு விசயமங்கை விசுவநாதசுவாமி தேவஸ்தானத்தில் திரு. மருள்நீக்கியார் அவர்கள் அருச்சுனன் தவநிலை என்னும் பொருள்பற்றிப் பேசினர்.

இரவு 1 மணிக்கு திருவைகாவூர் வில்வனாத சுவாமி தேவஸ்தானத்தில் திரு. மருள்நீக்கியார் தலைமையில் வலங்கைமான் இராமய்யா பாகவதர் கதாகாலக்ஷேபம் நடந்தது. வீதிகளில் பதிகங்களுக்கு விளக்கவுரை பற்றி சொற்பொழிவு நடந்தது தஞ்சை சிரோமணி. பண்டித திரு. A. S. ரெங்கனாத ஆசாரியார் அவர்கள் வந்திருந்து யாவரையும் வரவேற்று, பிரசங்கம் நடப்பதற்கு ஆவன செய்திருந்தது பாராட்டற்குரியது.

4—3—54 பகல் 12 மணிக்கு சுந்திரப்பெருமாள் கோவில் சௌந்திரராஜப் பெருமாள் கோவிலில் திரு. மருள்நீக்கியார் அவர்கள் மண்ணில் பிறந்தார் பெறும் பயன் என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

திருக்குவளையில்: தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்குவளை தேவஸ்தானத்தில் நடந்த சுந்தரர் நெல்மலைபெற்ற திருவிழாவை ஒட்டி சமயப் பிரசாரங்கள் நடைபெற்றன. 17—2—54 அன்று திருக்கருகாவூர் சமயத்தொண்டர் திரு. மருணீக்கியர் அவர்கள் சுந்தரர் செந்தமிழ் பற்றிப் பேசினார்கள். 18—2—54 அன்று கீர்த்தன குலசேகர எம்பார். ஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்கள் 'சுந்தரர்' என்பதுபற்றிக் கதாகாலக்ஷேபம் செய்தார்கள். 19—2—54 அன்று ஆதீன சமயப் பிரசார கோஷ்டியின் சார்பில். வித்துவான் திரு. சொ. சிங்காரவேலன், திரு. ச. க. தியாகராசப்பிள்ளை, திரு. மருணீக்கியார், வித்வான், திரு. V. S. குருசாமி வித்துவான், திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் ஆகியோர் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தேவஸ்தானம் கட்டளை விசாரணை, ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் மூன்று நாட்களிலும் தலைமை வகித்துச் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

# SRI GURUGNANASAMBANDAR.

[By R. Ramachandran, Journalist Tirucadaiyur.]

In the early 16-th century, there arose in a respectable Karkatha Vellala family at Srivilliputhur, a boy named Gnanasambandam. His parents Sri Subramania Pillai and Srimathi Meenakshi Ammal were great devotees of Siva. They gave their son Gnanasambandam a liberal education embracing all subjects including religion. Even in his early stage the boy showed remarkable traits of character and shot-up prominently in the world.

One day when the boy was about 16 years old, his parents started on a pilgrimage with him to Madurai to fulfil a vow to their family deity Sri Chockanatha. They happened to stay there for some time; and when they started back to home their son showed signs of hesitation to follow them. He stood between filial affection and high devotion to Sri Chockanathar, and he was over powered by the latter. His parents themselves being great devotees, allowed their son to have his own way overcoming their parental affection.

At Madurai, he was spending his whole time in the worship of Sri Chockanathar, taking his bath in the Portramarai tank and finishing his daily rituals (அனுஷ்டானங்கள்) on its bank. As usual when he had been to his bath his attention was unusually drawn towards the manner in which devotees were performing their puja. Their concentrated and all-absorbing manner kindled a desire in him to overreach them in their devotion. Immediately he thought of nothing else except to run and pray before Sri Chockanatha for early attainment of his object. He went before Sri Chockanatha and prayed that he might be shown his grace in this respect.

The prayer met with success. Sri Chockanathar showed his grace by informing him in his dream that he would find a Sivalingam (Sri Chockanatha) in a certain place of the Portramarai tank, and he could take it and perform puja as he desired. The dream naturally made him sleepless, and he awaited the dawn of day anxiously. His anxiety could not make him wait for the day break. In the early hours of the morning and even before twilight commenced, he went to the tank and found the Sivalingam in a box on the particular spot. He took it and went directly to the shrine of Sri Chockanatha and prayed that he might be blessed with a Guru, who would initiate him in Gnanaopodesam and in the worship of Sivalinga. This prayar also was granted. He was directed to go to Guru Sri Gnanaprakasa Desigar at Tiruvarur. He (Sri Chockanatha) did not stop with that. He appeared before Sri Gnanaprakasa Desigar at Tiruvarur also and informed him of this matter on the same night.

Sri Gnanasambandar started for Tiruvarur where his Guru Sri Gnanapragasa Desigar was also eagerly awaiting the arrival of his disciple. On reaching Tiruvarur Sri Gnanasambandar's eagerness to see his guru became stronger and he first went to the temple of Sri Thiyagaraja and offered his worship. The nearer the moment came the greater was his anxiety to see his guru. He made the customary round of the inner precincts of the temple with a searching and anxious look for his guru. He finally reached Sri Dakshanamurthy temple in Sidtheeswaram where to his great joy he found his guru and lost himself in great ecstasy. Both of them were able to understand each other quickly by the power of intuition. He was immediately initiated in Gnanopadesam and in the worship of Sivalinga.

From that moment forward, Gnanasambandar became his disciple at Tiruvarur and followed his path strictly. Guru Sri Gnanaprakasa Desigar used to visit Sri Thiyagaraja temple every day and used to stay there for worship of midnight puja with all his disciples. It so happened one day

3-41



that when they started returning home, the torch-bearer was not available. Sri Gnanasambandar rushed to assume that role with pride. On reaching the front of his house, he (Gnanaprakasa Desigar) asked the torch bearer (his disciple Sri Gnanasambandar) that he might stay there, and he went inside. As a true disciple, and in obedience to the command, Sri Gnanasambandar stood the rest of the night in the street with torch in hand. During that period there was a heavy downpour of rain. That rain did not fall to a distance of a few yards around Sri Gnanasambandar. As usual Guru Sri Gnanapragasa Desigar's wife came out in the early morning to clean the house front. She saw the disciple standing with the torch in hand and also freed from being drenched by rain. She was struck with wonder and immediately went inside to inform her husband of this. He came out and saw with his own eyes not only this but also that the water flowing in the street had shown a similar margin in his case by being away for a few yards surrounding him. He embraced him with both hands and explained to him that he had become eminently fit and deserving to be a guru himself. He further made him understand that he had freed him from the discipleship and declared that inasmuch as he had become a guru, he might go wherever he liked and initiate those fit persons who go to him for Gnanaopadesam and strive after preserving Saiva religion and saiva philosophy. While submitting himself to his command he (Sri Guru Gnanasambandar) made a pithy reply in a stanza which meant:- "Just as a bullock is not consulted to determine the quantity of luggage for carriage; so also shall I remain situated with regard to the body I possess."

However, the separation was not a welcome feature in his case; on the other hand his great desire was to remain always with his guru till the soul finds time to separate itself in its natural course. But the things were not ordained to remain so. Guru Sri Gnanaprakasa Desigar expressed his feelings and desire in a most endearing terms as follow:- "I really

appreciate your commendable attitude in all respects. You have been an ideal disciple right through. But it is high time that you should assume an independent role, for which I desire that you should go and find your abode at Dharmapuram which is 20 miles from here and lies on the bank of Cauvery. There is a big forest full of Vilva (வில்வமரங்கள்) trees, wherein you will find a temple called Sri Dharmapuriswarar and Abayambikai, which was worshipped by god of death (யமதர்மர்) and sage Agastya".

In obedience to the command of his guru he started immediately for Dharmapuram visiting the pilgrim centres on the way. Reaching Dharmapuram he found an abode (ஆசிரமம்) for him on the western side of the temple. There he was guiding those, who came in contact with him in the ways of gnanam and trying to make them fit for initiation in Gnanaopadesam. He also wrote several books.

"சிவபோகசாரம், முத்தி நிச்சயம் திரிபதார்த்தரூபாதி
தசகாரிய அகவல், சோடசகலாப் பிரசாத ஷட்கம்"

The affairs of the temple were then managed by the disciples of sage Agastya. The superior qualities of Sri Gnanasambandar attracted their notice. They found in him a proper substitute for them. The temple and its properties were then handed over to him for their upkeep and management by him during his life time and by his nominee after him. To aid the progress of affairs, they taught Sri Guru Gnanasambandar the secrets of Alchemic Science also. Sri Guru Gnanasambandar accepted the gift and began to conduct the affairs in a deserving manner to be praised by all. The temple buildings were renovated and the festivals were celebrated with great eclat.

On one fine morning Sri Gnanasambandar started on a pilgrimage to Chidambaram to worship Sri Nataraja. There he stayed in that thousand pillared hall (ஆயிரக்கால் மண்டபம்) absorbed himself in perfect Gnana Yoga both day and night. The Yoga gained its purpose quickly. In appreciation of his devotion and Bakthi, Sri Nataraja sent

3243



his blessings through his consort Sivakami. He felt immense joy for the graciousness shown to him and returned to Dharmapuram. There by his gracious look he was able to convert the inherent nature of animals slso. During his time the wild animals in the forest were living with domestic animals like members of the same family shedding their hatred and enmity.

He was struck by the power of intuition, that his last days in the mundane world were approaching. He arranged for the construction of a permanent resting place for his body underneath the shrine of Gnanapuriswarar. Disciple Sri Anandaparavasa was initiated to be his successor and invested with the entire charge of the Adhinam. His last words of command to his successor were as follow:- "You are directed to remain in my place initiating Gnanaopadesam to the deserving followers, to offer daily worship to Sri Chockanathar, and to strive after the preservation of Siva temples and the religion of Saivaism in this country". He them entered into his Samathi and disappeared.

## 2. Sri Ananadaparavasa Desikar

When the announcement was made by Sri Gnanasambandar that Sri Anandaparavasa Desikar would succeed him, he did not reply. In fact, he did not know how to frame a reply. The school of discipline in which he was brought up, and the high reverence in which he held his guru had sealed his lips. At that time he was at the zenith of Sivagnana anubavam. In his case the attainment of Gnana Yoga Samathi was too rapid. Without knowing what he was doing he moved in the direction where his guru had gone. He prostrated before the Samadhi and stood worshipping his guru for some time. Then he went towards the west from the Samadhi to a distance of a few yards and there he stood facing the east. Whence he began to offer his worship concentrating his mind entirely on the top most point of his Guru Samadhi and became absorbed in great gnana yoga.

344.

# கோசார பலன்

ஜோதிஷார்ணவம், பிர்மஸ்ரீ. முத்துசோதிடர், திருவிடைமருதூர்.

(விஜய-ஞு பங்குனி-மீ 1-உ முதல் 30-உ முடிய)
(13—3—54 முதல் 12—4—54 முடிய)

**1. மேஷம்:** அசுவதி, பரணி, கார்த்திகை ¼.

அசுவதி நான்கு பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் பூரண சுபமளிக்கும். வெகுகாலம் எதிர்பாராத காரிய சாதனம், தொழில் விருத்தி, மேலோர் பெரியோர் அன்பு உத்யோகலாபம், விவசாய பலபிராப்தி, கூபதடாகநிர்மாணம் கட்டட வேலைகள், தூர தேசத்திலிருந்து பந்துமித்திர சேர்க்கை அடைதல், ஈசுவர பக்தி அதிகரித்தல் மனம் சாந்தியடைதல் முதலிய சுபங்கள் நடைபெறும். பரணி முதல் பாதத்துக்கு மங்கள காரியங்கள் ஏற்படல் மனசந்தோஷம் ஆடையாபரணச் சேர்க்கை, நஷ்டதன பிராப்தி முதலிய சுபங்களும் நடைபெறும். பரணி 2-ம் பாதம் மிசிரமாய் நடக்கும். 3 4 பாதங்கள் வியாதியால் மிகுந்த கஷ்டத்தையும் சத்துருக்களுடைய பாதையையும் தன்வாக்கினுலேயே எல்லா வித அசௌகரியங்களை தேடிக் கொள்ளுதலும் ஏற்படும், தெய்வ பலமுள்ளவர்கள் ஜயிப்பார்கள். புதனும் வியாழனும் நலன் தரும்.

**2. விருஷபம்:** கார்த்திகை ¾, ரோஹிணி, மிருகசீரிஷம் ½

கார்த்திகை முக்காலும் சந்தோஷகரமாய் இருக்கும். ரோஹிணி பூரா நான்கு பாதங்களும் சந்தோஷத்தை பல விதத்திலும் உண்டுபண்ணும். ஆனல் மாதம் பூரா இராது. மத்தியபாகம் பத்து தினங்கள் உத்சாகமாய் இருக்கும். நஷ்டதனம் வரும், கீர்த்திகிடைக்கும் பெரியோர்கள் ஆசியும் அன்பும் உண்டாகும், மிருகசீரிஷம் முன்னரை கஷ்டசுகம் கலந்து ஓடும், வியாதி ஏற்படும், கடன் நீங்கும், மங்கள காரியங்கள் ஏற்படும், தொழில் ஓங்கும் வியாபார விருத்தியாகும், புதன் வியாழன், சுபம் தரும்.

**3. மிதுனம்:** மிருகசீரிஷம் ½, திருவாதிரை, புனர்பூசம் ¾

மிருகசீரிஷம் திருவாதிரை இரண்டு நக்ஷத்திரபலனும் உழைப்பின்பேரில் நலன்தரும், கீர்த்தி ஏற்படும், பெரிய காரிய சாதனைகள் செய்து மனம் சந்தோஷமடையும். மாதக் கடைசியில் சிற்சில கவலையும் காட்டும், புனர்பூசம் மூன்று

3H5



பாதங்களும் நலன் இராது ரோகமும் சத்துருக்களும் விருத்தியாகும். திருட்டு பயமும், அக்னி பயமும் உண்டாகும். துஷ்ட சஹவாசத்தால் புத்திமாறி அழியாத அபகீர்த்தியை உண்டு பண்ணும், எத்தனையோ எதிர்பாராத கஷ்டங்களையும் கொடுக்கும், கடவுள்கிருபை உள்ளவர்களாகில் ஜயிப்பார்கள். சனி செவ்வாய் அசுபத்தையும், புதன் வியாழன் சுபத்தையும் தரும்.

**4. கடகம்:** புனர்பூசம் $\frac{1}{4}$, பூசம், ஆயில்யம்.

புனர்பூசம் காலும் பூசமும் சென்ற மாதம்போலவே தான் இருக்கும், அதிகப்படியாக சில உத்பாதங்களை அனுபவிக்கச் செய்யும், ஆயில்யம் பூரண சுகத்தை அடையும். கிரய விக்ரய லாபம், கடன் நிவர்த்தியாகுதல், தெய்வபலம் பிரகாசித்தல், பெரியோர் அன்பு, குடும்பவிருத்தி முதலிய சுபங்களைத் தரும், வியாழன் வெள்ளி சுபவாரமாகும்.

**5. ஸிம்மம்:** மகம், பூரம், உத்திரம் $\frac{1}{4}$.

மகத்துக்கு விசேஷ நன்மதிப்பும் ஞானமும் வெற்றியும் கிட்டும், பூரம் நான்கு பாதங்களும், சதா அலைச்சலையம், பாவ சிந்தையையும் உண்டுபண்ணும், உத்திரம் முதல்பாதம் சுகம் துக்கம் சமமாக நடக்கும் அதிகச் சிலவுகள் ஏற்படும் குடும்ப கலகமும் உண்டாகும், செவ்வாய் சனி நலன்தரும்.

**6. கன்னி:** உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$.

உத்திரம் மூன்று பாதமும் ஹஸ்தம் முதல் பாதமும் சிரமத்தோடு நன்மைகாட்டும், மாதக்கடைசியில் 10 தினங்கள் மங்களமான காரியங்களும், சந்தோஷமும் ஏற்படும், ஹஸ்தம் இரண்டு மூன்று பாதங்கள் மத்தியபாகத்தில் பத்துதினங்கள் விசேஷ லாபத்தையும் பெரியோர் அரசர் முதலியவர்களுடைய அன்பையும் கொடுக்கும், லாபநஷ்டம் சமமாகும், குடும்பத் தொல்லையும் அதிகமாகும். ஹஸ்தம் நான்கு பாதம் மிகுந்த பிரயாசைகொடுத்து உலகில் பிரசித்தியைத்தரும், அசாத்தியமெல்லாம் சுலபமாகச் செய்து தரும், சத்துருக்கள் சரணடைவார்கள், நஷ்டம் கிடைக்கும். வெற்றியடையும், மாதக் கடைசி பத்து தினங்களில் சில ஆத்மார்த்தமான மனுஷ்யாளுக்கு ஆபத்து ஏற்பட்டு அதனால் கவலையுண்டுபண்ணும், தொழிலாளிகள் வியாபாரிகள் மிராசுதார்கள் சந்தோஷமடைவார்கள். சித்திரை பூரண சுபம்தரும். ஜயமுண்டாகும், புதன் சுபவாரமாகும்.

**7. துலாம்:** சித்திரை ½, சுவாதி, விசாகம் ¾.

சித்திரை பின்னரையும் விசாகமும் நலன்கொடாது, சதா துக்கசமாசாரத்தையும் நஷ்டத்தையும் விரோதத்தையும் தரும், சுவாதி நான்கு பாதங்களும் சந்தோஷத்தையும் ஜயத்தையும் தரும், கடன் நிவர்த்தியாகும். லாபம்கிட்டும், புகழ்ஓங்கும். ரோக நிவர்த்தியாகும். சுபகாரியங்கள் ஏற்படும். தெய்வபலம் பிரகாசிக்கும், உலகில் நன்மதிப்பும் கீர்த்தியும் உண்டாகும், எடுத்தகாரியம் ஜயிக்கும், வெள்ளியும் புதனும் சுபமாகும்.

**8. விருச்சிகம்:** விசாகம் ¼, அனுஷம், கேட்டை.

விசாகம் கடைசிபாகம் இம்மாதமும் சுபமிராது, வியாதியாலும் சத்துருவாலும் விவஹாரத்தாலும் கஷ்டங்களை அதிகமாய் உண்டுபண்ணும். அனுஷம் பூராவும் கேட்டை பூராவும் இம்மாதம் சுபசந்தோஷத்தையும் கொடுத்து அதிக சிரமத்தையும்தரும், எந்தக்காரியமும் ஆரம்பத்தில் பயமாகத் தோற்றமளித்து பிறகு சுபமாக முடியும், புதன் வெள்ளி சுபமாகும்.

**9. தனுசு:** மூலம், பூராடம், உத்திராடம் ¼.

மூலம் அதிக உழைப்பு ஏற்பட்டு நலன்தரும், கோரிய காரியங்கள் சித்தியடையும், பூராடம் மனக்கவலையையும் அதிக அலைச்சலையும் வேலையாள்கள் தொல்லைகளையும் அதிகச் செலவையும் சொன்னபடி காரியங்களைச் சாதிக்கமுடியாதபடி இடஞ்சல்களையும் கொடுத்து முடிவில் எல்லாம் சுபமாகச் செய்யும், உத்திராடம் முதல்பாதம் மாதம்முடிய சந்தோஷத்தையும் அன்னிய ஸ்தலவாசத்தில் திருப்திகரத்தையும் தொழில் லாபத்தையும் உத்யோக மேன்மையையும் தரும், சனி புதன் சுபவாரமாகும்.

**10. மகரம்:** உத்திராடம் ¾, திருவோணம், அவிட்டம் ½.

உத்திராடம் திருவோணம் முடிய மனக்கவலையோடு சந்தோஷத்தைத் தரும், உத்யோக லாபம் நஷ்டதனபிராப்தி, வியாபார விருத்தி, உத்யோகலாபம் இடம்மாறலில் லாபகரம் நன்மதிப்பு முதலிய சுபங்கள் உண்டாகும், அவிட்டம் முற்பாதி அதிக உழைப்பும் பெரியோர் அன்பும் கொடுத்து மனம் சஞ்சலமாகவே நடக்கும்படி செய்யும், சனியும் புதனும் சுபமாகும்.

11. **கும்பம்:** அவிட்டம் ½, சதயம், பூரட்டாதி ¾.

அவிட்டமும் சதயமும் மிசிரமான பலனைத்தரும், மாதம் முற்பாதியில் லாபகரமும் பிற்பாதியில் அதிகச் சிலவுகளும் கொடுக்கும். அடிக்கடி நண்பர்கள் பந்துமித்திராள் வரத்து, அலைச்சல் உபகாரசிந்தை தெய்வபக்தி எல்லாம் கிடைக்கும், நினைத்ததெல்லாம் கைகூடும், பூரட்டாதிக்கு இல்லறசுகமும் கிரஹபூமி லாபங்களும் எதிர்பாராதபடி தனதான்ய வரத்தும் சுபசோபனாதிகளும் மனத்துக்கு சந்தோஷமும் உண்டாகும், புதன் வெள்ளி சுபமாகும்.

12. **மீனம்:** பூரட்டார்தி ¼, உத்திரட்டாதி, ரேவதி.

பூரட்டாதி கடைசி பாதம் கவலையோடு ஓடிக்கொண்டு டிருக்கும், எதிலும் மந்தம்காட்டும். உத்திரட்டாதி நான்கு பாதங்களும் சந்தோஷத்தை தரும், ஆரோக்கியமுண்டாகும். ரேவதி முதல்பாதம் சென்ற மாதம்போலவே நடப்பதோடு ஆபத்தையும் நஷ்டத்தையும் கொடுக்கும், ரேவதி மற்ற 2, 3, 4 பாதங்கள் தெய்வபலம்தோன்றி காப்பாற்றும். எதிர்பாராத சுபங்களும் சகல காரியவெற்றியும் ஆரோக்கியமும் மனம் சந்தோஷமும் ஏற்படும், வியாபாரி தொழிலாளி முதலாளி எல்லோரும் நலனடைவார்கள், வெள்ளியும் வியாழனும் சுபமாகும்.

குறிப்பு :- இம்மாதத்தோடு விஜய வருஷ பலன் பூர்த்தியாகிறது. கடவுள் அருளால் இம்மட்டும் இவ்வருஷம் சுபமாகவும் சுபிக்ஷமாகவும் உலகத்தை நடத்திவைத்த சர்வேசுவரனுக்கு நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். ஈசன் அருளால் புதாண்டு ஜய வருஷம் பூரண சுபமளிக்கப் பிரார்த்திக்கிறோம், மக்களிட மிருந்து சர்வேசுவரன் எவ்வித பிரதிபிரயோஜனமும் எதிர்பாராமல் உலகத்துக்கு நன்மை அளித்துவருவதுபோல நமது தருமை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் உலகமக்கள் உய்யும் பொருட்டு சர்வகாலமும் சமயப் பிரசாரங்களில் ஈடுபட்டு நடத்திக்கொண்டும் எதிர்காலத்தைப் காலமறிந்த அறிஞர்கள் மூலம் பத்திரிகை வாயிலாக பிரசித்தி செய்துகொண்டும் சதா பரோபகாரமும் தெய்வ சிந்தனையுமாக மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானமவர்கள் இறைவன் அருளால் நீண்டகாலம் ஆரோக்கியத்தோடும் சைவ தர்ம பரிபாலனத்தோடும் தீர்க்காயுளோடும் இருந்து உலக மக்களுக்கு நன்மை செய்துவர சர்வேசுவரன் அருள்புரிவாராக.

பின்சேர்க்கை:

# ரஸிகமணி; டி. கே. சி. அவர்களின்

## கடிதங்கள்

[டி. கே. சி. அவர்களை அறியாத தமிழ்மக்கள் இல்லை. தமிழ் இலக்கியங்களைப் படித்தறிந்து சுவைப்பதற்கு வழிகாட்டிய ரஸிகமணி டி. கே. சி. அவர்களின் தமிழ்த்தொண்டு என்றென்றும் மறத்தற்கியலாதது. ரஸிகமணி அவர்கள் ஆதீனத்தோடு தொடர்புகொண்டவர்கள். தமிழ் வாழ்வும் சமய வாழ்வும் ஆதீனத்திலே அவரை இணைத்துப் பிணைத்தன. "டி. கே. சி. அவர்களை உண்மையாக உணர வேண்டுமென்றால் அன்னார் எழுதிய நூல்களையும் கருத்துக்கள் அடங்கிய கடிதங்களையும் தொகுத்து வெளியிடவேண்டும்" என்று கனம் ராஜாஜி அவர்கள் அண்மையில் குறிப்பிட்டார்கள். ஆதீனத்துக்கு அன்னார் எழுதிய கடிதங்கள் பலவும் தமிழிலக்கிய வளத்தினைப் புலப்படுத்தும் கருத்துக் கருவூலங்களாக இருந்தமையின் அதனைத்தொடர்ச்சியாக இவ்விதழிலிருந்து வெளியிடுகின்றோம்.]

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்

ஓம் — தென்காசி

சிவமயம் — 20—4—50

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் ஆதீனம் மகாசன்னிதானத்துக்கு அனேக நமஸ்காரம்.

ராஜாஜி அவர்களுக்குக் கண் உபத்ரவம் குணமாகி முதல் முதலாகத் தானே கைப்படக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். மிக்க திருப்தி.

உ

ஆதீனத்திலிருந்து கங்கையும் பிரசாதமும் அனுப்பியிருப்பதை மிகவும் பாராட்டி எழுதியிருக்கிறார்கள்.

“தருமபுரம் ஆதீனத்தார் கங்கையும் பிரசாதமும் அன்புடன் அனுப்பியதைப் பெற்றுக்கொண்டேன். இதற்குநான், என்னசெய்து நன்றியைக் காட்டமுடியும்? மிக அழகான இரண்டு பாத்திரங்கள் ஈயப்பற்றுப்போட்டு மூடியவை, ஹரித்துவாரத்திலிருந்தும் பிரயாகையிலிருந்தும் வந்து கங்கையை என் பக்கத்தில் தங்கச்செய்து நிற்கின்றன, என்பதை நினைத்தால் எல்லாம் அற்புதமாகத்தான் இருக்கிறது. பகீரதன் தன் முன்னோருக்கு மட்டிலும் தவம்செய்யவில்லை, எனக்காகவும் செய்தான் போல் இருக்கிறது. தர்மபுரம் சந்நிதானத்துக்கு என்னிடத்தில் இவ்வளவு அன்பு ஏற்பட்டிருக்கிறது.”

சைவப் பண்பாட்டுடன் கங்கையை மகாசந்நிதானம் எப்படி அனுபவிக்கிறதோ, அப்படியே அனுபவிக்கிறார்கள் ராஜாஜியும். கங்கைத் தீர்த்தம் அவர்களுக்கு அனுப்பியது பற்றி மிக்க சந்தோஷம்.

யாத்திரை போய்வந்ததும் வந்து தெரிசிக்கவேண்டும் என்று ஆசைதான் எனக்கு. ஆனால் உடல்நலம் இடம் கொடுக்கவில்லை. மன்னிக்கவேணும்.

ராஜாஜி இந்த மாசம் கடைசியில் டில்லிபோய் வருவதாக எழுதியிருக்கிறார்கள். வந்ததும் திருக்குற்றாலம் வருகிறார்கள். திருக்கூட்டமும் வழிபாடுகளும் அழகாய்நடந்தேறிவரும் அரிய காட்சிகள். இத்தகைய பண்பாடு தென்னிந்தியாவில் இருக்கிறது;கண்டு அனுபவிக்கவேண்டியது என்று நண்பர்களுக்குச் சொல்லிவருகிறேன். சைவப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும் எப்படி இருக்கின்றன, எப்படி ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றி வளர்க்கப்பட்டிருக்கின்றன என்பது நம்மவர் மட்டும் அல்ல, உலகமே தெரிந்துகொள்ளவேண்டிய காரியம்.

சைவப் பண்பாட்டின் அனுபவத்தைக் காரைக்கால் அம்மையார்,

"கண்டெந்தை என்றிறைஞ்சிக் கைப்பணியான் செய்யேனேல்
அண்டம் பெறினும் அதுவேண்டேன்,—துண்டம்சேர்
விண் ஆளும் திங்களாய்! மிக்குலகம் ஏழினுக்கும்
கண்ணுளா! ஈதென் கருத்து."

வெகு அழகாய், மனசை விட்டுப்போகாதபடி, எடுத்துச் சொல்லுகிறார்.

இங்கே திருக்குற்றாலம் இந்த வருஷம் கோடையின் கொடுமைக்கு உள்ளாகவில்லை. குளிர்ந்த காற்று ஆரம்பித்து விட்டது. சுகமாகவே இருக்கிறது.

ஊழியன், நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
உ தென்காசி
சிவமயம் 2—5—50

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் ஆதீனம் மகாசந்நிதானத்துக்கு அனேக நமஸ்காரம்.

சென்னையிலிருந்து இங்குவந்து மூன்றுநாள் ஆகிறது. ராஜாஜி அவர்களுக்கு உடம்பும் கண்ணும் சௌகரியம் அடைந்திருக்கின்றன. ஆனாலும் பலஹீனம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. அதற்காக உதகமண்டலத்தில் இரண்டுவாரம் இருந்துவிட்டுப் பிறகு டில்லிக்குப் போக உத்தேசிக்கிறார்கள்.

ஆதீனத்திலிருந்து ஏற்படுத்த உத்தேசிக்கும் காலேஜ் சம்பந்தமாக அவர்களைக் கலந்தேன். இதர மதஸ்தர்களுமோ நம்முடைய சைவத்தை உணர்ந்து அனுபவிப்பதற்கானபடி கல்வி அமைந்தால் நலமாய் இருக்கும் என்று மொத்தமாக அபிப்பிராயம் கொடுத்தார்கள்.

உண்மைகளிலிருந்தே சைவசமயம் எழுந்திருப்பதால், அந்த உண்மைகளைப் பிறரும் கண்டு அனுபவிக்கமுடியுந் தான். ஆனால் அந்த உண்மைகளைச் சமயமுறையில்-கோயில்,

தீர்த்தம், மூர்த்தி, வழிபாடுகொண்ட முறையில் – அனுபவிக்கும்போது, பிறருக்கு உணர்ந்து அனுபவிப்பது கஷ்டமாய்த்தான் இருக்கிறது. அனுபவிக்கவேண்டும் அதற்காக முயலவேண்டும். என்ற மனப்பாங்கோடு பார்த்தால்ப் பிறரும் கண்டு அனுபவிக்கமுடியும். அப்படிச் சிலர் சைவசமயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். அத்தகைய மனப்பாங்கு உடையவர்களுக்கு வசதிசெய்வது அவசியந்தான் என்று சொல்லலாம். எதற்கும் நேரில் வந்து தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

குருபூஜைத் திருவிழாவுக்கு அழைப்பு கிடைத்தது. மிக்க சிறப்பாய் நடைபெறுகிறது. கலந்து களிக்க இயலவில்லை இப்போது மன்னிக்கவேணும்.

நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்

ஓம் — தென்காசி

8—5—50

தர்மபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசன்னிதானத்துக்கு அனேக நமஸ்காரம்.

நண்பர் சின்ன வெங்கட்டராஜா அவர்களும் குமாரரும் சந்நிதானத்தை தெரிசித்துவிட்டு இங்கே வந்துவிட்டார்கள். அவ்விடம் சந்நிதானம் உத்தரவானதுபற்றி விரிவாய் எடுத்துச் சொன்னார்கள்.

சைவப் பண்பாடும் தமிழ்ப் பண்பாடும் உலகத்திலேயே உயர்ந்தவை. அபூர்வமான உண்மைகள் அவைகளில் அடங்கிக் கிடக்கின்றன. தெவிட்டாது சதா இன்பம் அளிக்கக்கூடியவைகள். அவைகளைப் பார்த்து நெடுகிலும் அதிசயித்துக் கொண்டே வந்திருக்கிறேன். இப்போதும் அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். மேலும் அவைகளை எளிதில் அறிந்து அனுபவிக்கலாம். அதிகமான பயிற்சி வேண்டாம். வாழ்க்கையில்க் கொஞ்சம் அனுபவம் இருந்தால்ப்போதும்.

இப்படி இருந்தும் யாரும் என்னுடன் கலந்து அனுபவித்தார்கள் என்று சொல்லமுடியாது. திருப்பாதிரிப்புலியூரில் இருந்த ஞானியார்சுவாமிகள் (மறைந்து வியாழவட்டத்துக்கு மேலாகிறது). ஹைக்கோர்ட் ஜட்ஜாக இருந்த (இப்போது பிரதம வக்கீல்) வி. வி. சீனிவாசய்யங்கார் அவர்கள் இருவரும் நான் குறித்துச்சொன்ன பண்பாட்டின் பெருமையை அங்கீகரித்தார்கள்.

கடைசியாக ராஜாஜி இவர்கள், கல்கி ஆசிரியர், சதாசிவம் ஆகியவர்களோடு கலந்து தமிழ்ப் பண்பாட்டை (சங்கீதம், நடனம், சமயம்) எல்லாவற்றையும் அனுபவிக்க நேர்ந்தது. நல்ல குழாத்தில்த்தான் இருக்கிறேன். உலகத்தில் இல்லாத அருஞ்செல்வத்துக்கு நாம் வாரிசுகளாய் இருக்கிறோம் என்பது எங்கள் துணிபு.

ஆனாலும் யுனிவெர்சிட்டியில் சம்பந்தம்பட்டவர்கள், காலேஜ்களில்ச் சம்பந்தம்பட்டவர்கள், தமிழ் வித்வான்கள், ஆசிரியர்கள் இவர்கள் அங்கீகரித்துவிடவில்லை. ஏதோவெறும் படாடோபம் என்றுதான் சொல்லிவருகிறார்கள். இன்றும் அவர்களுக்கு இறைவன் திருவருள்பாலிக்க வில்லைதான். ஆனாலும் மேலேசொன்ன வர்க்கத்தார் நீங்கிய மற்றவர்கள், எத்தனையோ தமிழர்கள் முக்கியமாகப் பெண்டிர் பண்பாட்டை அங்கீகரித்து அனுபவித்துவருகிறார்கள்.

இந்த உண்மையை கல்கத்தா, டில்லி, பம்பாய் முதலிய இடங்களில் நேர் நேராகவே கண்டிருக்கிறேன். கடைசியாக திருவாசகப் பதிப்பு விழாவை ஒட்டி சந்நிதானத்தை தெரிசிக்கும் பாக்யம் கிடைத்தது. தமிழ்ப்பண்பாட்டுக்கு என்றும் இல்லாத அங்கீகாரம் கிடைத்துவிட்டதாக எண்ணி புது ஊக்கம் ஒன்று உண்டாய் இருக்கிறது எனக்கு.

தமிழுக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும், சைவத்துக்கும் எவ்வளவோ வேலைசெய்யவேண்டியிருக்கிறது. மேல்நாட்டில்க் கருவிகொண்டு கண்ட உண்மைகள் எல்லாம் தமிழுக்கு அவசியமான விளக்கம் கொடுக்கக்கூடியவைகளே. முன்னோர்கள் நேருக்குநேர் ஞானதிருஷ்டியால்ப்பார்த்த உண்மைகளை (மிக அரிய உண்மைகளை) தற்போது கருவிவாயிலாகத்தான்

காணவேண்டியிருக்கிறது. அதற்கு மேல்நாட்டுக் கலை உதவி புரியவேசெய்கிறது.

"ஒன்ருகக் காண்பதே காட்சி"

"ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி"

"தில்லை மூதூர் ஆடிய திருவடி
பல்லுயிர் தோறும் பயின்றனன் ஆகி"

"அண்ட பிண்டம் நிறைந்த நின்ற
அருளைப் போற்றி"

இவைபோன்ற எண்ணிறந்த வாக்கியங்களிலுள்ள அடிப்படையான உண்மைப் பொருளைக் காணவும் அனுபவிக்கவும் வேண்டுமானுல், நம்முடைய புராதனமான கோயில், வழிபாடு, சங்கீதம், பாடல் எல்லாம் வேண்டும்; இவைகளோடு மேல்நாட்டுக் கலைப்பாடும் வேண்டுந்தான். அதற்காக ஆங்கிலபாஷை வேண்டும் என்று சொல்லவில்லை. விஷயங்களை, உண்மைப் பார்வையோடு அனுபவித்திருக்கவேண்டும். அது கஷ்டம் இல்லை. அவைகளைத் தமிழில் வெகு எளிதாய்ச் சொல்லி விளக்கலாம். அவ்வளவு எளிதாக இங்கிலீஷில் விளக்கமுடியாது என்பது என் அனுபவம். எதையும் தமிழில்ச் சொல்லிச் சாதித்துவிடலாம். ஆசிரியர்களிடம் விட்டால்த்தான் கஷ்டமாய்ப் போய்விடுகிறது.

காரணம் என்ன? வார்த்தை வார்த்தை வார்த்தை என்று வார்த்தையோடு சிக்குண்டு கஷ்டப்படுகிற காரியந்தான். விஷயந்தான், உண்மைதான், லக்ஷயம் என்று எண்ணிவிட்டால், எல்லாம் லகுவாய்ப்போய்விடும். யுனிவெர்சிட்டிகளும், பள்ளிக்கூடங்களும் வார்த்தைகளோடு சிக்குண்டு திணறுகிற காரியந்தான். அவைகளில் சையன்ஸோ, கலையோ, கல்வியோ ஏதேனும் இல்லை என்பதை பண்டிட் நேருஜி, பட்டேல்ஜி எல்லாரும் வெளிப்படையாய்ச் சொல்லி நொந்துகொள்ளுகிற காரியமாக இருக்கிறது. அத்தனை வெளிப்படையான காரியமாய்ப் போய்விட்டது யுனிவெர்சிட்டிகளின் பயன் இன்மை.

யுனிவெர்சிட்டி கமிஷன் ஆராய்ந்து ஆராய்ந்து பார்த்துப் பிரயோசனம் அற்ற காரியந்தான் தற்போதைய படிப்பெல்லாம் என்று தீர்ப்புச் சொல்லிவிட்டது. ஆனாலும் கவர்ண்மெண்டால் ஒன்றும் செய்ய இயலவில்லை. பத்திரிகைமூலமாக எல்லாந்தான் தெரியவந்திருக்குமே அவ்விடத்துக்கும்.

கல்வி பயிலும் மக்களைத் தொழிலினாலும், கேள்வியாலும், பயிற்சியாலும் உத்ஸாகத்துக்கும் ஆனந்தத்துக்குமே உள்ளாக்கவேண்டும் என்பதே லக்ஷயமாகக் கொள்ளவேண்டிய காரியம். இந்த லக்ஷயம் பள்ளிக்கூடங்களில் இல்லை. குணக்கேடுகள் விளைகிறதென்றால் வியக்கவேண்டியதில்லை.

கடிதம் நீண்டுபோய்விட்டது; நண்பர் ராஜாக்கள், மகாசந்நிதானத்தின் ஆர்வத்தையும் என்னிடம் காட்டிய அருளையும் கேட்டு ஊக்கம் கொண்டதால்த்தான் நீண்டுவிட்டது. மன்னிக்கவேணும். எனக்கு உடம்பு பலஹீனமாய் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறிவருகிறது. நேற்றையப் பாராட்டுக்குப் (மாயவரம்) போய்க் கலந்து கொள்ள இயலவில்லை. கூடியசீக்கிரம் வந்து தெரிசித்துக் கொள்ளுகிறேன்.

மிக்க நன்றியுடன் நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

குறிப்பு:— ராஜாஜி அவர்கள் சென்னை வந்துவிட்டார்கள். கண் உபத்திரவும் மறுபடியும் தொந்தரவுகொடுத்து வருகிறதாம். குணமானதும் டில்லிபோய் மந்திரி பதவியை (மிகப் பொறுப்பான இலாக்கா) ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கலாம்,

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்
ஓம் — தென்காசி
சிவமயம் — 9—2—51

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்துக்கு அநேக நமஸ்காரம்

திருவருள் நிறைந்த திருமுகம் சென்னையில் வைத்துக் கிடைத்தது. இன்றுதான் திருக்குற்றாலம் வந்து சேர்ந்தேன்

ஆதீனத்துக்கு வந்து சந்நிதானத்தை தெரிசித்தது பற்றியும், அரிய பக்தி அனுபவங்கள் கிடைத்தது பற்றியும் பல நண்பர்களிடமும் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. ஏதோ காலேஜ்கள் என்றும் யுனிவெர்சிட்டிகள் என்றும் இருக்கின்றன. எல்லாம் புஸ்தகங்கள்தான் அல்லாதபக்ஷம் புஸ்தகங்களினும் கேடான "லெக்ச்சர்கள்" உண்மையோ உணர்ச்சியோ கிடையாது. உள்ளத்துக்குள்ப் போய் உலவுகிற ஆனந்தம் ஒன்றும் கிடையாது.

இந்த விஷயங்களை சென்ற முப்பது வருஷங்களாகச் சொல்லிக்கொண்டுதான் வருகிறேன். இப்போதுதான் மேலதிகாரிகள் கொஞ்சம் உணர்ந்து வருகிறார்கள். உணர்ந்ததை அமுலுக்குக் கொண்டுவர எத்தனை வியாழ வட்டங்கள் ஆகுமோ சொல்லமுடியாது. ஆனால் தர்மபுரம் மடாலயத்துக்குள்ப் புகுந்து ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு வெளியே வந்தால்ப்போதும். உள்ளத்தில் ஊன்றி நிற்கும் எத்தனையோ ஆனந்த அனுபவங்கள் கிடைத்துவிடும். நந்தவனங்கள் கட்டிடங்களின் சிற்ப விசேஷம், தேவாரப் பாடல்கள், மனசில், ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் தீபாராதனைகள், 30,000 வருஷம் பழுத்துவந்த சைவசமயப் பண்பாடு எல்லாம் நிரந்தரமான ஒரு கல்வியைப் புகட்டிவிடும், இது மிகைப்படக் கூறல் அல்ல, யுனிவெர்சிட்டிக் கட்டிடங்களுக்குள் அத்தகைய அனுபவம் ஒன்றும் இராதுதான்.

யுனிவெர்சிட்டிகளுக்காகக் கோடிக்கணக்கான பணம் செலவாய் வருகிறது. யாதொரு பிரயோசனமும் இல்லை. பிரயோசனமான கல்வியாய் இருந்தால் விவசாயம் சம்பந்தமாக கோடிகோடியாக நஷ்டம் ஏற்பட்டிருக்குமா. "முன் கூட்டி அமைத்த வீடுகள்" சம்பந்தமாகவும் கோடிகோடியாக வீணாகப் போயிருக்குமா.

எல்லாம் யுனிவெர்சிட்டியால் விளைந்த வினைகள் என்றுதான் சொல்லவேண்டும். நேர்நேராக எதையும் பார்க்கிறதில்லை. மோட்டார்வண்டியின் மர்மங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். உடைந்துபோன இரண்டு மூன்று மோட்டார்

வண்டிகளை பிரித்து ஒன்று சேர்த்தால் எல்லாம் விளங்கி விடும். அப்படிச் செய்வதில்லை, செய்ய இடம் கொடுக்கிறதும் இல்லை. இருபது முப்பது பிள்ளைகளை வகுப்பாக உட்காரச் செய்கிறது. அவர்கள் மூஞ்சியில் 'லெக்ச்சர்' பண்ணித் தொலைக்கிறது. எல்லாம் குழப்பம், அறிவீனம், கும்பிருட்டுத் தான். இப்படியெல்லாம் மூளையைக் குழப்பிக்கொண்ட காரியத்துக்காக "diploma" என்ற நற்சாக்ஷிப் பத்திரம் வேறு கேடு. இந்த விதமாகவே யுனிவெர்சிட்டியில் ரசாயனத் திலிருந்து தத்துவஞானம் வரையும் பொருளற்ற புஸ்தகமயந் தான். நம்முடைய முன்னோர்களுக்கும் இது தகுதியுள்ள கல்வி, இது விருதாக் கல்வி என்று தெரிந்திருக்கிறது.

நம்பியாண்டார் நம்பிகளது அனுபவம் அப்படித்தான் இருக்கிறது.

"வித்தகச் செஞ்சடை மேயானைச் சிற்றம் பலவன்தன்னை
சித்தகக் கோயில் இருத்தும் திறத்துமிக் கார்க்கேயல் லால்
புத்தகப் பேய்களுக்(கு) எங்கிந்த தோஅவன் பொன்அடி யே"

யுனிவெர்சிட்டிகளை நேர், நேராகச் சுற்றிப் பார்த்துவிட்டுப் பாடிய பாட்டாகத் தோன்றுகிறது.

ஆகவே, தர்மபுரம் மடாலயம் பற்றி நான் பாராட்டிச் சொல்லும் சொல் எல்லாம் உண்மைதான் என்பது என்னுடன் பழகியவர்களுக்குத் தெரியவரும். ராய. சொக்கலிங்கம் அவர்களும், குழந்தையன் செட்டியார் அவர்களும் அனுபவித்த காரியங்களையும் கேட்ட அரிய உபதேச மொழிகளையும் ரொம்பரொம்ப வியந்து பாராட்டிவந்தார்கள். சந்நிதானத்தின் மூலமாகத்தான் சைவமும் தமிழும் புதிய ஒளிபெறும் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

அன்புக்கும் அருளுக்கும் மிக்க நன்றியுடன் அடியேன்,

டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
தென்காசி
16—10—51

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் மகாசந்நிதானம் அவர்களுக்கு அனேக நமஸ்காரம்.

கடிதம் கிடைத்தது. காசி ராமேஸ்வரம் யாத்திரை பூர்த்திபெற்றுப் புண்ணியஸ்தலங்களையும் தெரிசித்து ஆங்காங்கு சைவத்துக்குச் சிறப்பும் விளக்கமும் கொடுத்துவிட்டுப் பீடம் போய்ச் சேர்ந்ததுபற்றி மிக்க சந்தோஷம். யாத்திரையை சந்நிதானம் எளிதாயும் ஆக்கிவிட்டீர்கள். போக்குவரத்து சாதனங்களைத் தற்காலத்து முறையில் அமைத்துக்கொண்டது எவ்வளவோ சௌகரியம். ஆகாய விமானம் முதலான சாதனங்கள் சைவத்துக்குத் தொண்டு செய்யாமல்ப் புறம்பாய் நிற்பானேன் கவள குளிகைகளையே கையாண்ட சமயம் மேலே சொன்ன சாதனங்களை ஒதுக்கி வைக்கவேண்டிய அவசியம் இல்லைதானே.

ஞானசம்பந்தத்தில் (10—10—51) இராமேஸ்வர யாத்திரைக் குறிப்பு நயம்பட எழுதியிருக்கிறது. சீவிலிபுத்தூரில்ச் செய்த நன்கொடைக்கு அடிப்படையாயுள்ள சந்நிதானத்தின் பக்தி மேலீட்டைப்பற்றி ராமசாமி ராஜா அவர்களும் உத்தண்டராம பிள்ளை அவர்களும் அழகாய்ப் பேசியிருக்கிறார்கள். மலரில் R K. சண்முகம் செட்டியார் அவர்களது பேச்சும் இருக்கிறது. பேச்செல்லாம் வெற்றுரை ஆகாசவாணங்களாக "மிளிருகிற" இந்தக் காலத்தில், அனுபவம், உணர்ச்சி, உண்மை இவைகளோடு ஒட்டிய ஒரு பேச்சு கிடைக்கிறதென்றால்ப் பெரியகாரியம். சண்முகம் செட்டியார் அவர்கள் பேச்சு அத்தகைய பேச்சு. ஞானசம்பந்தத்தில் வெளியிட்டிருப்பதுபற்றி மிக்க சந்தோஷம். என்னுடைய தேகநிலையை உத்தேசித்து, தர்மபுரம் போகவாவது சந்நிதானத்தை தெரிசிக்கவாவது! என்ற ஆற்றாமையோடுதான் இருந்தேன். எப்படியோ திருக்குற்றாலநாதரது திருவருள் சந்நிதானத்தை எழுந்தருளச் செய்தது இங்கேயே. ஏதோ ஒரு மணி நேரம் அளவளாவுதல் ஏற்பட்டாலும், பெரிய விஷயங்கள் மனசில்ப் பதியக் கிடைத்தன.

நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்

ஓம்

தென்காசி

16—1—52

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் மகாசந்நிதானம் அவர்களுக்கு அநேக நமஸ்காரம்

மார்கழி மாசத்து ஞானசம்பந்தம் கிடைத்தது. அரிய விஷயங்கள் கொண்டிருக்கிறது மலர். சந்நிதானம் 108 ஸ்தலங்களுக்குச் சென்று வழிபாடு நடத்திய விஷயம் சைவத்துக்குச் செய்த பெரிய உபகாரம். நம்மிடையே சைவக் கோயில்கள் மலிந்துகிடப்பதுபோல் உலகத்தில் எந்த சமயம் பற்றியும் ஆலயங்கள் கிடையாது, இந்த விஷயத்தை நம்மவர்கள் உணர்ந்து எக்களிப்புக் கொள்ளவேண்டும்.

சந்நிதானம் செய்த யாத்திரை பலரையும், சைவத்தின் பெருமையையும் அழகையும் நினைத்து அப்படியே யாத்திரை செய்யத் தூண்டும். அப்போதுதானே கோயில்கள் விளக்கம் பெறும். எவ்வளவோ சிரமம் எடுத்துத்தான் ஒரு மாசத்தில் 108 கோயில்களிலும் வழிபாடு நடத்தியிருக்கிறது என்பது தெரிகிறது. அற்புதந்தான்! மனசுக்கு எவ்வளவோ சந்தோஷமாய் இருக்கிறது. காரைக்காலில்ச் செய்த பிரசங்கத்தில் பக்தி பெருக்கெடுத்து ஓடுகிறது. "பிறந்து மொழிபயின்ற" பாட்டு எவ்வளவு அழகாய் இருக்கிறது. தமிழ்ப் பண்பு வாய்ந்த பாடல். நாவை விட்டு எளிதில் அகலாது.

காரைக்கால் வாசிகள் உண்மையான பக்தியோடு வரவேற்பு அளித்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பெரிய யோகம் சந்நிதானம் காரைக்காலில் எழுந்தருளியது.

நமஸ்காரம்,

டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
ஓம் தென்காசி
சிவமயம் 20—10—52

ஸ்ரீலஸ்ரீ தருமபுரம் ஆதீனம் மகாசந்நிதானத்துக்கு
அனேக நமஸ்காரம்

ஞானசம்பந்தம் புரட்டாசி மாசத்து இதழில் சந்நிதானத்தின் ஆதரவில்த் தமிழும் சமயமும் வெகு சிறப்பாய் வளர்ந்துவருகிறது என்பது தெரியவருகிறது. ஆதீன தேவஸ்தானங்களில் நிகழ்ந்த சொற்பொழிவுகளும், நவராத்திரி விழாவை ஒட்டி நிகழ்ந்தவைகளும் எல்லாம் ஒரு புது யுகத்தையே குறிக்கின்றன. அப்படியே மாயூரத்தில் கந்த சஷ்டி விழாவை ஒட்டியும் சொற்பொழிவுகள் நடக்க இருக்கின்றன. தமிழ்மக்களுக்கு எவ்வளவோ ஆனந்தத்தையும் எக்களிப்பையும் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சிகள்.

சந்நிதானத்தின் திருமேனி முழு ஆரோக்கியத்துடன் இருக்கும். திருக்கூட்டமும் வழிபாடுகளும் அழகாய் நடந்தேறும். எனக்கு உடல்நிலை சுமாராய்இருக்கிறது. வைத்தியம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. வீட்டுக்குள் நடமாடிக் கொள்ளுகிறேன். அயலூர்ப் பயணம் முடியாது. ஆகவே ஆதீனத்து விழாக்களை கண்டு களிக்கக் கொடுத்துவைக்கவில்லை.

அடியேன் நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் திருக்குற்றாலம்
ஓம் தென்காசி
சிவமயம் 10—11—52

தருமபுரம் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சுப்ரமண்ய தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு
அநேக நமஸ்காரம்

**29—10—52** அன்று அன்புடன் அனுப்பிய திருமுகம் கிடைத்தது. ஆசியும் கிடைத்தது. உள்ளமும் உடலுமே நலம் பெற்றன.

சந்நிதானமும் தம்பிரான் குழுவும் சிறப்புடன் விருத்தி அடைந்து வருவது சைவசமயத்துக்கு அரியபேறு.

தமிழை நான் அனுபவிக்கிறேன் என்பதாகவும் அப்படியே பிறரையும் அனுபவிக்கச் செய்கிறேன் என்பதாகவும் அருளிய பாராட்டைவிட மேலான பாராட்டு இருக்கமுடியாது எனக்கு.

இந்த விதத்தில் அறிஞர்களுடன் இத்தனை வருஷமாக தமிழ்ப் பாடல்களை அனுபவிக்கக் கொடுத்துவைத்தது இறைவனது திருவருள்தான்.

ஹைகோர்ட் சோமசுந்தரம் அவர்களுக்குத் தமிழிலும் சமயப் பண்பாட்டிலும் ஒரே மோகம், அத்தகைய உயர்பதவியால் இருப்பவர்களுடைய உண்மையான தமிழ் அனுபவம் தமிழ் உலகுக்கு அரிய பேறு. இரண்டு மாசத்துக்கு ஒரு தடவை இங்குவந்து தமிழ்ப்பாடல்களில் திளைக்கின்றார்கள். டிஸம்பர் மாசமும் இங்கே வருகிறார்கள். ''அருவியால் ஸ்நானம் செய்து திளைப்பதல்ல முக்கிய லக்ஷயம். எனக்கு தமிழில்த்திளைப்பதுதான் லக்ஷயம்'' என்று உத்ஸாகமாகச் சொல்லுவார்கள், இது உண்மையானவார்த்தை. தமிழ் இப்படியெல்லாம் ஒருவரைச்செய்யும் என்பது ஜஸ்டிஸ் சோமசுந்தரம் அவர்களால் வெளியாகிறது. ரொம்பவும் சந்தோஷம் படவேண்டிய காரியம் இது. ஆனால் என்மேல்ப் புகார்வேறு ஒருபக்கத்திலிருந்துவருகிறது. தமிழ் எளிமையான பாஷை என்று சொல்லுகிறேனும், உலகத்திலேயே உயர்ந்த பாஷை என்று சொல்லுகிறேனும். இப்படி எப்படிச் சொல்லலாம், என்று தமிழ் ஆசிரியர்கள் என்னைக் குறை கூறுகிறார்கள், தொழிலாகவே போய்விட்டது. இப்படியெல்லாம் சொல்வது அவர்களுக்கு!

தமிழ்க்கல்வி ஆனந்தத்திலிருந்தே உண்டாவது ஒரு உண்மையோடோ உணர்ச்சியோடோ கைகோத்துத் தமிழ் பாஷை நடனம் ஆடிவிட்டால்க் கவி உண்டாய்விடுகிறது. கவியைப் பாடப்பாட நமக்குத் தெவிட்டாத ஆனந்தம் உண்டாகிறது. இதர பாஷைகளில் அப்படி லகுவாய் உண்டாய் விடுவதில்லை. இது நிபுணர்கள் கண்டு சொல்லிய உண்மை.

"மாதா உடல்சலித்தாள், வல்வினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே."

எண்ணில்லாத மறவிகளுக்கல்லவா ஆளாய் விட்டேன் என்ற சோர்வு பாவம் எப்படி வந்து வீடுகிறது தமிழ் வார்த்தைகள் மூலமாக! இப்படி வருவதில்லை என்று உறுதியாகச் சொல்லலாம் மற்ற பாஷைகளில். "விட்டானே" என்பதிலுள்ள சோர்வு எவ்வளவு அழகாய் இருக்கிறது.

"வேதாவும் கைசலித்து விட்டானே"

என்று சொல்லிக்கொண்டே இருக்கலாம் பாவம் சோர்வுதான். ஆனால் நாவுக்கு, தமிழ் நாவுக்குச் சோர்வு ஏற்படாது, இதுதான் தமிழுக்கு வாய்த்த தனிப்பெருமை, இப்படி ரஸம் பெருகும் தமிழ்க்கவி ஒருபெரிய கடல், அதைப் பருகுவதற்காகப் படைத்திருக்கிறார் இறைவன் நம்மை.

இந்த அரிய உண்மையைத் தமிழ் உலகம் முதலில் அறிய வேண்டும், இடையூறுய் நிற்பவை எல்லாம் மெள்ள அகலவேண்டும், எல்லாம் ஆதீனத்தின் திருவருளால் நிறைவேற வேண்டும் என்பதாகப் பிரார்த்திக்கிறேன்.

டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம்

ஓம் — தென்காசி

சிவமயம் — 13—11—52

ஸ்ரீலஸ்ரீ தர்மபுரம் மகாசந்நிதானம் அவர்களுக்கு அநேக நமஸ்காரம்

திருக்கடவூரில் சந்நிதானத்தின் ஜன்மநக்ஷத்திர விழாக் கொண்டாட்டம் வெகு அழகாய் நடக்கும். அத்தகைய கொண்டாட்டத்துக்கு வாய்ப்பான ஸ்தலம் திருக்கடவூர். கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும் ஒவ்வொரு அம்ஸமும். விழாவை ஒட்டி பன்னிரு திருமுறை மகாநாடும் நடைபெறுகிறது மிக்க சந்தோஷம்.

திருமுறைகளில் ஆங்காங்கு அபூர்வமான மணிகள் கிடக்கின்றன. உலகத்தில் வேறெங்கும் இல்லாத "கோகினூர்கள்" கிடக்கின்றன.

"அண்டம்க டந்தபொருள் அள வில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும்இன் றும்என்றும் உள்ளபொ ருள்என்றே
பல்லாண்டு கூறுதுமே!"

"வில்லாண்ட கன கத்திரள் மேரு
விடங்கன்வி டைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!"

அற்புதமான உண்மைகள்; அற்புதமான பாடல்கள்; வாயை விட்டகலாத பாடல்கள்! இப்படியும் பாடல்கள் தமிழில் இருக்கின்றன என்று நம்மவருக்கு ஞாபகப்படுத்தவேண்டியது அவசியந்தான். அப்படியே செய்யும் மகாநாடு என்று நம்புகிறேன்.

R. P. சேதுப்பிள்ளை அவர்களும் மற்றப் புலவர்களும் வேண்டிய விளக்கம் கொடுப்பார்கள். சந்நிதானத்தின் திருவருளும் இருக்கிறது. சைவம் துலங்க இறைவன் அருள் புரிவானாக.

நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார் — திருக்குற்றாலம், தென்காசி

ஓம்
சிவமயம்

தர்மபுரம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு அனேக நமஸ்காரம்.

"இலவச மருத்துவ நிலையம்" என்ற அழகான புஸ்தகம் கிடைத்தது. படங்கள் குறிப்புகள் எல்லாம் ரஸமாய் இருக்கின்றன. விழா வெகு கோலாகலமாய் நடந்திருக்கிறது.

வாஸ்தவம்; மந்திரிகள் பரம்பரையில் வந்தமாதிரி கனம் குமாரசாமி ராஜா வந்து திறந்து வைத்திருக்கிறார்கள். சந்நிதானத்தின் நாமம் என்றென்றும் நிலைத்திருக்கும் எண்ணற்ற மக்கள் பயன் அடைந்து நன்றி செலுத்திக் கொண்டிருப்பார்கள்.

சந்நிதானத்தின் வாழ்த்துரை அபாரவாய் இருக்கிறது. பல பல ரஸங்களோடு விஷயங்களும் சொல்லும் கும்மாளி போட்டு ஓடுகின்றன. வெகு அருமையானபேச்சு. விழாவில் இருந்து கேட்கக் கொடுத்துவைக்க வில்லையல்லவா என்ற ஏமாற்றம் அதிகம். 'உணவுமரங்களை'' "அரசாங்கம் வேறல்ல ஆதீனம் வேறல்ல" தவப்புதல்வர்கள் பிறப்பார் கள்'' முதலான விஷயங்கள் அழகாக வந்திருக்கின்றன.

பாஸ்கரன் அவர்கள் முந்தாநாள் இங்கு வந்து போனார் கள். அவர்கள் நேரில் கேட்டதாகவும் வெகு ரஸமாய் வாய்ப்பாய் சந்நிதானத்தின் பேச்சு இருந்ததென்றும் சொன் னார்கள். இனிமேல் சந்நிதானத்தைக் "கிணற்றில்" வைத் தும் பூஜை செய்யாமல் மேடையில் வைத்துத்தான் பூஜை செய்ய வேண்டும் என்று எங்களுக்குப் பட்டுவிட்டது. இந்த முறையிலும் தமிழ்நாடு அருள்பெற வேண்டியிருக்கிறது. இறைவன் திருவருள் புரிவாராக.

எனக்கு இப்போது உடம்புகொஞ்சம் தேறி இருக்கிறது. வீட்டுக்குள் சுமாராய் நடமாடிக் கொள்ளுகிறேன்.

இங்கே நல்ல சாரல் மழை குளிர்ச்சியாகவே இருக்கிறது. உடம்பு பயன் அடைந்து வருகிறது.

நமஸ்காரம்,
டி. கே. சிதம்பரநாதன்.

குறிப்பு: வில்லுப் பாட்டு "பார்வதி கல்யாணம்'' ஆவணி மூலத் திருவிழாவை ஒட்டிவைக்கலாம் என்று உத்தரவாயிருந்த தாம். அப்படி ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஆதர வுக்கு நன்றாய் உரியவர் பிச்சைக்குட்டி ஆசிரியர்.

(தொடரும்)

உ

குருபாதம்

பண்ணிசைப் பதிவுத்தட்டுப்

# பாராயணத் திருமுறைப் பாடல்கள்

---

வெளியீடு; தருமபுர ஆதீனம்.

பாடியவர் :

ஆதீன இசைப்புலவர், இசையரசு,

திரு. M. M. தண்டபாணி தேசிகர் அவர்கள்

தயாரிப்பு :

The Gramaphone Company Ltd., Madras.

---

இப்பாடல்களைக் கொண்ட இசைத்தட்டுகள், பத்து அடங்கியது.

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40-10—0. |
| பாக்கிங் செலவு | ரூ. | 2—0—0. |
| போஸ்டுமூலம் அனுப்ப தபாற்செலவு | ரூ. | 4—8—0. |

வேண்டுவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

கிடைக்குமிடம் :—

காஷியர்,

ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம், சீகாழி.

தஞ்சை ஜில்லா.

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

## திருப்புள்ளிருக்குவேளூர் என்னும் வைத்தீசுவரன்கோவில்

## ஸ்ரீ வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தியநாதசுவாமி

# பிர்மோத்ஸவம்.

### சிறப்புநாள் நிகழ்ச்சிகள் விபரம்

| | |
|---|---|
| 10—3—54 | துவஜாரோகணம் |
| 14—3—54 | இடபவாகனக்காட்சி |
| 15, 16--3--54 | 'சுந்தரர்' கதாகாலக்ஷேபம் [பாகவதர் எம்பார் விஜயராகவாசாரியார்] |
| 16—3—54 | திருத்தேர் |
| 19—3—54 | தீர்த்தம் |

குறிப்பு:— உற்சவநாட்களில் ஆதீனச் சைவப்பிரசாரகர்கள், பிற அறிஞர்கள் இவர்களைக்கொண்டு உபந்நியாசங்கள் நடத்தப்பெறும். அதுபற்றிய நிகழ்ச்சிக் குறிப்புக்கள் அவ்வப்போது வெளிவரும். ஆதீனத் தேவாரபாடசாலை மாணவர்களால் திருமுறைப் பாராயணம் நிகழ்த்தப் பெறும்.

Printed & Published by K. Sundaresa Iyer, Agent, Dharmapuram Adhinam at the ... Press, Dharmapuram (Mayuram). 10—3—1954.